பக்கங்கள்: பதினான்கு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 7.00

சுடர்17 வள்ளுவர் ஆண்டு 2033 ஆடி 12 ஞாயிற்றுக்கிழமை (28-07-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:245

## சமாதான முயற்சிகளில் புதிய திருப்பம்

# அமைச்சர் மொறகொட - பாலசிங்கம்

# லண்டனில் சந்தித்து முக்கிய பேச்சு!

## தாய்லாந்துப் பேச்சுக்கள் குறித்தும் நேற்று ஆராய்வு

லண்டன்,ஜூலை28

**இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் சமாதான முயற்சிகளில் ஒரு முக்கிய திருப்பமாக, இலங்கையின் பொருளாதார மறுசீரமைப்பு விஞ்ஞான தொழில் நுட்ப அமைச்சர் மிலிந்த மொறகொட விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கத்தை நேற்று லண்டனில் சந்தித்து முக்கிய பேச்சுக்களை நடத்தியுள்ளார்.**

தாய்லாந்தில் நடைபெறவுள்ள உத்தேச நேரடிப் பேச்சுக்கான தயாரிப்பு வேலைகள், இடைக்கால நிர்வாகசபை, யுத்த நிறுத்தத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பான விடயங்கள் என்பன உட்படப் பல்வேறு விடயங்கள் குறித்து இருவரும் கலந்துரையாடியுள்ளனர்.

கடந்த 19ஆம் திகதி அமெரிக்காவுக்கு விஜயம் செய்த பிரதமர் ரணில விக்கிரமசிங்கவுடன் அங்கு சென்றிருந்த அமைச்சர் மிலிந்த மொறகொட அங்கிருந்து நாடு திரும்பும்வழியில்

(14 ஆம் பக்கம் பார்க்க)



பாலசிங்கத்துக்கு கைலாகு கொடுக்கும் அமைச்சர் மொறகொட.



நோர்வே தூதரகம் முன்பாக திருமதி அடேல், அன்ரன் பாலசிங்கம், அமைச்சர் மிலிந்த மொறகொட, நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விடர் ஹெல்கிசன் ஆகியோர்.

(இனப்பிரச்சினை தீர்வு விடயத்தில்)

## லண்டன் சந்திப்பு முக்கிய முன்நகர்வு

### விடர் ஹெல்கிசன் தெரிவிப்பு

லண்டன்,ஜூலை28

லண்டனில் அமைச்சர் மிலிந்த மொறகொடவுக்கும், விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்திற்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்பு சமாதான முயற்சிகளில் முக்கிய முன்நகர்வு என்று நோர்வே சமாதானக் குழுவின் தலைவரும், பிரதி வெளிவிவகார அமைச்சருமான விடர் ஹெல்கிசன் தெரிவித்தார்.

நேற்றைய சந்திப்பில் பார்வையாளராக பங்கேற்ற அவர் சந்திப்பு முடிவடைந்த பின்னர் மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டுள்ளார்.

இந்தச் சந்திப்பில் இருதரப்பினரும் சமாதான முயற்சிகளில் உறுதியாக இருப்பதை வெளிப்படுத்தியுள்ளது என்றும் - அவர் சொன்னார். (ஏ-3)

## பிரதமர் ரணில் நாடு திரும்பினார்

கொழும்பு,ஜூலை28

அமெரிக்காவில் ஒன்பது நாள் விஜயத்தை மேற்கொண்டிருந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று நாடு திரும்பினார்.

பிரதமர் தனது விஜயத்தின் போது அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷ்,

(14 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதியின் திடீர் நடவடிக்கை

கொழும்பு,ஜூலை28

தனது கட்சிப் பத்திரிகைகள் தவிர்ந்த ஏனைய பத்திரிகைகளை வாசிப்பதில்லை என்று ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இத்தகவலை ஜனாதிபதியின் செயலகம் நேற்று வெளியிட்டது.

கட்சிப் பத்திரிகை தவிர்ந்த ஏனைய பத்திரிகைகளை வீசுமாறு அவர் பணித்துள்ளார் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (ம-3)

## தமிழ்க் கைதிகள் விவரம் கூட்டமைப்பு திரட்டுகிறது

கொழும்பு,ஜூலை28

களுத்துறைச் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள கைதிகள் தொடர்பான விவரங்களை தமிழ் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் குழு நேற்றுச் சேகரித்தது.

தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான என்.ரவிராஜ், அ.விநாயகமூர்த்தி, கஜேந்திரகுமார் ஆகியோர் கொண்ட குழு களுத்துறைச் சிறைச்சாலைக்கு நேற்று விஜயம் செய்தது.

அங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளின் முழு விவரங்களையும் சேகரித்து பட்டியல் ஒன்றை அக்குழு தயாரித்துள்ளது.

கைதிகளின் பெயர், கைது செய்யப்பட்ட காலம், கைதானமைக்கான காரணம் போன்ற விவரங்கள் உள்ளடங்

(14ஆம் பக்கம் பார்க்க)

### முகமாலையில் உயிரிழந்த

## சிப்பாயின் சடலத்தை நீதிமன்றில் ஒப்படைக்குமாறு உத்தரவு!

### சாவகச்சேரி நீதிமன்றம் விடுத்தது

வவுனியா,ஜூலை28

முகமாலைக்கு அருகே கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற சம்பவத்தில் உயிரிழந்த சிப்பாயின் சடலத்தை விசாரணைக்காக சாவகச்சேரி நீதிமன்றத்தில் ஒப்படைக்கும்படி அந்த நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளதாக செய்தி ஏஜென்ஸி ஒன்று தெரிவித்தது.

முகமாலைச் சோதனை நிலையத்துக்கு அப்பால் ஊடுருவிய சிப்பாய் ஒருவர் விடுதலைப் புலிகளின் பெண் உறுப்பினர்களைச் சுட்டுக் காயப்படுத்தியதும் -

விடுதலைப் புலிகள் தற்பாதுகாப்புக்காக மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் பிரஸ்தாப சிப்பாய் உயிரிழந்ததும் - தெரிந்ததே.

(14 ஆம் பக்கம் பார்க்க)

## மாரப்பன மீது நம்பிக்கையில்லா பிரேரணை!

கொழும்பு,ஜூலை 28

பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவுக்கு, எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் போவதாக எதிர்க்கட்சிகள் அறிவித்துள்ளன.

கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் மக்களைப் பாதுகாக்க அவர் தவறிவிட்டார் என்ற குற்றச்சாட்டின் பேரில் இந்தப் பிரேரணை கொண்டுவரப்படவிருப்பதாக எதிர்க்கட்சிகள் அறிவித்துள்ளன. (ம-3)

## காவல்துறையின் பாதுகாப்புடன் தரைப்பாதை ஊடாக கைதிகள்

### தெற்குக்கு நேற்று அழைத்துச் செல்லப்பட்டனர்

யாழ்ப்பாணம்,ஜூலை28

அனுராதபுரம், வவுனியா மேல்நீதிமன்றங்களின் விசாரணைக்காக யாழ்ப்பாணத்தில் இருந்து ஆறு கைதிகள் ஏ9 கண்டி வீதி ஊடாக நேற்று அழைத்துச் செல்லப்பட்டனர்.

யாழ் சிறைச்சாலையில் பயங்கரவாத தடுப்புச்சட்டத்தின் கீழ் தடுத்துவைக்கப்பட்டுள்ள ஒருவர் உட்பட ஆறு கைதிகள் சிறைச்சாலை அதிகாரிகளால வாகனங்களில் அழைத்து செல்லப்பட்டனர். இவர்களில் இருவர் பெண்கைதிகள் ஆவர்.

கைதிகளின் வாகனத்திற்கு முகமாலையில் இருந்து ஓமந்தை வரை தமிழீழ காவல்துறையினர் பாதுகாப்பு வழங்கினர்.

இரு மோட்டார் சைக்கிள்களில் இன்ஸ்பெக்டர் தரத்தில் உள்ள நால்வர் இந்தப் பாதுகாப்பை வழங்கியதாகத் தெரிவிக்கப்பட்டது.

கண்டிவீதி ஊடாக சிறைக்கைதிகளை அழைத்துச் செல்வது பாதுகாப்பு

(14ஆம் பக்கம் பார்க்க)

## 20 ஆயிரம் அகதிகளை பிரிட்டன் திருப்பியனுப்பும்

லண்டன்,ஜூலை28

வேறு நாடுகளில் புகலிடம் கோரி அது நிராகரிக்கப்பட்ட நிலையில் பிரிட்டனில் அரசியல் தஞ்சம் கோரியவர்களில் 20 ஆயிரம் அகதிகள் அவர்கள் எங்கிருந்து வந்தார்களோ அந்த நாட்டுக்கே திருப்பி அனுப்பப்படவிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

அண்மைக்காலத்தில் புலம்பெயர்ந்து பிரிட்டனுக்கு வந்தவர்களின் தஞ்சம் கோரும் விண்ணப்பங்களை அரசு அதிகாரிகள் துரிதமாகப் பரிசீலனை செய்து வருகின்றனர்.

சரியான காரணங்கள் இன்றி சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்கள் உடனடியாக நிராகரிக்கப்படுகின்றன என்றும் - தெரிவிக்கப்பட்டது.

(14 ஆம் பக்கம் பார்க்க)

## ஜெயலலிதாவின் கொடும்பாவி எரிப்பு!

யாழ்ப்பாணம்,ஜூலை28

தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவின் கொடும்பாவி ஒன்று நேற்று நெல்லியடியில் தீ மூட்டி எரிக்கப்பட்டது.

நேற்று முற்பகல் 10 மணியளவில் நெல்லியடி விபொருள் விற்பனை நிலையத்துக்கு முன்பாக ஒன்றுகூடிய பொதுமக்கள் பறைமேளங்கள் முழங்க யாழ்-

(14 ஆம் பக்கம் பார்க்க)

# விளையாட்டு

## பாடசாலைகள் உதைபந்தாட்டம்
# இறுதி ஆட்டம் இன்று

யாழ்ப்பாணம்,ஜூலை28

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் ஏற்பாட்டில் 14 வயதுக்கு உட்பட்ட பாடசாலை அணிகளுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டம் இன்று மாலை 4.30 மணிக்கு துரையப்பா ஸ்ரேடியத்தில் இடம்பெறவுள்ளது.

வடக்கு - கிழக்கில் சகல மாவட்டங்களிலிருந்தும் 16 பாடசாலை அணிகள் இந்தச் சுற்றுப்போட்டியில் பங்குபற்றின.

யாழ்.மாவட்டத்தில் இருந்து பங்குபற்றிய அணிகள் அரைஇறுதியாட்டத்துக்குக் கூட முன்னேறவில்லை.

இன்று காலை 8.30 மணிமுதல் இடம்பெறும் இரு அரையிறுதி ஆட்டங்களில் வெற்றிபெறும் அணிகள் இறுதியாட்டத்தில் மோதவுள்ளன.

துரையப்பா ஸ்ரேடியத்தில் இடம்பெறும். அரை இறுதி ஆட்டத்தில் மன்னார் சென்சேவியர் கல்லூரியும் அம்பாறை மருதமுனை சம்ஸ் மத்திய கல்லூரியும் மோதுகின்றன.

சென்.அன்ரனீஸ் விளையாட்டு மைதானத்தில் நடக்கும் அரை இறுதி ஆட்டத்தில் திருமலை சென்.ஜோசப் கல்லூரியும் மட்டக்களப்பு இக்னேஸியஸ் கல்லூரியும் பங்குபற்றுகின்றன.

இவ்விரு ஆட்டங்களிலும் வெற்றி பெறும் அணிகள் இறுதியாட்டத்தில் மோதும். (ம-3-86)

# 13வயதுக்குட்பட்டோர் கிரிக்கெட் மத்திய கல்லூரி மாணவன் சதம்!

வலி.வடக்கு,ஜூலை28

யாழ்ப்பாணப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம் நடத்திவரும் 13 வயதிற்கு உட்பட்டோருக்கான கிரிக்கெற் சுற்றுப்போட்டியில் முதலாவது சதத்தை (செஞ்சரி) யாழ்மத்திய கல்லூரி மாணவன் ஆர்.வினோத்குமார் பெற்றுள்ளார்.

யாழ்மத்திய கல்லூரிக்கும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் இடையில் கடந்த வாரம் யாழ்ப்பாணக கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற போட்டியில் 48 பந்துகளைச் சந்தித்து 104 ஓட்டங்களை அவர் குவித்தார்.

இதில் 18 பவுண்டரிகளும் உள்ளடக்கம்.

இந்த ஆட்டத்தில் யாழ்.மத்திய கல்லூரி 8 விக்கெட்டுக்களை இழந்து 191 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் தனது முதல் இனிங்ஸ் ஆட்டத்தை நிறுத்திக்கொண்டது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணக் கல்லூரி அணி, சகல விக்கெட்டுக்களையும் இழந்து முதல் இனிங்ஸில் 59 ஓட்டங்களையும், இரண்டாவது இனிங்ஸில் 3 விக்கெட் இழப்பிற்கு 12 ஓட்டங்களையும் பெற்றது. குறிப்பிட்ட நேரம் முடிவடைந்ததால் ஆட்டம் நிறுத்தப்பட்டது. ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்ததாக அறிவிக்கப்பட்டது. (ம-86)

### யாழ்.மாவட்ட வீர, வீராங்கனைகள் வவுனியா பயணம்

யாழ்ப்பாணம்,ஜூலை28

வடக்கு - கிழக்கு மாகாண விளையாட்டு அமைச்சினால் நடத்தப்படும் தடகளப் போட்டிகளில் பங்குகொள்வதற்காக யாழ்மாவட்ட விளையாட்டு வீர வீராங்கனைகள் நேற்றுக்காலை மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் தலைமையில் புறப்பட்டுச் சென்றனர்.

இன்றும் நாளையும் வவுனியா நகர சபை விளையாட்டு மைதானத்தில் இந்தப் போட்டிகள் இடம்பெறவுள்ளன.

யாழ்.மாவட்டத்திலிருந்து 60 வீர, வீராங்கனைகள் இப்போட்டியின் பல்வேறு பிரிவுகளிலும் கலந்துகொள்கின்றனர். இவர்களுடன் பிரதேச செயலகங்களைச் சேர்ந்த விளையாட்டு உத்தியோகத்தர்களும் வவுனியா சென்றுள்ளனர். (ம-86)

### மாகாண சம்பியன்கள்



அண்மையில் நடந்துமுடிந்த வடக்கு - கிழக்கு மாகாணப் பாடசாலைகள் இடையேயான வலைப்பந்தாட்டப் போட்டிகளில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணியின் 17 வயதுக்குட்பட்டோர் (மேலே), 19 வயதுக்குட்பட்டோர் (கீழே) பிரிவுகள் வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தைத் தட்டிச் சென்றுள்ளன.

17 வயதுக்குட்பட்டோர் பிரிவில் பருத்தித்துறை மெதடிஸ்த மகளிர் கல்லூரியை எதிர்த்து விளையாடிய சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணி 24:18 என்ற புள்ளி அடிப்படையில் வென்றது.

19 வயதுக்குட்பட்டோர் பிரிவில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியை எதிர்த்து ஆடிய சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணி 22:20 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்று சம்பியனானது.



போர்நிறுத்த உடன்படிக்கையை படையினர் மதிக்காமல் நடந்துகொள்வதையும், கல்விச் செயற்பாடுகளுக்கு இடையூறு விளைவிக்கப்படுவதையும் கண்டித்து தென்மராட்சிப் பாடசாலை மாணவர்கள் நேற்றுமுன்தினம் நடத்திய கண்டனப் பேரணியில் கலந்துகொண்ட மாணவ, மாணவியரை முதல் மூன்று படங்களிலும் காணலாம். பேரணியின் முடிவில் தென்மராட்சிப் பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசனிடம் மாணவர் பிரதிநிதி மகஜர் கையளிப்பதை கடைசிப் படத்தில் காணலாம். *(படங்கள்:- சாவகச்சேரி செய்தியாளர்)*

### பாகிஸ்தான் அதிபர் கொழும்பு வருகிறார்

கொழும்பு,ஜூலை28

பாகிஸ்தான் அதிபர் பர்வேஷ் முஷாரப் எதிர்வரும் 31 ஆம் திகதி புதன்கிழமை கொழும்புக்கு விஜயம் செய்யவுள்ளார்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ, முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் ஆகியோரை பிரதமர் பர்வேஷ் முஷாரப் சந்தித்துப் பேச்சு நடத்துவார் எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-9)

## 11 வருடங்களின் பின்னர்
# கட்டைக்காடு தேவாலயத்தில் வழிபாடுகள் நாளை ஆரம்பம்

11 வருடகாலத்திற்குப் பின்னர் கட்டைக்காடு புனித கப்பலேந்தி மாதா ஆலயத்தில் வழிபாடுகள் நாளை திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளன.

1991ஆம் ஆண்டு ஜூலை மாதம் 13ஆம் திகதி வெற்றிலைக்கேணி - கட்டைக்காட்டுப் பகுதியில் இடம்பெற்ற படை நடவடிக்கையின்போது இத்தேவாலயம் பலத்த சேதத்துக்கு உள்ளாகியதுடன், மக்களும் அப்பகுதியினைவிட்டு இடம்பெயர்ந்து சென்றார்கள்.

தற்போது மக்கள் அப்பகுதியில் மீளக்குடியமர்ந்துள்ளதை அடுத்து, புதிய இடமொன்றில் 45 அடி நீளமான தேவாலயக் கட்டடம் அமைக்கப்பட்டுள்ளது. கட்டட இடிபாட்டுக்குள் இருந்து மீட்கப்பட்ட புனித கப்பலேந்தி மாதா திருச்சொரூபம் புதிய ஆலயத்தில் வைக்கப்பட்டு அபிஷேகமும் செய்யப்பட்டு பூசைகள் ஆரம்பமாகவுள்ளன.

இவ்வைபவத்தில் யாழ்.வன்னி மாவட்ட குருமார்களும், பொதுமக்களும் கலந்துகொள்ளவுள்ளார்கள். (ஓ-182)

# வடமராட்சி கிழக்குக் கடலில் வலைகள் அபகரிப்பாம்!

வடமராட்சி கிழக்கு,ஜூலை28

வடமராட்சி கிழக்குக் கடலில் மீன்பிடிக்கச் செல்லும் கடற்றொழிலாளரின் வலைகள் கடலில் வைத்து நீர்கொழும்புப் பகுதியிலிருந்து மீன் பிடிக்கவரும் மீனவர்களால் அபகரித்துச் செல்லப்படுவதாகக் கூறப்படுகிறது.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தை அடுத்து தென்பகுதி மீனவர்கள் ரோலர்களில் வடபகுதிக் கடலில் அதிக எண்ணிக்கையில் மீன்பிடிக்க வருகின்றனர்.

வடமராட்சி கிழக்கு மீனவர்கள் மீன்பிடிப்பதற்காக கடலில் கட்டிவிடுகின்ற வலைகளை தென்பகுதியில் இருந்து 'ரோலர்களில்' வரும் அந்த மீனவர்களில் சிலர் அபகரித்துச் செல்வதாகக் கூறப்படுகிறது.

வடமராட்சி கிழக்கில் மீளக்குடியமர்ந்து பெருந்தொகைப் பணத்தில் புதிதாக வாங்கிய வலைகள் இவ்வாறு அபகரித்துச் செல்லப்படுவதனால் தமிழ் மீனவர்கள் பெரும் நஷ்டத்தை எதிர்நோக்க வேண்டியுள்ளதாக கவலை தெரிவிக்கப்படுகின்றது.

நீர்கொழும்புப் பகுதியில் இருந்து வரும் ரோலர்களே இவ்வாறு வலைகளை வெட்டி அபகரித்து செல்வதாக அடையாளம் காணப்பட்டுள்ளது. (ஓ-182)

### எள் செய்கையை ஊக்குவிக்கத் திட்டம்

வலி.தெற்கு,ஜூலை28

யாழ்மாவட்டத்தில் எள்ளுப் பயிர்ச் செய்கையை ஊக்குவிக்க பயிர்ச் செய்கைத் திட்டமொன்று கமநல சேவைத் திணைக்களத்தினால் ஆரம்பிக்கப்படவுள்ளது. (ஓ-152)

### இன்றைய நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஜூலை28

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம் வடமராட்சிக் கழகங்களுக்கிடையில் திக்கமுனை மைதானத்தில் நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று மாலை இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

- மாலை 4 மணி - சிவானந்தா வி.க. எதிர் சென்.அன்ரனீஸ் வி.க.
- மாலை 5 மணி - கலட்டி ஐவி.க. எதிர் பொமேர்ஸ் வி.க.

☆ ☆ ☆

புன்னாலைக்கட்டுவன்,ஜூலை28

புன்னாலைக்கட்டுவன் தெற்கு கணேச முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டுப் போட்டி இன்று முன்பள்ளி முன்றிலில் கணேச சனசமூக நிலையத் தலைவர் நா.திருநாவுக்கரசு தலைமையில் இடம்பெறும்.

மேற்படி நிகழ்வில் விருந்தினர்களாக லீட்ஸ் நிறுவன வதிவிடப் பிரதிநிதி பென குணரத்தினம், ஓய்வுபெற்ற அதிபர் கசோமசுந்தரம், கவிஞர்வாந்து தமிழ் கம்பன் நிலைய இயக்குநர் நா.ரஞ்சன் ஆகியோர் கலந்துகொள்வர்.(எ-133)

☆ ☆ ☆

வலி.வடக்கு,ஜூலை28

யாழ்.மாவட்ட கிரிக்கெட் சங்கத்தினால் நடத்தப்பட்டு வரும் கிரிக்கெற் சுற்றுப்போட்டியில் இன்று காலை 9 மணிக்கு சுந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறும் ஆட்டத்தில் யாழ்.பற்றீசியன்ஸ் வி.கழகமும் ஜொலிஸ்ரார் வி.கழகமும் மோதவுள்ளன. (ஓ-86)

# மீன்பிடி உபகரண விற்பனைக்கு எழுவைதீவில் புதிய நிலையம்

ஊர்காவற்றுறை,ஜூலை28

எழுவைதீவு தோமையார் கடற்றொழில் கூட்டுறவுச் சங்கத்தினால் கடற்றொழில் உபகரணங்கள் விற்பனை நிலையம் ஒன்று அண்மையில் எழுவைதீவில் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

வலைகள், நங்கூரங்கள், ஈயங்கள், கயிறுகள் போன்ற பல்வேறு கடற்றொழில் உபகரணங்கள் இந்த விற்பனை நிலையத்தில் இருந்து அங்கத்தவர்கள் பெற்றுக்கொள்ளமுடியும் என தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை மேற்படி சங்கத்தினால் அங்கத்தவர்களுக்கு குறைந்த வட்டியில் கடன் வழங்கப்பட்டு வருவதாகவும் -

முதன்முதலில் கடன் தொகையைப் பெறுபவர்களுக்கு தலா பத்தாயிரம் ரூபாவும் ஏற்கனவே கடன் பெற்று மீளவும் விண்ணப்பிப்பவர்களுக்கு தலா ஏழாயிரத்து ஐந்நூறு ரூபாய் வீதம் வழங்கப்பட்டு வருவதாகவும் -

மேற்படி சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. (ஓ-16)

# அனலைதீவு வைத்தியசாலைக்கு மருத்துவரை உடன் நியமிக்கவும்

## அப்பகுதி மக்கள் கோரிக்கை

ஊர்காவற்றுறை,ஜூலை28

அனலைதீவு கிராமிய வைத்தியசாலைக்கு விரைவில் மருத்துவர் ஒருவரை நியமிக்குமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இவ்வைத்தியசாலையில் கடமையாற்றிய மருத்துவர் ஒருவர் ஓய்வுபெற்றுச்சென்று பல மாதங்களாகிவிட்டதாகவும் -

அதன் பின்னர் இங்கு வைத்திய வசதி இன்றி நோயாளர் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதாகவும் - தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் இரு நோயாளர்கள் அவசர சிகிச்சைக்காக படகு மூலம் ஊர்காவற்றுறை மாவட்ட வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இதனால், குழந்தைகள் முதல் வயோதிபர்கள் வரை சிகிச்சைக்காக படகுகளில் ஏறி இறங்கி பெரும் துன்பத்தின் மத்தியிலேயே ஊர்காவற்றுறை மாவட்ட வைத்தியசாலைக்கு சென்றுவரவேண்டியுள்ளதாகப் பொது மக்கள் தெரிவித்துள்ளனர். (ஓ-16)

# இந்தியத் துணை ஜனாதிபதி நேற்றுக் காலை காலமானார்!



புதுடில்லி,ஜுலை28

இந்தியத் துணை ஜனாதிபதி கிருஷ்ணகாந்த் நேற்று சனிக்கிழமை காலை மாரடைப்பால் காலமானார். இறக்கும்போது அவருக்கு வயது 75.

மார்பு வலி காரணமாக நேற்று இந்திய நேரப்படி காலை 7.30 மணிக்கு புதுடில்லியிலுள்ள மருத்துவ ஆராய்ச்சிக் கழக மருத்துவமனையில் அவர் அனுமதிக்கப்பட்டார். ஆயினும் சிகிச்சை பலனளிக்காமல் ஒரு மணித்தியாலத்தின் பின்னர் துணை ஜனாதிபதி காலமானார்.

துணை ஜனாதிபதி கிருஷ்ணகாந்தின் மறைவையொட்டி இந்திய அரசு மூன்று நாள்கள் துக்கதினமாக அறிவித்துள்ளது. (ஒ)

# சிறையில் வானொலி பயன்படுத்த அனுமதி கோரி வைகோ வழக்கு



சென்னை,ஜுலை28

'பொடா' சட்டத்தின்கீழ் கைது செய் யப்பட்டு வேலூர் சிறையில் இருக்கும் ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ சிறை அறையில் வானொலியைப் பயன்படுத்த அனுமதிக்கும்படி சென்னை உயர்நீதிமன்றத்தில் கோரிக்கை மனு ஒன்றை தாக்கல் செய்துள்ளார்.

ஒரு வழக்கில் கைது செய்யப்பட்டவர்களுக்கு சிறையில் எழுத, படிக்க, பொழுதுபோக்க உரிமை உள்ளது. பேச்சு உரிமையின்படி தகவல்களை அறிந்து கொள்ளவும் உரிமை உள்ளது.

பூந்தமல்லி கிளைச் சிறையில் உள்ள சிலருக்கு தொலைக்காட்சிப் பெட்டி வைத்துக்கொள்ள அனுமதி கொடுக்கப்பட்டுள்ளது. அதேநேரம் நான் வானொலி வைத்துக்கொள்ள அனுமதி மறுக்கப்படுகிறது.

ஓர் அரசியல் கட்சியின் பொதுச் செயலாளராகவும் மக்களவை உறுப்பினராகவும் உள்ளதால் தினமும் நாட்டுநடப்புகளை அறிந்துகொள்ளவே அனுமதி கோரியுள்ளேன்.

ஆகவே, எனது சொந்தச் செலவில் சிறையில் வானொலி வைத்திருக்க அனுமதியளிக்கும்படி சிறைத்துறைக்கு உத்தரவிடவேண்டும்.

- என்று அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ)

## திருவாவடுதுறை ஆதீனத்தின்

# மடாதிபதியை கொல்லச் சதி இளைய சுவாமிகள் கைதானார்

இந்தியாவின் நாகை மாவட்டத்திலுள்ள திருவாவடுதுறை ஆதீனத்தின் மடாதிபதியை கொலைசெய்ய முயன்றதாக அந்த ஆதீனத்தின் இளைய மடாதிபதி மீது குற்றஞ்சாட்டப்பட்டு வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

இளைய மடாதிபதி காசி விசுவநாதசுவாமிகள், பெரிய மடாதிபதியின் அந்தரங்க உதவியாளர் சரபோஜி, ஆதீன மேலாளர்கள் ஆகியோர் உட்பட மொத்தம் 11 பேர் மீது இந்த வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

இளைய மடாதிபதி நடிகைகள் சிலருடன் அந்தரங்க உறவு வைத்திருந்ததாகவும், வேறு சில தவறான நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகவும் கூறி மடாதிபதி அவரது பதவியை பறித்திருந்தார்.

இதனை அடுத்தே குற்றஞ்சாட்டப்பட்டுள்ள மற்றைய 10 பேருடன் சேர்ந்து, மடாதிபதியைக் கொன்றுவிட்டு தலைமைப் பதவியைக் கைப்பற்ற இளைய மடாதிபதி சதி நடவடிக்கையில் ஈடுபட்டதாக பொலீஸார் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

உலக அரங்கில்

இந்த வழக்கில் கடலூர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட 11 பேரையும் அடுத்தமாதம் 9 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.(ஒ)

# ஏரியில் படகு மூழ்கியதில் கேரளாவில் 30 பேர் பலி!

கோட்டையம்,ஜுலை28

இந்தியாவின் கேரள மாநிலம் வேம்பநாடு ஏரியில் குமரகம் என்ற இடம் அருகே ஏரியில் படகு ஒன்று மூழ்கியதில் அதில் பயணித்த 30 பேர் உயிரிழந்துள்ளனர்.

நேற்று சனிக்கிழமை காலை இநத விபத்து இடம்பெற்றுள்ளது. படகில் அளவுக்கு அதிகமாக பயணிகள் பயணித்ததாலேயே அந்தப் படகு மூழ்கியதாகக் கூறப்படுகிறது.

ஆலப்புழையிலுள்ள முகவிமாவில இருந்து அதிகாலை இந்திய நேரப்படி 5.45 மணிக்கு குமரகத்துக்கு புறப்பட்டுச் சென்ற படகே விபத்துககுள்ளானது.

கோட்டயத்தில் நடைபெறும் அரசுப் பணியாளர்கள் தேர்வில் பங்கேற்பதற்காக சென்ற மாணவர்களே இப் படகில் பெருமளவில் இருந்ததாகக் கூறப்படுகிறது. குமரகம் படகுத் துறையை அடைய 20 நிமிடங்கள் இருந்தபொழுது இந்தப் படகு ஏரியில் கவிழ்ந்தது.

ஏரியில் மூழ்கி இறந்தவர்களின் சடலங்களைத் தேடும் பணி முழு வீச்சில் நடைபெற்று வருகிறது.

# நைஜீரியாவில் பெண்கள் நிர்வாணப் போராட்டம்!

லாகோஸ்,ஜுலை28

ஆபிரிக்க நாடான நைஜீரியாவில் பெண்கள் நிர்வாணப் போராட்டம் ஒன்றை கடந்த 10 நாள்களாக நடத்தி வருகின்றனர்.

அந்நாட்டில் பெற்றோல் கிணறுகள் உள்ள பகுதிகளிலும், பெற்றோல் விநியோக குழாய்கள் பதிக்கப்பட்டுள்ள பகுதிகளிலும் வசிக்கும் மக்களுக்கு பாடசாலைகள், மின்சார வசதி, குடி தண்ணீர் வசதி மற்றும் வேலைவாய்ப்பு ஆகியவை ஏற்படுத்தித்தரப்படவேண்டும் என்று கோரியே அப்பகுதியில் உள்ள பெண்கள் இந்த விநோத போராட்டத்தை நடத்தி வருகின்றனர். உலகில் நைஜீரியா பெற்றோல் உற்பத்தியில் ஆறாவது பெரிய நாடாகும். அங்கு பெற்றோல் கிணறுகளைத் தோண்டும் பணியை அமெரிக்க நிறுவனம் ஒன்றே மேற்கொண்டு வருகின்றது. ஆனால், அந்நாட்டின் 12 கோடி மக்களும் வறுமையில் வாடுகின்றனர்.

இதனாலேயே தமக்கு மேற்படி வசதிகளை ஏற்படுத்தித் தரவேண்டும் என்று நைஜீரியப் பெண்கள் முக்கால் நிர்வாணமாக நின்றபடி பெற்றோல் உற்பத்தி நிலையங்கள் முன்பாக போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். தற்போது அரைக்கால் சட்டை மட்டுமே அணிந்து போராடும் இப்பெண்கள் தமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படாவிட்டால் அடுத்த கட்டமாக முழு நிர்வாணமாக போராட்டம் நடத்தப் போவதாக மிரட்டியுள்ளனர். (ஒ)

# இந்தியத் திரைப்படங்களுக்கான தேசிய விருதுகள் அறிவிப்பு



சோபனா

புதுடில்லி,ஜுலை28

இந்தியாவில் 2001ஆம் ஆண்டுக்கான - 49 ஆவது - தேசிய திரைப்பட விருதுகள் நேற்றுமுன்தினம் அறிவிக்கப்பட்டன.

பழம்பெரும் இயக்குநர் அமரர் பீம் சிங்கின் மகனும், படத்தொகுப்பாளரும், இயக்குநருமான பி.லெனின் சிறந்த இயக்குநருக்கான தேசிய விருதைப் பெறுகிறார்.

சிறந்த நடிகைகளாக தபு மற்றும் ஷோபனாவும், சிறந்த நடிகராக மலையாள நடிகர் முரளியும், சிறந்த இசையமைப்பாளராக ஏ.ஆர். ரகுமானும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

'ஊருக்கு நூறு பேர்' என்ற படம் சிறந்த தமிழ்ப் படமாகத் தெரிவாகியுள்ளது. இப்படத்தை இயக்கியதற்காகவே லெனினுக்கு சிறந்த இயக்குநர் விருது கிடைத்துள்ளது.

தேசிய அளவில் சிறந்த திரைப்படமாக 'லீபா' என்ற கன்னடத் திரைப்படம் தெரிவாகியுள்ளது.



தபு

'நெய்துக்காரன்' என்ற மலையாளப் படத்தில் நடித்த முரளி சிறந்த நடிகராகவும் -

'சாந்தினி பார்' என்ற ஹிந்திப் படத்தில் நடித்த தபுவும் 'மித்ர் மை பிரண்ட்' என்ற ஆங்கிலப் படத்தில் நடித்த ஷோபனாவும் சிறந்த நடிகைகளாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.



ஏ.ஆர்.ரகுமான்

'குட்டி' தமிழ்ப் படத்தில் நடித்த பேபி பி.ஸ்வேதா சிறந்த குழந்தை நட்சத்திரத்துக்கான விருது பெறுகிறார்.

ஒஸ்கார் விருதுக்கு போட்டியிட்ட இந்தியத் திரைப்படமான 'லகான்' சிறந்த பொழுதுபோக்குப் படமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இப்படத்திற்கு இசையமைத்த ஏ.ஆர்.ரகுமான் சிறந்த இசையமைப்பாளர் விருது பெறுகிறார். இப்படம் மொத்தம் ஏழு விருது களைப் பெற்றுள்ளது.

சிறந்த பின்னணிப் பாடகராக 'லகான்' மற்றும் 'தில் சகதா ஹை' ஆகிய படங்களில் பாடிய உதித்நாராயணனும் -

'அழகி' படத்தில் 'பாட்டுச் சொல்லி...' பாடலைப் பாடிய சாதனாசர்கம் சிறந்த பின்னணிப் பாடகியாகவும் -

தெரிவுசெய்யப்பட்டனர்.

'சொன்னால்தான் காதலா', 'காற்றுக் கென்ன வேலி', 'நந்தா', 'அழகி', 'ஆளவந்தான்', 'கன்னத்தில் முத்தமிட்டால்' ஆகியவை உட்பட 19 தமிழ்த் திரைப்படங்கள் தேசிய விருதுக்கான போட்டியில் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (ஒ)

## புலிகளை ஆதரித்தால் தண்டனையா?

# எதையும் சந்திக்கத் தயார் திருமாவளவன் சவால்!

சென்னை,ஜுலை28

ஈழ விடுதலைப் பிரச்சினை பற்றிக் கருத்துக் கூறுவதற்கோ - விமர்சனம் செய்வதற்கோ - தமிழக அரசால் தண்டனைச் சட்டம் ஏவப்படுமானால் அதைச் சந்திக்கத் தயார்.

- இவ்வாறு சவால் விட்டிருக்கிறார் விடுதலைச் சிறுத்தைகள் அணியின் மாநிலப் பொதுச் செயலர் திருமாவளவன்.

சென்னையில் நடைபெற்ற உலகத் தமிழர் பேரவை மாநாட்டில் திருமாவளவன் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகப் பேசியிருக்கிறார். அவரைப் பொடா சட்டத்தின் கீழ் கைது செய்வது பற்றி தமிழக அரசு பரிசீலனை செய்து வருகிறது என்று வெளிவந்த செய்திக்குப் பதிலடி கொடுக்கும் வகையில் திருமாவளவன் மேற்கண்டவாறு கூறியிருக்கிறார்.

அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

உலகத் தமிழர் பேரவை மாநாட்டில் நான் என்ன பேசினேன் விடுதலைப் புலிகளைத் தமிழக அரசு ஆதரிக்கிறதா? இல்லையா? அதன் நிலைப்பாடு என்ன? என்று கேட்டேன். ஈழ விடுதலையை ஆதரிப்பதானால் விடுதலைப் புலிகளை ஆதரிக்காமலோ, பேசாமலோ இருக்க முடியாது.

தமிழகத்தில் 'பொடா' தவறுதலாகப் பயன்படுத்தப்படுவது வேதனைக்கும் கண்டனத்துக்கும் உரியது. இது தமிழகத்தில் அமைதிக்கு குந்தகம் ஏற்படுத்தும் செயல் என்று திருமாவளவன் கூறியிருக்கிறார். (ஒ)

## புஷ்ஷுடன் பிணக்கு கொலின் பவல் ராஜினாமா?

வாஷிங்ரன்,ஜுலை28

அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ்ஷுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் கொலின் பவல் தனது பதவியை ராஜினாமா செய்யவுள்ளதாக



தகவல்கள் பரவியுள்ளன.

ஐ.நா. சார்பில் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டங்களை செயற்படுததும் அமைப்புக்கு சுமார் 300 கோடி ரூபாவை அமெரிக்க அரசு வழங்குவதாக இருந்தது. இதனை நிறுத்திவைக்கும்படி அமெரிக்காவிலுள்ள பிற்போக்காளர்கள் வலியுறுத்தினர். இதைத் தொடர்ந்து அதிபர் புஷ் இந்த நிதி உதவியை நிறுத்தினார்.

இது தொடர்பாகவே அதிபர் புஷ்ஷுடன் அமைச்சர் பவலுக்கு கருத்து வேறுபாடு தோன்றியுள்ளதாகக் கூறப்படுகிறது.

இத்தகவல்களை கொலின்பவல் மறுத்துள்ளார். இந்த நிதி உதவியை வழங்குவதாக அமெரிக்க அரசின் சார்பில் நான்தான் வாக்குறுதி வழங்கினேன். ஆனால், இப்போது அதனை மறுபரிசீலனை செய்ய வேண்டி உள்ளது. இதில் ராஜினாமா என்ற பேச்சுக்கு இடமில்லை என்றார் பவல். (ஒ)



அமெரிக்காவின் பென்சில்வேனியா மாநிலத்தின் சுரங்கத்துக்குள் சிக்கிக் கொண்ட 9 தொழிலாளர்களை மீட்கும் பணியில் மீட்புப் பணியாளர்கள் ஈடுபட்டுக் கொண்டிருப்பதை படத்தில் காணலாம். கடந்த வியாழக்கிழமை இந்த நிலக் கரிச் சுரங்கத்துக்குள் வெள்ளம் பாய்ந்தது. அதனால் வெளியே வரமுடியாது 9 தொழிலாளர்கள் 240 அடி ஆழத்தில் சிக்கியுள்ளனர்.

# சீன நிலக்கரி சுரங்கத்தில் வெடி விபத்து; 18 பேர் பலி!

பெய்ஜிங்,ஜுலை28

தென்மேற்கு சீனாவில் நிலக்கரிச சுரங்கம் ஒன்றில் ஏற்பட்ட வெடிவிபத்தில் சிக்கி 18 தொழிலாளர்கள் இறந்தனர்.

யுபான்சுயி நகரமருகே சட்டவிரோதமாக இயங்கிவந்த டியோஜியாவான் என்ற நிலக்கரி சுரங்கத்தில் இந்த விபத்து ஏற்பட்டது.

விபத்து இடம்பெற்றபோது சுரங்கத்தில் 25 பேர் வேலை செய்துகொண்டிருந்ததாகவும் -

அவர்களில் 7 பேர் காயங்களுடன் மீட்கப்பட்டதாகவும் -

மீதி 18 பேர் உயிரிழந்ததாகவும் - தெரிவிக்கப்பட்டது.

சீனாவில் சட்டவிரோதமாக இயங்கி வரும் நிலக்கரி சுரங்கங்களில் ஏற்படும் விபத்துக்கள் காரணமாக ஆண்டுதோறும் சுமார் பத்தாயிரம் பேர் உயிரிழப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ)

# இரு ஆங்கிலத் திரைப்படங்களால் பிரிட்டிஷ் பெற்றோருக்கு சிரமமாம்

லண்டன்,ஜுலை28

இரண்டு திரைப்படங்களின் வெற்றி பிரிட்டிஷ் பெற்றோர்களின் பழக்க வழக்கங்களை மாற்றிவிட்டதாக கூறப்படுகிறது.

மாயாஜாலக் காட்சிகள் நிறைந்த 'ஹரி பாட்டர்' மற்றும் 'லோர்ட் ஒவ் த ரிங்ஸ்' ஆகிய இரு ஆங்கிலப் படங்களும் உலகம் முழுவதும் வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கின்றன.

இந்த இரு படங்களுமே குழந்தைகளுக்கான கிராமியக் கதைகளை அடிப்படையாகக் கொண்டவை. இந்தப் படங்களால் பெரிதும் கவரப்பட்ட பிரிட்டிஷ் குழந்தைகள் தமது பெற்றோரை அதுபோன்ற கதைகளை கூறும்படி வற்புறுத்துகின்றனராம். இதனால் தமது அன்றாட பணிகளுக்கிடையில் பிரிட்டிஷ் பெற்றோர் கிராமிய பழங்கதைகள் உள்ள கதைப் புத்தகங்களைத் தேடிப்பிடித்து வாசித்து தமது குழந்தைகளுக்கு கதை சொல்ல வேண்டியுள்ளதாம். (ஒ)

# நன்றி நவிலலும்
## அந்தியேட்டிக் கிரியை அழைப்பும்



## திருமதி தங்கலட்சுமி பாலதுரை

நீர்வேலியைப் பிறப்பிடமாகவும், கொழும்பு - வத்தளையை வசிப்பிடமாக்வும் கொண்ட நெல்லியடி மத்திய மகாவித்தியாலய, வத்தளை புனித அன்னம்மா மகளிர் மகாவித்தியாலய ஓய்வுபெற்ற ஆசிரியையான எனது துணைவியார் திருமதி தங்கலட்சுமி பாலதுரை 06.07.2002 அன்று சிவபதமடைந்து 08.07.2002இல் இறுதிக்கிரியைகள் நடைபெற்றபோது கலந்துகொண்ட அனைவருக்கும், அனுதாபச் செய்திகள், மலர்வளையங்கள், சரங்கள், இரங்கல் பிரசுரங்கள், பதாகைகள்மூலம் அனுதாப அஞ்சலிகளைச் சமர்ப்பித்தவர்களுக்கும், இந்நிகழ்வில் கலந்துகொண்ட சகல ஆலய பரிபாலனசபையினருக்கும், அறங்காவலர்களுக்கும், ஆன்மீக, சமூக சேவை மன்றத்தவர்களுக்கும், உதயா அச்சக ஊழியர்களுக்கும் வத்தளை சகல பாடசாலை ஆசிரிய, ஆசிரியை, மாணவர்களுக்கும், நாடாளுமன்ற அமைச்சர்கள், உறுப்பினர்கள், கொழும்பு மாநகர சபை, மாகாண சபை மற்றும் வத்தளை பிரதேச - நகரசபை உறுப்பினர்களுக்கும் பிரம்மகுமாரி ராஜயோக நிலையத்தாருக்கும், அத்துடன் இறுதிக்கிரியைகள் நிறைவு பெற்றபின் தமது அனுதாபங்களை நேரடியாக வந்து பகிர்ந்து கொண்ட ஆலய குருக்கள்மார்களுக்கும் - மற்றும் பிந்திய செய்திகேட்டு வந்து கலந்துகொண்ட அனைவருக்கும் எமது இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

மேலும் அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் எதிர்வரும் 05.08.2002 திங்களன்று அதிகாலை கொழும்பு முகத்துவாரம் சங்கமத்தில் நடைபெற்று அன்று மதியம் எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிரியைகளிலும் மதியபோசனத்திலும் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு வேண்டுகிறோம்.

எம்.பி.பாலதுரை குடும்பத்தார்.

*44,ஹேகித்த வீதி,*
*வத்தளை.* தொலைபேசி: 931340, 930759

(C/23074)

## சம்பந்தன் விருது

இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை நினைவாக வருடா வருடம் வழங்கப்படும் சம்பந்தன் விருது 2001 ஆண்டில் வெளிவந்த மிகச் சிறந்த நூலொன்றிற்கு தற்போது வழங்கப்படவுள்ளது.

இவ்விருதுக்கான தேர்வில் கலந்து கொள்ளவிரும்பும் எழுத்தாளர்கள் தங்களது நூலின் ஒரு பிரதியை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் இணைப்பாளர், 75/10ஏ, பிறவுண் வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு விருது வழங்கும் அமைப்பினர் கேட்டுள்ளனர்.

அனுப்பப்படும் நூல்கள் 2001 ஆண்டில் வெளியிடப்பட்டதாக இருக்க வேண்டும் என்றும் அந்த அமைப்பினர் கேட்டுள்ளனர்.

இந்த விருது வருடாவருடம் இலங்கைத் தமிழ் படைப்பாளிகளால் ஆக்கப்பட்ட பலதுறை சார்ந்த நூல்களில் மிகச்சிறந்த நூலுக்கு வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.(ஓ-8)

## போட்டி முடிவுகள்

அண்மையில் நடைபெற்று முடிந்த யாழ்.கல்வி வலய மட்டத்திலான கணித, விஞ்ஞான வினா விடைப் போட்டியின் முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

மூன்று பிரிவுகளாக இடம்பெற்ற போட்டிகளில் மூன்று பிரிவுகளிலும் முதல் மூன்று இடங்களையும் பெற்ற மாணவர்களின் பெயர், விவரங்கள் வருமாறு:

**பிரிவு I**

முதலாமிடம் - சு.விஜயா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), இரண்டாம்மிடம் - தே.லக்ஷன் (கொக்குவில் இந்துக்கல்லூரி), மூன்றாம் இடம் - த.சஞ்சயன் (யாழ்.இந்துக் கல்லூரி).

**பிரிவு II**

முதலாமிடம் - மு.உமாநந்தினி (வேம்படி மகளிர் கல்லூரி), இரண்டாமிடம் - ஸ்ரீ.ஸ்ரீசோமஸ்ரீஜெயன் (கொககுவில் இந்துக் கல்லூரி), மூன்றாம் இடம் - பொ.சிவபாலன் (யாழ்.இந்துக் கல்லூரி)

**பிரிவு III**

முதலாமிடம் - அ.நிஷாந்தன் (யாழ்.இந்துக் கல்லூரி), இரண்டாமிடம் - வி.கோகுலன் (யாழ்.இந்துக் கல்லூரி), மூன்றாமிடம் - ந.காந்தீபன் (யாழ்.மத்திய கல்லூரி). (ம-10)

## பாலர் பாடசாலை ஆண்டுவிழா

யாழ்ப்பாணம், ஜுலை28


நல்லூர் பாலர் பகல் விடுதி, கலைமகள் பாலர் பாடசாலையின் 28ஆம் ஆண்டு நிறைவு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பாடசாலையின் பொறுப்பாசிரியர் திருமதி நா.சுந்தரலிங்கம் தலைமையில் நல்லூர் திவ்விய ஜீவன சங்க மண்டபத்தில் காலை 9மணிக்கு நடைபெறும்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கோப்பாய் ஆசிரிய பயிற்சி கலாசாலை விரிவுரையாளர் மலர் சின்னையாவும் சிறப்பு விருந்தினராக சட்டத்தரணி சிறீகாந்த்தினம் கலந்துகொள்ள உள்ளனர்.

இவ்விழாவில் மழலைகளின் கலை நிகழ்வுகளும் இடம்பெறும். (ஓ-180)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும்
## வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மலர்வு 1922 - 03 - 29



உதிர்வு 2002 - 06 - 28

## அமரா மாணிக்கம் கந்தசுவாமி (மணியண்ணை)

எம்மை அன்போடு பெற்று, வளர்த்து, ஆளாக்கிய எமது அன்புத் தெய்வம் சிவபதமடைந்த வேளையில் ஓடி வந்து உதவியவர்கள், இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டவர்கள், சகல வழிகளிலும் எமக்கு உதவிகள் புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள், தொலைபேசிமூலம் அனுதாபம் தெரிவித்த அன்பு உள்ளங்கள் ஆகியோருக்கு எமது இதயம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் இல்லத்தில் இன்று (28.07.2002) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*17/18, பண்டாரக்குளம் மேற்கு,*
*நல்லூர் வடக்கு,*
*யாழ்ப்பாணம்.*

பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(6429)



## உதயன்

# தன் இனத்திற்குத் தானே குழிபறிக்கும் முயற்சி!

ஈழத்தமிழர்கள் தங்களுடைய ஆயுதப் போராட்டத்தைக் கைவிட்டு, அமைதிமுறையில் - சமாதான வழியில் - பேச்சுமூலம் - இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முன்வரவேண்டும் என்ற சர்வதேச அழுத்தம் நிலவிவருவது உண்மையே.

என்றாலும், சிங்களப் பெரும்பான்மையினர் ஒன்றிணைந்து, ஈழத்தமிழர்களுக்கு வாய்ப்பான - நீதியான - நியாயமான - தீர்வு ஒன்றை முன்வைக்கமாட்டார்கள் என்பதும் சர்வதேச உலகுக்குத் தெரிந்த விடயம்தான்.

இதனால்தான், ஈழத்தமிழர்களை அவர்களது ஆயுதப்போராட்டத்தை முற்றாகக் கைவிடும்படியோ சிங்களப் பேரினவாதம் தருகின்ற சலுகைகளை மட்டும் ஏற்றுக்கொள்ளுங்கள் என்றோ சர்வதேச சமூகம் வற்புறுத்தவில்லை.

ஈழத்தமிழர்களின் ஆயுத வழியிலான விடுதலைப் போராட்டத்திற்கு பலம் சேர்க்கும் - அதனை நியாயப்படுத்தும் - முக்கிய காரணிகளுள் ஒன்று, சிங்களப் பெரும்பான்மையினம் ஐக்கியப்பட்டு ஈழத்தமிழர்களுக்கு நியாயமான உரிமைகளை வழங்கும் ஒரு தீர்வுத்திட்டத்தை முன்வைக்கமாட்டாது என்பதுதான்.

அந்தக் கருத்தை மீண்டும் சர்வதேச சமூகத்துக்கு உறுதிப்படுத்தும் வகையில் நடந்துகொண்டிருக்கிறார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

அமைதியும், இயல்புவாழ்க்கையும் நிலவுகின்ற நல்லெண்ணப் புறச்சூழ்நிலையில் இருதரப்புகளுக்கும் இடையில் இனப்பிரச்சினைக்கான சமாதானத் தீர்வுக்குரிய பேச்சு நடத்தப்படவேண்டும் என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் விடுத்த அழைப்பை ஏற்றுச் செயற்பட இலங்கையின் பிரதமர் ரணில் முன்வந்தார்.

அதன்பயனாக யுத்தநிறுத்தம் செய்யப்பட்டது; புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. இயல்பு வாழ்க்கையையும் நல்லெண்ணப் புறச்சூழலை ஏற்படுத்தும் நடவடிக்கைகள் - துரித கதியில் இல்லாவிட்டாலும் - மந்தமாகவேனும் - இடம்பெற்று வருகின்றன.

சுருங்கக்கூறினால் சமாதான முயற்சிகளுக்கான சக்கரம் மெல்லமெல்லச் சுழன்று, முன்னகரத் தொடங்கியுள்ளது.

தனது சமாதான முயற்சிகளில் பிரதமர் ரணில் நேர்மைத் தன்மையுடனும், நியாயபூர்வமாகவும் நடந்துகொள்கின்றாரோ இல்லையோ, அவரது முயற்சி மட்டும் அமெரிக்க ஜனாதிபதியால், "துணிச்சலான - திறமையான நடவடிக்கைகள்" என்று பாராட்டப்பட்டிருக்கின்றன.

இந்த வகையில், முன்னகரத்தொடங்கியுள்ள சமாதான நடவடிக்கைகளுக்கு - ஈழத்தமிழருக்கு நியாயமான உரிமைகளை வழங்க மறுக்கும் சிங்களப் பேரினவாதத்தின் பாரம்பரியப் பண்பின்படி - வேட்டு வைக்க ஆயத்தமாகிவிட்டார் மற்றைய பெரும்பான்மைக் கட்சியைச் சேர்ந்தவரான ஜனாதிபதி குமாரதுங்க.

அரசுக்கும் புலிகளுக்கும் இடையிலான நேரடி உயர்மட்ட அரசியல் பேச்சுக்கள் இன்னும் ஆரம்பமாகவில்லைத்தான். ஆனாலும், அரசு - புலிகள் இரண்டு தரப்பிலும் பிராந்திய ரீதியில் அதிகாரிகள் - அரசியல்வாதிகள் மட்டத்தில் பேச்சுக்கள், தொடர்புகள், கருத்துப் பரிமாற்றங்கள் இடம்பெற்றுக்கொண்டுதான் இருக்கின்றன.

நேரடிப்பேச்சுக்கான நல்ல புறச்சூழ்நிலையை ஏற்படுத்தும் முயற்சிகள் இடம்பெற்றுவரும் இச்சமயத்தில் பேச்சுக்கள் ஒருநாள்கூடத் தாமதியாது ஆரம்பிக்கப்படவேண்டும் என உத்தரவிட்டு, வற்புறுத்தி இந்தச் சமாதானச் சூழ்நிலையை குழப்ப முயல்கின்றார் ஜனாதிபதி.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் சுமார் ஒரு தசாப்த காலமாக 'ஈழம் பொலீஸ்', 'ஈழம் நீதிமன்றம்', 'ஈழம் சட்டக்கல்லூரி', 'ஈழம் இராணுவம்' எல்லாம் இயங்கிவருகின்றன. 1994 முதல் 2001 வரை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் அரசு ஆட்சியில் இருந்தபோதும் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இந்தக் கட்டமைப்புக்கள் நிறுவன ரீதியில் கொடிகட்டித்தான் பறந்தன.

இப்போது இவை தொடர்பாக வெளியான ஓரிரு விளம்பரங்களை வைத்துக்கொண்டு, இவை புதிய விடயங்கள் என்று ஜே.வி.பி. காட்டுக் கூச்சலிட, அந்த விடயங்களைத் தானும் தூக்கித் தலையில் வைத்துக்கொண்டு, சமாதான முயற்சிகளுக்கு முட்டுக்கட்டை போடுவதற்கு வளமான ஆயுதங்களாக அவற்றைக் கையாள முயல்கின்றார் ஜனாதிபதி குமாரதுங்க.

புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் அவர்களின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட - தனியான அரசுக்குரிய - நிர்வாக இயந்திரம் ஒன்று - அரச செயற்பாட்டு நடைமுறை ஒன்று இயங்கிக்கொண்டிருக்கின்றது என்பதை ஏற்றுக்கொண்டுதான் பிரதமர் ரணில் தலைமையிலான இலங்கை அரசு புலிகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளது.

அது தெரியாதது போல - புது விடயம் மாதிரிக் காட்டி - சமாதான முயற்சிகளை ஜனாதிபதி சந்திரிகா குழப்ப முயல்வதால் ஏற்படும் விளைவு அவருக்கும் அவரது பெரும்பான்மைச் சிங்கள இனத்துக்கும் பெரும் பாதிப்பில் கொண்டுபோய் விடும் என்பதை அவர் உணர்ந்துகொள்வது நல்லது.

# தமிழ்க் கைதிகளுக்கு இப்போது பொதுமன்னிப்பு வழங்கமுடியாது!

## பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு,ஜூலை28

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின்கீழ் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களுக்கு பொதுமன்னிப்பு வழங்கி, விடுதலை செய்யமுடியாது. நிரந்தர சமாதானம் ஏற்பட்ட பின்னரே அது குறித்து ஆராயலாம்.

- பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன மேற்கண்டவாறு தம்மைச் சந்தித்த தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் தெரிவித்துள்ளார்.

சிறைகளில் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதிகளின் விடுதலை தொடர்பாக ஆராய்வதற்காக பாதுகாப்பு அமைச்சரை தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் கடந்த வியாழக்கிழமை சந்தித்தனர்.

இந்தச் சந்திப்பில் சட்டமா அதிபர் கே.ஸி.கமலசபேசன், அமைச்சர் பெ.சந்திரசேகரம், தமிழ்க்கைதிகள் சம்பந்தப்பட்ட வழக்குகளைக் கையாளும் சட்டத்தரணி என்.ஸ்ரீகாந்தா ஆகியோர் கலந்துகொண்டனர்.

சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்களில் முந்நூறுக்கும் மேற்பட்டவர்கள் இதுவரை விடுதலை செய்யப்பட்டுள்ளனர் என்றும் -

கடும் குற்றங்கள் காரணமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள எஞ்சிய கைதிகளை விடுதலை செய்வது உடனடியாக சாத்தியம் இல்லை என்றும் -

பாதுகாப்பு அமைச்சர் இந்தச் சந்திப்பின்போது தெரிவித்ததாகக் கூறப்படுகிறது.

விசேட ஏற்பாடுகளின் பேரில் இவர்களுக்குப் பொதுமன்னிப்பு வழங்கி விடுதலை செய்ய ஏற்பாடு செய்யவேண்டும் என்று நாடாளுமன்றத் தமிழ் உறுப்பினர் வலியுறுத்தியதற்கே அமைச்சர் இவ்வாறு பதிலளித்துள்ளார்.

சமாதான சூழ்நிலை ஏற்படாமல் பொது மன்னிப்பு வழங்க முடியாது என்றும் பதில் அளிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேசமயம், சிறைச்சாலைகளில் உள்ள தமிழ்க் கைதிகளைத் தனித்தனியாகச் சந்தித்து அவர்கள் தொடர்பான விவரங்களைத் திரட்டி நடவடிக்கை மேற்கொள்ள நால்வர் கொண்ட குழு நியமிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்களான என்.ரவிராஜ், அ.விநாயகமூர்த்தி, ஜி.ஜி.கஜேந்திரகுமார், சட்டத்தரணி என்.ஸ்ரீகாந்தா ஆகியோர் அக்குழுவில் இடம்பெறுகின்றனர். (ஒ-3)

## மணல்திட்டுப் பகுதியின்
# வீடமைப்புத்திட்டம் குறித்து பல்வேறு முறைப்பாடுகள்!

வலி.வடக்கு,ஜூலை28

யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட நாவாந்துறை மணல்திட்டுப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட புதிய வீடமைப்புத் திட்டம் சம்பந்தமாக தேசிய வீடமைப்பு அதிகார சபை, யாழ்.அரசாங்க அதிபர், யாழ்.பிரதேச செயலர் மற்றும் பொது அமைப்பினர் ஆகியோருக்கு பாதிக்கப்பட்டவர்களினால் பல முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

கடந்த ஆண்டு இப்பகுதியில் புதிய வீடமைப்புத் திட்டம் ஒன்று செயற்படுத்தப்பட்டது. ஆனால், இப்பகுதியில் ஏற்கனவே வீடுகள் காணப்பட்டதாகவும் - ஆனாலும்கூட அப்போது இருந்த ஒரு கிராம அலுவலரின் செயற்பாட்டின் பெயரில் அந்த வீடுகள் உடைக்கப்பட்டு புதிய வீடமைப்புத் திட்டம் உருவாக்கப்பட்டதாகவும் - கூறப்படுகிறது.

ஏற்கனவே இருந்த வீடுகள் உடைக்கப்பட்டபோது அவ்வீட்டின் உரிமையாளர்களில் சிலர் வன்னியில் இடம்பெயர்ந்து வசித்துவந்தார்கள்.

ஆனால், பிழையான தகவல்களை முன்வைத்து வீடுகள் உடைக்கப்பட்டு புதிய திட்டம் அமுல்படுத்தப்பட்டதாகவும் - ஒரு குறிப்பிட்ட கட்சியின் ஆதரவாளர்களுக்கு மட்டுமே சம்பந்தப்பட்ட கிராம அலுவலரின் சிபாரிசின் பேரில் வீடுகள் வழங்கப்பட்டதாகவும் - கூறப்படுகிறது.

இந்நிலையில் இடம்பெயர்ந்து வன்னியில் தங்கிவிட்டு அண்மையில் தமது சொந்த வீடுகளுக்குத் திரும்பியவர்களுக்கு, தமது வீடுகள் உடைக்கப்பட்டு புதிய வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு வேறு ஆள்கள் அங்கு குடியிருப்பதையே காண முடிந்ததாம். இது தொடர்பாகவே முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டுள்ளன. (ஒ-86)

# ஆசிரிய நியமனங்களால் அலுவலகங்களில் வெற்றிடம்

வலிகாமம் தெற்கு,ஜூலை28

பட்டதாரி ஆசிரிய நியமனம் அண்மையில் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து அரச நிறுவனங்கள் பலவற்றில் ஆளணிப் பற்றாக்குறைகள் ஏற்பட்டுள்ளன.

பல்வேறு அரச நிறுவனங்களில் பொது எழுதுவினைஞர் சேவை மற்றும் பணிகளில் ஏற்கனவே வேலைபார்த்து வந்த பட்டதாரிகளில் பலர் பட்டதாரி ஆசிரியர்களாக நியமனம் பெற்றதைத் தொடர்ந்து அவர்கள் தமது பழைய வேலைகளை விட்டு விலகியதால் ஆளணிப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

வலிகாமம் கல்வி வலயத்தில் ஏற்கனவே ஆறு வெற்றிடங்கள் நிரப்பப்படாத நிலையில், மேலும் நான்கு பட்டதாரிகள் ஆசிரியர்களாக நியமனம் பெற்றதைத் தொடர்ந்து பத்து வெற்றிடங்கள் எழுதுவினைஞர் பணிக்கு ஏற்பட்டுள்ளது. (ஒ-152)

## ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை முடிவு
# பாடசாலை பரீட்சார்த்திகளுக்கு தனித்தனியாகப் பெறுபேறுகள்

கடந்த ஏப்ரலில் நடைபெற்ற ஜி.சீ.ஈ. உயர்தரப்பரீட்சையின் பெறுபேறுகள் எதிர்வரும் 3ஆம் திகதி வெளியிடப்படும் என்று பரீட்சைத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தமுறை தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கு வழங்குவது போன்று பாடசாலைப் பரீட்சார்த்திகளின் பெறுபேறுகளும் ஒவ்வொரு பரீட்சார்த்திக்கும் தனித்தனியாக வழங்கப்பட இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாடசாலைப் பரீட்சார்த்திகளின் பெறுபேறுகள் ஒரேபட்டியலாக அதிபர்களிடம் வழங்கப்படுவதே வழக்கமாகும். இந்தத் தடவைமுதல் ஒவ்வொரு பரீட்சார்த்திக்கும் தனித்தனியான பெறுபேற்றுச் சான்றிதழ் வழங்கப்படவிருப்பதாக பரீட்சைத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-3)

### நாளை

ஆடி 13
திங்கட்கிழமை
(29.07.2002)
திதி : பஞ்சமி
முன்னிரவு 9.35 வரை.
நட்சத்திரம்:உத்தரட்டாதி
முழுவதும்
சுபநேரம் : 12.03 - 1.33
ராகுகாலம் : 7.33 - 9.03
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

மற்றவர்களை மதிப்பது என்பது அவர்களுக்கு அடிமையாவது என்பதல்ல.

# சலுகை அடிப்படையில் சைக்கிள்

யாழ்ப்பாணம்,ஜூலை28

'ஹீரோ' சைக்கிள் நிறுவனத்தின் மாணவர் உதவித்திட்டத்தின் கீழ் வறுமைக்கோட்டுக்குக்கீழ் உள்ள மாணவர்களுக்கு சலுகை அடிப்படையில சைக்கிள்கள் விநியோகிக்கப்படவுள்ளன என்று 'ஹீரோ' சைக்கிள் நிறுவனம் அறிவித்துள்ளது.

வறுமைக்கோட்டுக்கு கீழ் உள்ளவர் என்பதை உறுதிப்படுத்தும் அதிபரின் அத்தாட்சி கடிதத்துடன் - எதிர்வரும் 3 ஆம் திகதி முதல் 5ஆம் திகதிவரை யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ள வர்த்தகக் கண்காட்சியில் அமையும் 'ஹீரோ' சைக்கிள் நிறுவனக் காட்சியகத்திற்கு நேரில் சமுகம் அளித்து இந்தச் சலுகையை மாணவர்கள் பெற்றுக்கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-எ-3)

# பிரதேச செயலர் பிரிவுகளில் தொழில்சார் செயற்றிட்டம்

யாழ்ப்பாணம்,ஜூலை28

யாழ்.மாவட்டத்தில் பிரதேச செயலர் பிரிவு ரீதியாக உற்பத்தி சார்ந்த தொழில் செயற்றிட்டங்களை அபிவிருத்தித் தொண்டர்கள் மூலம் நடைமுறைப்படுத்த புனர்வாழ்வு, அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவுக்கும் இரண்டு லட்சம் ரூபா வீதம் ஒதுக்கப்படும் நிதியைக் கொண்டு இந்தத் திட்டம் அடுத்தமாதம்முதல் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் -

பளை, சாவகச்சேரி, கோப்பாய், உடுவில், சங்கானை, ஊர்காவற்றுறை, வேலணை, பருத்தித்துறை ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் பனம்பொருள் கைப்பணியும் -

கரவெட்டி, சண்டிலிப்பாய், யாழ்ப்பாணம்,நெடுந்தீவு ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் மரவேலையும் -

தெல்லிப்பழை, நல்லூர் பிரதேச செயலர் பிரிவுகளில் புத்தகம் கட்டலும் தொழில்சார் செயற்றிட்டங்களாக நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

புனர்வாழ்வு, அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சு இத்திட்டத்திற்கான நிதியினை பிரதேச செயலகங்களுக்கு வழங்கவுள்ளது.

ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவில் தெரிவுசெய்யப்பட்ட 10 அபிவிருத்தித் தொண்டர்களும் தத்தமது தொழில்சார் வேலைகளுக்கான தொழில்வள உற்பத்திப் பொருள்களை இந்த நிதிமூலம் பெற்று அந்தந்த பிரதேச செயலர் பிரிவில் வேலை வாய்ப்பினையும், தொழில்சார் உற்பத்திகளையும் அதிகரிப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். (ஒ-180)

# வன்னியில் கண்ணி அகற்றும் குழுவினருக்கு நவீன பயிற்சி

## நோர்வே நிபுணர்கள் வழங்குகின்றனர்

கிளிநொச்சி,ஜூலை28

வன்னியில் கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ள தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவினருக்கு நவீன பயிற்சிகளை நோர்வே நாட்டு நிபுணர்கள் வழங்கிவருகின்றனர்.

'நோர்வேஜியன் பீப்பிள்ஸ் எய்ட்' என்ற நிறுவனத்தைச் சேர்ந்த லூக் கன்பா என்பவரும் பிரிட்டிஷ் கண்ணி வெடிகள் ஆலோசனைக் குழுவைச் சேர்ந்த டேவிட் என்பவரும் இந்தப் பயிற்சிகளை வழங்கிவருகின்றனர்.

சர்வதேசத் தரத்துக்கு ஏற்ப கண்ணிகளை அகற்றும் பணிகளை மேற்கொள்வது தொடர்பாகவே இந்தப் பயிற்சி வழங்கப்பட்டு வருகின்றது.

சுமார் 20பேர் இந்தப் பயிற்சிகளில் பங்குபற்றுகின்றனர்.

பயிற்சி பெற்றவர்களுக்கு கண்ணிகளை அகற்றுவதற்கான நவீன கருவிகளை இந்த நிபுணர்கள் வழங்கவிருக்கின்றனர். இந்தப் பயிற்சிகள் இரு வாரங்கள் இடம்பெறவிருக்கின்றன. (ஐ-3)

# மயானங்கள் மக்கள் பாவனைக்கு!

தென்மராட்சி,ஜூலை28

சரசாலை - பருத்தித்துறை வீதியில் இருந்த இரண்டு மயானங்கள் மீண்டும் பொதுமக்களின் பாவனைக்கு விடப்பட்டுள்ளன.

இந்த மயான வெளிகளில் தங்கியிருந்த படையினர் அவ்விடங்களில் அமைக்கப்பட்டிருந்த காவலரண்களை அகற்றித் துப்புரவு செய்தபின்னர் வெளியேறியதையடுத்தே பொதுமக்கள் இம்மயானங்களை பயன்படுத்தக்கூடியதாக உள்ளது.

கடந்த 1996 ஆம் ஆண்டு தொடக்கம் படையினர் இந்த மயானப் பகுதிகளில் தங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.(ஒ-117)

# விழிப்புணர்வுப் போட்டிகள்

சரிதாஸ் - கியூடெக் சமாதானக் குழு சமாதான விழிப்புணர்வு தொடர்பான பேச்சுப்போட்டி மற்றும் கட்டுரைப்போட்டிகளை பாடசாலை மாணவர்களிடையே நடத்தவுள்ளது.

கட்டுரைப்போட்டி 'சுபீட்சமான வாழ்வுக்கு இனப் புரிந்துணர்வும் சமாதான விழிப்புணர்வும் அவசியம்' எனும் தலைப்பிலும் பேச்சுப்போட்டி 'அவலங்கள் அழிய அவசியம் சமாதானம்' எனும் தொனிப் பொருளிலும் இடம்பெற உள்ளதாகவும்

போட்டியாளர்கள் யாழ்மனித முன்னேற்ற நடுநிலையத்துடன் தொடர்பு கொண்டு தமது ஆக்கங்களைச் சேர்ப்பிக்கலாம் எனவும் கியூடெக் சமாதானக் குழுவினர் தெரிவித்துள்ளனர். (ஓ-ரி)


# நன்றியுடையோம்



அமரர்

## விஜயரத்தினம் விமலநாதன்

யாழ்.தெல்லிப்பழை ஆனைக்குட்டி வளவைப் பிறப்பிடமாகக் கொண்டு பன்னாலை என்னும் கிராமத்தை வாழ்விடமாக அமைத்த விஜயரத்தினம் விமலநாதன் கடந்த 2002.06.25ஆம் திகதி இறைவன் திருவடி நிழலை அடைந்துள்ளார்கள்.

அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்து அவர் ஆத்ம சாந்திக்காக வேண்டியவர்களுக்கும் இறுக்கிரியைகள் செவ்வனே நடைபெற உதவியவர்களுக்கும், மலர்வளையம், மலர்மாலை முதலியவற்றைச் சமர்ப்பித்துக் கௌரவித்தோருக்கும், கடிதம், தொலைபேசி, தந்தி என்பனவற்றின் மூலம் அஞ்சலி செலுத்தியோர்க்கும் மற்றும் பல்வேறு வழிகளில் உதவிய உற்றார், உறவினர், அயலவர், நண்பர்கள் என்போருக்கும் எம் நன்றி உரியது.

அத்துடன் இன்று (28.07.2002) ஞாயிற்றுக்கிழமை பாம்பலப்பிட்டி புதிய கதிரேசன் விருந்து மண்டபத்தில் காலை 9.00மணி முதல் நடைபெறும் ஆத்ம சாந்திக்கிரியைகளில் கலந்து அமரரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தனை செய்யுமாறு வேண்டுகின்றோம்.

மனைவி, பிள்ளைகள்,
மருமகன்.

(C/23085)



# உலகை வலம் வருவதற்கு ஒரு வாய்ப்பைப் பெறுங்கள்!



- கவர்ச்சியான ஒரு சம்பளத்தை பெறுவதற்கும்
- வெளிநாட்டு வேலை வாய்ப்பை பெறுவதற்கும்
- மேலும் கற்பதன் மூலம் ஒரு கடற்துறை பொறியியலாளராக ஆகவும் உங்களால் முடியும்.

## மோட்டர்மான்
(33/34 உள்வாங்கல்)

பயிற்சி 03.09.2002இல் ஆரம்பமாகின்றது

The course will be conducted in English medium

20 ஓகஸ்ட் 2002 மு.ப. 11.00 மணிக்கு நடைபெறவுள்ள இலவச கருத்தரங்கில் நீங்கள் பங்குபற்றலாம்.

527686

கொழும்பு சர்வதேச நேவிகல் அன்ட் என்ஜினியரிங் கல்லூரி.

தொலைபேசி: 00+94(01)-527686
தொலைநகல்: 00+94(01)-521749
மின்னஞ்சல்: cooray@cinec.edu
இணையம்: www.cinec.edu

CINEC என்பது I.S.O. 9001 தரச் சான்றிதழ் பெற்ற கடற்துறைக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனமாகும்.



# எதிர்பாருங்கள் மீண்டும் யாழ்.மண்ணில்

## தந்தை S.J.பெர்க்மான்ஸ் அவர்கள்

## சமாதானத்தின் குரல்

மாபெரும் இன்னிசை நற்செய்தி பெருவிழா

## துரையப்பா விளையாட்டரங்கு, யாழ்ப்பாணம்.

எங்கே?

எதிர்வரும் ஜூலை 30ஆம் திகதி செவ்வாய் முதல்

ஓகஸ்ட் 04ஆம் திகதி ஞாயிறு வரை

தினமும் மாலை 4 மணிக்கு.

எப்போ?

அனுமதி இலவசம்



இயேசுக்கிறிஸ்துவினால் உங்களுக்கு சமாதானமும், சந்தோசமும், விடுதலையும் கொண்டுவரும் நிகழ்வுக்கு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்! இன்றே ஆயத்தமாகுங்கள்!!

### விசுவாசிகளுக்கோர் அறிவிப்பு

வீரசிங்கம் மண்டபத்தில் முதலாம்திகதி
வியாழன்முதல் 3ஆம் திகதிவரை
காலை 10 மணிக்கு
வேதப்படிப்பு நடைபெறும்.

கூட்ட முடிவில்
துரையப்பா விளையாட்டரங்கிலிருந்து பஸ் வசதிகள்
ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

தொடர்பு:
மனதுருக்கம் இலங்கை.
021-3286

(6064)

# புலிகளை யுத்தத்தில் தோற்கடித்து அதன்பின்னரே பேச்சு நடத்தவேண்டும்!

## திலீபன் - பாலசிங்கம் உரையாடலை ஒட்டுக்கேட்டோம் என்கிறார் டக்ளஸ்

**தற்போது நாட்டில் சமாதானத்தை உருவாக்கப் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதுவரைகாலமும் கீரியும் பாம்பும் போல் செயற்பட்ட ஸ்ரீலங்கா அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் புரிந்துணர்வு உடன்பாடு, யுத்தநிறுத்த உடன்பாடு என கைச்சாத்தாகி உள்ளன. அரசதரப்பிலும் விடுதலைப் புலிகள் தரப்பிலும் மக்கள் மத்தியிலும் யுத்தம் என்பது நாளுக்கு நாள் மறக்கப்பட்ட ஒன்றாகி வருகிறது. ஆனால், இன்றுள்ள பிரச்சினைக்கு யுத்த ரீதியாக விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட வேண்டும் - அதன்பின்னரே பேச்சுகளை மேற்கொள்ளவேண்டும் என்கிறார் ஈ.பி.டி.பி. அமைப்பின் தலைவர் டக்ளஸ் தேவானந்தா. 'திவயின' வாரஇதழுக்கு அவர் அளித்த பேட்டியின் தமிழாக்கத்தை இங்கு தருகின்றோம்.**

*கேள்வி:* சில நாள்களின் முன்னர் கிழக்கு மாகாணத்தில் விடுதலைப் புலிகளுக்கும் முஸ்லிம் மக்களுக்கும் இடையே மோதலொன்று இடம்பெற்றதே?

*பதில்:* இதுபோன்ற நிலைமை திடீரென ஏற்பட்டதாகக் கூற இயலாது. விட்டு விட்டு இவ்வாறு முளைக்கும். ஆனால், நடந்தது என்னவெனில் இந்த மோதல்களை அங்குள்ள அரசியல்வாதிகள் தங்களது விருப்பத்துக்கு ஏற்றவாறு திசை திருப்பிக் கொண்டமையே. இன்று தமிழ்மக்கள் பக்கம் விடுதலைப் புலிகளும், முஸ்லிம் மக்கள் பக்கம் முஸ்லிம் அரசியல்வாதிகளும் இந்த மோதல்களில் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள். ஆயினும், இப்பிரச்சினையில் இன்று பெரிய அளவில் வன்முறைச் சம்பவங்களில் ஈடுபட்டது விடுதலைப் புலிகளே. அவர்களது நோக்கம் சேற்று நீரில் மீன் பிடிப்பதாகும். அதேபோல இந்தப் பிரச்சினையில் அரசும் சம்பந்தப்பட்டுள்ளது. இருப்பினும் நாங்கள் அந்த அரசின் பங்காளிகள் அல்லர்.

*கேள்வி:* கிழக்கில் இடம்பெற்ற சம்பவங்களில் விடுதலைப் புலிகளின் கிழக்கு மாகாணத் தலைவர் கரிகாலன், ரவூப் ஹக்கீமை முஸ்லிம் மக்களின் பிரதிநிதியாக நாங்கள் ஏற்கவில்லை எனக் கூறியுள்ளாரே?

*பதில்:* ரவூப் ஹக்கீமுக்கும் கரிகாலனைப் பற்றி அவ்வாறே கூறமுடியும். ஏனெனில் கரிகாலன் போன்றோர் தேர்தலில் போட்டியிட்டுத் தலைவர்கள் ஆனவர்கள் அல்லர்.

*கேள்வி:* புலிகளை யுத்தத்தில் தோற்கடிக்கவேண்டும் என நீங்கள் கூறுகிறீர்களா?

*பதில்:* ஆம். புலிகள் ஒரு பயங்கரவாத இயக்கத்தினர். அவர்களை யுத்தத்தின் மூலம் தோற்கடித்த பின்னரே அரசியல் தீர்வு குறித்துப் பேச வேண்டும்.

*கேள்வி:* இந்தப் பிரச்சினைக்குத் தாங்கள் கோரும் அரசியல் தீர்வு எந்த வகையானதாக இருக்கும்?

*பதில்:* ஒன்றுபட்ட இலங்கைக்குள் சமாதானச் சகவாழ்வையே நாங்கள் கேட்கிறோம். அதாவது மத்திய அரசின்கீழ் மாநில அரசு. இன்னொரு வகையில் கூறுவதாயின், பிரதேச சுயாட்சி. இது உண்மையில் இந்தியாவில் தற்போது நடைமுறைப்படுத்தப்படும் நிலைமைக்குச் சமமானது. தற்போது நடைமுறையில் உள்ள மாகாண சபைகளுக்குள்ள அதிகாரங்களை அதிகரிப்பதற்கான முறை என இதை எடுத்துக்கொள்ளலாம்.

*கேள்வி:* புலிகள் வேண்டுவதும் இதே போன்ற தீர்வு தானே?

*பதில்:* இல்லை. அவர்கள் கோருவது தனிநாடாகும். மத்திய அரசிலிருந்து பிரிந்த தனியான அரசு. அதற்கு எந்த அரசுதான் உடன்படும்.

*கேள்வி:* இருப்பினும் அந்தக் கோரிக்கையை சமாதானப் பேச்சுக்களின் போதும் முன் வைப்பார்களா?

*பதில்:* புலிகள் தமது முன்னைய கோஷங்களைத் தற்போது அடக்கி வாசிக்கிறார்கள். காரணம் இப்போது சர்வதேச நெருக்குதல் அதிகரித்துள்ளது. அதிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காகவே புலிகள் இது போன்ற பொய்யான நடவடிக்கைகளை அனுசரிக்கிறார்கள். அரசாங்கத்துடன் தாங்கள் முன் நிபந்தனை எதுவுமின்றிப் பேச்சுவார்த்தை மேற்கொள்ளத் தயாராகியிருப்பதாகப் புலிகள் தொடக்கத்தில் பல தடவைகள் கூறியுள்ளனர். அரசாங்கம் அதற்கு ஒப்புக்கொள்ளும்போது புதிய புதிய நிபந்தனைகளை விதிப்பார்கள். முதலில் அவை சிறிய கோரிக்கைகளுக்கான நிபந்தனையாக இருக்கும். பின்னர் கோரிக்கைகள் வலுவானவையாக இருக்கும். கடைசியாக அரசினால் நிறைவேற்றமுடியாத கோரிக்கையை முன்வைப்பர். உண்மையில நான் இதுபற்றி அனுபவரீதியாக அறிந்திருப்பதாலேயே இப்படிக் கூறுகிறேன். 1977இல் நான் ஈ.பி.ஆர்.எல்.எவ்வில் இருந்தேன். அந்த நேரத்தில் எமது இயக்கத்தின் மூத்த தலைவர்கள் இந்தியாவில் இருந்தனர். நாங்கள் எங்கள் தலைவர்களுடன் தகவல்களை வானொலிக் கருவி மூலம் பரிமாறிக் கொண்டோம். இருப்பினும் நாங்கள் பரிமாறிக் கொண்ட சகல தகவல்களையும் புலிகள் கண்காணிப்புச் செய்தனர். நாங்கள் பேசிக் கொண்டவை, செய்தவை யாவற்றையும் இதன்மூலம் அவர்கள் தெரிந்துகொண்டார்கள். போகப்போக அவர்களது உரையாடல்களை நாங்கள் கண்காணிக்க ஆரம்பித்தோம். ஒருமுறை அன்ரன் பாலசிங்கத்துக்கும் திலீபனுக்கும் இடையே நடைபெற்ற இரகசிய உரையாடலை ஒட்டுக்கேட்க முடிந்தது. அந்தவேளை, பாலசிங்கம் இந்தியாவில் சென்னையில் இருந்தார். திலீபன் யாழ்ப்பாணத்தில் இருந்தார். திலீபன் பாலசிங்கத்திடம் "அண்ணை, நாங்கள் இப்போது சமாதானப் பேச்சுக்களில் கலந்துகொள்ளப் போகிறோமா?" எனக் கேட்டார். அந்தவேளையில் தான் புலிகள் ஜே.ஆர். அரசுடன் முதன்முதலாக பேச்சுக்களுக்குத் தயாராகிக் கொண்டிருந்தனர். திலீபனின் கேள்விக்கு பாலசிங்கம் "ஆம், ஆம், நாங்கள் பேசப்போகின்றோம்" எனப் பதிலளித்தார்.

"ஏன் அண்ணை நாங்கள் என்ன பேசப்போகிறோம்? எங்கள் மக்களிடம் நாம் சமாதானப் பேச்சுக்குப் போகப்போவதில்லை. யுத்தத்தின் மூலம் வெற்றியடைவோம் என்றல்லவா கூறியிருக்கிறோம்" இப்படிக் கேட்டார் திலீபன்.

இதற்குப் பாலசிங்கம் இப்படிப் பதிலளித்தார்.

இல்லை, நாங்கள் பேச்சுக்குள் நுழைவது எங்கள் கோரிக்கைகளைச் சமர்ப்பிக்க மட்டுமே."

திலீபன் மீண்டும் கேள்வியெழுப்பினார்.

"ஏதாவதுவகையில் அரசு எங்கள் கோரிக்கைகளை நிறைவேற்றிவிட்டால்?"

"அப்படிச் செய்தால் நாங்கள் அவற்றுக்கும் மேலான கோரிக்கைகளை முன்வைப்போம். அதற்கும் ஒப்புக்கொண்டால் அதற்கும் மேலான கோரிக்கைகளை முன்வைப்போம். அந்த முறையில்தான் நாங்கள் எமது கடைசிக் கோரிக்கையையும் வென்றெடுப்போம்" எனப் பாலசிங்கம் தெரிவித்தார். இதிலிருந்து புலிகளின் நடவடிக்கைகள் எப்படியானவை என்பது நன்றாகப் புரியும்.

*கேள்வி:* நீங்கள் கூறுவதைப் பார்த்தால் இந்தப் பேச்சு, யுத்த நிறுத்தம் ஆகியவை தோல்வியில் முடிவடையும் போல்....

*பதில்:* அரசு நேர்மையானது என்பதை நாம் ஏற்கின்றோம் ஆனால் புலிகளிடம் நேர்மை இல்லை.

*கேள்வி:* ஆனால், இன்று சமாதானப் பேச்சு மற்றும் யுத்தநிறுத்தம் ஆகியனவற்றைக் கண்காணிப்பதற்கு வெளிநாட்டுக் கண்காணிப்பாளர் குழு உள்ளது. அதேபோன்று இன்று உலகம் முழுவதும் பயங்கரவாதத்துக்கெதிரான யுத்தம் நடைபெறுகிறது. இந்த நிலையில் இந்தத் தடவை புலிகள் உண்மையான சமாதான முடிவுக்கு வரமுடியாதா?

*பதில்:* இல்லை, புலிகள் எப்படியாகிலும் நேர்மையான சமாதானத்துக்கு வரமாட்டார்கள். இன்று புலிகள நாட்டைத் துண்டாடி, தனியான அரசொன்றை அமைக்கும் தமது விருப்பத்தை, சாதாரண தமிழ்மக்களது விருப்பம் எனக் காட்டிக்கொள்வதற்கே முயற்சி செய்கின்றனர். இன்று சாதாரண பொதுமக்கள் அமைப்பு என்று கூறி பொங்குதமிழ், ஹர்த்தால், வேலை நிறுத்தம் ஆகியவற்றை மேற்கொள்வது புலிகளே. அந்த அமைப்புத்தான் சாதாரண பொதுமக்களுக்கும்



அரச படைகளுக்குமிடையே மோதல்களைத் தூண்டிவிடுகின்றது. பின்னர் அதன்மூலம் தமது பக்கத்துக்கு இலாபம் தேடிக்கொள்கிறது.

சில நாள்களின் முன்னர் கடலில கடற்படையினருக்கும் புலிகளுக்குமிடையே மோதல் சம்பவம் உருவானது. அதுகூட பாதுகாப்புப் படையின் மீதும் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர் மீதும் குற்றம் சுமத்தும் நோக்கத்தில் அவர்களால் செயயப்பட்டதே. இந்தச் சம்பவத்தைப் புலிகள் கைபிழைபாடாகச் செய்ததாகவும், அதற்காகப் புலிகள் மன்னிப்புக் கேட்டுக்கொண்டார்கள் என்றவாறும் தெற்கு மக்களுக்குப் பிரசார்ம் செய்யப்பட்டது. புலிகள் இதுவரையில் தாம் செய்த எந்தத் தவறுக்கும் மன்னிப்புக் கேட்டுக்கொண்டதில்லை.

*கேள்வி:* நீங்கள் கூறுவது போன்று போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு போன்று அமெரிக்கத் தலைமையிலான சர்வதேச சமூகம் விடுதலைப் புலிகளின் செயற்பாடுகளை நடுநிலைமையாக அவதானிப்பதில்லையா?

*பதில்:* அப்படி எதுவும் இல்லை. அவர்கள் மிக அவதானத்துடன் உள்ளார்கள். புலிகள் தங்களது பிரச்சினைகளை பொதுமக்களின் பிரச்சினை எனக்காட்டிக்கொள்ள முனைகிறார்கள் என்றே நினைக்கிறேன். இதன் மூலம் அவர்களுக்கு ஓரளவு சாதகமான நிலை உருவாகும். எனவே, இந்த நடைமுறையை அவர்கள் தொடர்ந்து அனுசரிக்கக்கூடும். இது விடயத்தில் அரசு காட்டிவரும் பொறுமை, அர்ப்பணிப்பு அளப்பரியன. அரசு ஏதாவது விடயத்தில் அர்ப்பணிப்புகளை மேற்கொள்ளாது விட்டிருப்பின் முன்னைய யுத்த நிறுத்தங்களின் எண்ணிக்கையுடன் தற்போதையதும் சேர்ந்திருக்கும்.

*கேள்வி:* பேச்சு நடவடிக்கைகளைக் கண்காணிக்க நோர்வே அரசின் அனுசரணையைப் புலிகள் ஏற்றுக்கொண்டுள்ளனர். இதுவும் புலிகளின் ஒரு தந்திரமா?

*பதில்:* அதுபற்றி எனக்குத் தெரியாது. நோர்வே நாட்டை இந்த விடயத்தில் தெரிவுசெய்தது பொதுஜன ஐக்கிய முன்னணியே. அவர்களின் பின்னரே ஐக்கிய தேசிய முன்னணி அதனைத் தேர்ந்தெடுத்தது.

*கேள்வி:* ஆனால், சமாதானப் பேச்சுகளைக் கண்காணிக்கப் பொருத்தமான நாடு இந்தியா தான் என்பது பற்றி....?

*பதில்:* அதைத்தான் நாங்களும் ஏற்கிறோம். ஆனால், புலிகளுக்கும் இந்தியாவுக்கும் இடையே சச்சரவு உண்டல்லவா?

*கேள்வி:* வடக்கும் கிழக்கும் தமிழ் மக்களின் தாயகபூமி எனப் புலிகள் கூறுகிறார்களே? தாங்கள் இதனை ஏற்றுக்கொள்கிறீர்களா?

*பதில்:* தமிழ்மக்களில் பெரும்பான்மையோர் வடக்கு - கிழக்கில்தான இன்று வாழ்கிறார்கள். அவர்களுக்கும் சுதந்திரமாக வாழ்வதற்கு உரிய உரிமை அளிக்கப்படல்வேண்டும். இதனால்தான் இந்தியாவின் தமிழ்நாடு போன்று, இலங்கையில் வடக்கு - கிழக்குத் தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை நாம் கோருகின்றோம். அதைவிட இன்று சிங்கள மக்களுக்கு இல்லாத குறிப்பான பிரச்சினைகள் தமிழ்மக்களுக்கு உள்ளன. வடக்கு - கிழக்கு நிர்வாகத்தை அவர்களிடம் அளித்தால் அப்பிரச்சினைகள் தீர்ந்துவிடும். உண்மையில் முன்னர் ஆட்சியிலிருந்த அரசியல்வாதிகளின் தவறுகளினாலேயே இந்தப் பிரச்சினை இன்றைய நிலைக்கு வளர்ந்துள்ளது. பண்டா-செல்வா, டட்லி-செல்வா ஒப்பந்தங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டிருப்பின் இன்று இவ்வளவு தூரம் பிரச்சினை உருவாகியிருக்காது.

*கேள்வி:* சிங்கள மக்களுக்கு இல்லாத, நீங்கள் கூறுவது போன்று தமிழ்மக்களுக்கு மட்டுமேயுள்ள பிரச்சினைகள் எவை?

*பதில்:* ஏன் அப்படிக் கேட்கிறீர்கள்? எங்கள் கட்சி ஆரம்பிக்கப்பட்டதே அப்படிப்பட்ட பிரச்சினைகள் இருப்பதன் காரணமாகத்தான்.

*கேள்வி:* தமிழ்மக்களுக்கு மட்டுமுள்ள பிரச்சினைகள் என நீங்கள் குறிப்பிடும் பிரச்சினைகளால் நாட்டின் பொருளாதாரத்திற்குப் பிரச்சினை ஏற்படாதா?

*பதில்:* இல்லை. தமிழர்கள் என்பதால் மட்டுமே எமக்கு பிரச்சினைகள் உண்டு.

*கேள்வி:* அப்படியாயின் சிங்களவர் என்பதால் இன்று சிங்களமக்களுக்கும் பிரச்சினைகள் உள்ளன. இன்று அவர்களால் நாடு பூராகவும் சுதந்திரமாக நடமாட முடியாதுள்ளதே?

*பதில்:* அதேபோன்று தமிழ்மக்களுக்கும் உலாவமுடியாதுள்ளது.

*கேள்வி:* நீங்கள் சொல்லுவதைப் பார்த்தால் முஸ்லிம் மக்களுக்கும் பிரசசினைகள் உள்ளன எனக்கொள்ளலாமா?

*பதில்:* ஆம், உண்மையில் இது புலிகளால் உருவாக்கப்பட்ட பிரச்சினைகள்.

*கேள்வி:* தமிழர் தேசிய கூட்டணியுடன் நீங்கள் ஒத்தும் போவதில்லையே?

*பதில்:* தமிழர் தேசிய கூட்டணியிடம் சுயமான கொள்கைகள் எவையும் இல்லை. அவர்களது கொள்கையே புலிகளது கொள்கையாகும். புலிகள் கூறும் எதனையும் அவர்கள் செய்வார்கள். அதேபோல அவர்கள் எங்கள் ஈ.பி.டி.பியில் பிளவு உண்டாக்க முயல்கிறார்கள். நாங்கள் அவர்களுக்கு கீழ்ப்படியப் போவதில்லை. அத்தோடு தமிழர் தேசியக் கூட்டணியில் இருப்போரில் பெரும்பாலானோர் புலிகளே. புலிகளுடன் நாம் எந்தவகையிலும் ஒத்துப் போகப் போவதில்லை.

*கேள்வி:* புலிகள் தமிழ்மக்களின் ஏகப்பிரதிநிதிகள் எனக் கூறப்படுவது பற்றித் தங்கள் கருத்து என்ன?

*பதில்:* அப்படிக் கூறுவதற்கு அவர்களுக்கு எந்தவிதத் தார்மீக உரிமையும் இல்லை. தேர்தலில் நின்று, மக்களின் வாக்குகளால் தெரிவு செய்யப்பட்டால் மட்டுமே அவர்களால் அப்படிக் கூறிக்கொள்ளமுடியும். தமிழர் தேசிய முன்னணியினரும் அவ்வாறு கூறிக்கொள்ள உரிமை அற்றவர்கள். ஏனெனில், அவர்களும் பெருமளவு கள்ள வாக்குகள் மூலமே தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். இதற்கான போதிய சாட்சியங்கள் எம்மிடம் உள்ளன.

*கேள்வி:* அப்படியாயின் தமிழர் தேசியக் கூட்டணிக்கு எதிராக நீங்கள் வழக்குத் தாக்கல் செய்திருக்கலாமே?

*பதில்:* இன்று வழக்குத் தாக்கல் செய்வதால் பலன்கிட்டுமா?

*கேள்வி:* எப்படியிருந்தபோதும், இன்று தமிழ்மக்கள் புலிகளின் பின்னே இருக்கிறார்கள். அதனால் அவர்கள் தமிழ்மக்களின் ஏகப்பிரதி நிதிகள் அல்லவா?

*பதில்:* அப்படி யார் கூறுகிறார்கள்?

*கேள்வி:* பொங்குதமிழ் நிகழ்ச்சிகளின்போதும், ஹர்த்தால்களின் போதும் வடக்குக் கிழக்கின் முழுத் தமிழர்களும் புலிகளுடன் இணைந்து நின்றதை நாம் காணமுடிந்ததே?

*பதில்:* இதோ மார்ச் மாதம் 31 ஆம் திகதிய வீரகேசரி புதினப் பத்திரிகையில் பொங்குதமிழ் நிகழ்ச்சிப் படம் பிரசுரிக்கப்பட்டுள்ளது. (பத்திரிகையைக் காட்டுகிறார்) இந்தப் பத்திரிகையில் நிகழ்ச்சியில் கலந்துகொண்ட பொதுமக்களின் படத்தைப் பாருங்கள். ஒரே மாதிரியான இரு படங்களை ஒன்றிணைத்துப் பிரசுரிக்கப்பட்டுள்ளதல்லவா? இன்று தமிழ் மக்கள் புலிகளுக்குப் பயப்படுகிறார்கள். தமிழ்ப் பத்திரிகைகளும் புலிகளுக்குப் பயப்படுகின்றன. தமிழ் மக்களில் நூற்றுக்கு 15 அல்லது 20 சதவிகிதத்தினரே இன்று புலிகளை ஆதரிக்கின்றனர். அவர்கள் கூட புலிகளுக்கு எதிராகக் கருத்துக் கூறப் பயப்படுகின்றார்கள்.

*கேள்வி:* தமிழர்கள் நிம்மதியற்று வாழும் நிலையில் ஈ.பி.டி.பி. இன்னமும் உறக்கத்தில் இருக்கிறது எனக் கூறினால்...

*பதில்:* அப்படியல்ல. நாங்கள் ஒவ்வொரு மாதமும் பத்திரிகை வெளியிடுகிறோம். போஸ்டர் ஒட்டுகிறோம். இப்போது நாங்கள் விரிவான வகையில் புலிகளுக்கு எதிராக தமிழ் மக்களை ஒன்றுதிரட்டுகிறோம்.

*கேள்வி:* உங்களைவிட புலிகளின 'தமிழ் நெற்' இணையத்தளம் சக்தி வாய்ந்ததல்லவா?

*பதில்:* ஆம், அவர்களுக்கு அதற்குத் தேவையான நிதி உள்ளது. விசேடமாகக் குறிப்பிட்டால் வெளிநாடுகளில் வசிப்போரின் நிதி உதவி அவர்களுக்கு உண்டு. எமக்கு அப்படி எதுவும் இல்லை. ஆனால், இன்ரர்நெற், ஈ-மெயில் ஆகிய வசதிகள் உள்ளன. நாம் தினமும் ஆயிரத்துக்கும் அதிகமாகக் கடிதங் களை ஈ-மெயில் மூலம் உலகம் பூராவும் அனுப்புகிறோம்.

*கேள்வி:* அண்மையில் யாழ்ப்பாணத்துக்கான ஏ-9 தரைப்பாதையைப் புலிகள் திறந்தமை பற்றி என்ன கூறுகிறீர்கள்?

*பதில்:* இப்பாதைத் திறப்பு புலிகளுக்கு பொன்முட்டையிடும் கோழி கிடைத்தது போன்றதாகும். இப்பாதையூடாகப் பயணிக்கும் சகலரிடமிருந்தும் புலிகள் வரி அறவிடுகின்றனர். பிற பகுதிகளில் இருந்து குடாநாட்டுக்குள் செல்லும் வாகனங்களுக்கு ஆயிரம், ஆயிரத்தைந்நூறு ரூபாவென வரி அறவிடுகிறார்கள். ஆகக்குறைந்தது நாளொன்றுக்கு நூறு வாகனங்கள் குடாநாட்டுக்குள் செல்லுமாயின் ஒரு லட்ச ரூபா கைக்கு வருகிறது. இந்த நோக்கத்தில்தான் அவர்கள் பாதை திறக்க சம்மதித்தனர். இப்போது திறக்கப்பட்டுள்ள செங்கலடி - பதுளை ஏ-5 தரைப்பாதையில் தாங்கள் வரி அறவிடுவதில்லையெனக் கூறுகிறார்கள். ஆனால், (09ஆம் பக்கம் பார்க்க)

**தமிழில்: வீயெஸ்ரீ**

# பாலகதிர்காமக் கந்தனின் அருள்மிகு ஆடிவேல் பவனி

**ஆறுமுகப்பெருமான் பவனிவரும் ஆடிவேல் ரதம் இருப்பிடம் சேரும் நாள் இன்றாகும்.**

ஆடி மாதம் பிறந்துவிட்டாலே எங்களது ஞாபகத்துக்கு வருவது ஆடிவேல் விழாவாகும். ஆடிப்பிறப்பு, ஆடி அமாவாசை, ஆடிப்பூரம், ஆடிச்



செவ்வாய் என்று பல விசேடங்கள் இந்த மாதத்திலே உண்டு. எனினும், யாழ்ப்பாணத்து நல்லூரிலே சட்டநாதர் வீதியில் அமைந்துள்ள பால கதிர்காம ஆலய உற்சவத்தின் இறுதி நாளில் நடைபெறும் இந்த ஆடிவேல விழா மிகச் சிறப்புடையதாகும்.

கலியுக வரதனாம்' கந்தப்பெருமான் கதிர்காமத்திலே எழுந்தருளி வீற்றிருந்து சகல மக்களுக்கும் அருள் பாலிக்கும் அருமை சொல்லிலடங்காதது. முத்தமிழால் தொழுதோரை வாழ வைக்கின்ற முருகன் ஈழநாட்டின் தென் பகுதியில் அமைந்துள்ள கதிர்காமத்தில் அருள் கந்தனாக கோயில் கொண்டுள்ளான். இங்கே இனமத வேறுபாடின்றி அனைவரும் ஒருமித்து வழிபாடு செய்வர். சரித்திரப் பிரசித்தி பெற்ற வணக்கத் தலமாக விளங்கும கதிர்காம முருகனை அங்கு சென்று தரிசிக்க நாம் பூர்வஜென்மத்தில் புண்ணியம் செய்திருக்கவேண்டும்.

அவ்வாறு அவ்வளவு தூரம் அங்கு செல்லமுடியாதவர்களுக்கு அந்தக் காட்சியை அப்படியே தத்ரூபமாக இங்கே யாழ்ப்பாணத்தில் காட்டுகின்ற பாங்கு போற்றுதற்குரியது. கதிர்காமம என்றால் 'தினை நிறைந்த கிராமம்' என்பது பொருள். அங்கே தேனும் தினைமாவும் கொண்டு முருகனுக்கு மாவிளக்கு ஏற்றுவார்கள் அடியார்கள.

*"இறவாமற் பிறவாமல் எனையாள சற்குருவாகி*
*பிறவாகித் திரமான பெருவாழ்வைத் தருவாயே*
*குறமாதைப் புணர்வோனே குகனே சற் குமரேசா*
*கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமானே"*

என்று அருணகிரிநாத சுவாமிகள தமது திருப்புகழிலே அருளியுள்ள வாறு - நல்ல திரமான பெருவாழ்வைத் தருகின்ற வள்ளி நாயகியின் தலைவனான குகனாகிய முருகப் பெருமான், யானை முகத்துடைய பிள்ளையாரின் தம்பியாகத் திகழ்பவன் நானே என்பதை உணர்த்துமுகமாகக கதிர்காமத்திலே காட்சி தருகின்றான்.

அந்தக் கவின்மிகு காட்சியையே இங்கே நல்லூர் சட்டநாதர் வீதி பால கதிர்காமத்திலும் காணமுடிகிறது.

இந்த விழா தமிழ்மக்களின் தனிப் பொக்கிஷமாகும்.

கலியுகத்திலே கண்கண்ட தெய்வம் கந்தன். தமிழர் வாழ்வில் துன்பங்கள் துயரங்கள் தீர்ந்து இன்னல்கள் இடுக்கண்கள் களைந்து எல்லோரையும் வாழ வைக்கின்ற கருணை வள்ளல் முருகன். அவன் கதிர்காமத திலே உறைந்து தம்மை வழிபடும் அடியார்களின் கஷ்டமெல்லாம் நீக்கியருள்புரிகின்றான்.

அத்தகைய கதிர்காமக் கந்தன் திருப்பவனிவந்து அடியார்க்கருள் புரியும் அலங்காரக் காட்சியை யாழ்ப்பாண மண்ணில் வாழும் மக்களும் கண்டுகளிக்கும் வண்ணம் இந்த ஆடிவேல் பவனி வீதிவலம் வருகின்றமை கண்கொள்ளாக் காட்சியாகும். மூன்று நாள்களாக நகரை வலம்வரும் ஆடிவேல் ரதம் அழகுற அசைந்து அலங்காரமாகப் பவனிவரும் காட்சிக் காணபதற்குக் கண் கோடி வேண்டும்.

**சிவநெறிக்கலாநிதி**
**இராசையா ஸ்ரீதரன்**

இப்போது யாழ்நகரமே விழாக் கோலம் பூண்டுள்ளது. கொழும்பில் ஆடிவேல் விழாவில் முருகனைக்கண்டு கைதொழ முடியாதவர்கள் அனைவருமே இந்த ஆடிவேல் ரத பவனியின் போது ஆறுமுகனைக் கண்டு ஆனந்த பாஷ்பம் சொரிய நமஸ்கரிக்கின்றனர்.

வாழ்த்தவாயும் நினைக்க மட நெஞ்சும் தாழ்த்தச் சென்னியும் தந்த இறைவனுக்கு நாம் கைம்மாறு புரியுமாப்போல் இந்த ஆடிவேல் விழா ஆறுமுகப் பெருமானின் அருளாட்சியைக் கண்முன்நிறுத்தி நம்மையெலலாம் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தியுள்ளதென்று கூறின் மிகையாகாது.

★


## சிறுவர்களுக்காகச் செயற்படுவோம்

"நாளை" என்று நாம் பிள்ளைகளின் விடயத்தில் காலம் தாழ்த்துவோமானால் அது சிலவேளை பாரதூர விளைவுகளினைக் கூட அவர்களினது வாழ்வில் ஏற்படுத்திவிடும். எனவே, இன்றே எமது நாளைய நல்லுலகிற்காக பிள்ளைகளினது எண்ணங்களுக்குச் செவி சாய்த்து அவர்களுக்கும் மதிப்பளித்துச் செயற்படத் தயாராவோம்.

திரு.இரா.சத்தியலிங்கம்,
*சிறுவர் உரிமைகள் பயிற்சியாளர்குழு,*
*கரவெட்டி பிரதேச செயலகம்,*
*கரவெட்டி.*

(C/23069)



# மக்கள் வங்கி

## கேள்விப் பத்திர அறிவித்தல்

**பாவித்த மோட்டார் வாகனமும் மின் பிறப்பாக்கிகளும் விற்பனை**

**பின்வரும் வாகனத்தையும் மின்பிறப்பாக்கிகளையும் விற்பதற்கான விலைக் கோரிக்கைகள் கோரப்படுகின்றன.**

17-6027 இலக்கமுடைய மஸ்டா கார்
மூன்று மின் பிறப்பாக்கிகள்

வடவலய உதவிப் பொது முகாமையாளர், மக்கள் வங்கி, 79, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாண அலுவலகத்தில் பெறப்பட்ட படிவங்களில் விலைக் கோரிக்கை மனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். விலைமனுக் கோரிக்கை தொடர்பான அறிவுறுத்தல்களும் நிபந்தனைகளும் கேள்வி மனுக்களுடன் வழங்கப்படும்.

திருப்பிப்பெறாத கட்டணமாக ரூபா 250 செலுத்தி 2002.08.14 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிவரை கேள்வி மனுவுக்கான பத்திரங்களை மக்கள் வங்கி, வடவலய உதவிப் பொது முகாமையாளர் அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம். ஒவ்வொரு வாகனத்திற்கும் தனித் தனியே திருப்பிப் பெறக்கூடிய கட்டணம் ரூபா.10,000/-ம் ஒவ்வொரு மின் பிறப்பாக்கிகளுக்கும் ரூ.1000/-ம் விண்ணப்பம் சமர்ப்பிக்கும்போது செலுத்தப்படல் வேண்டும்.

உதவிப் பொது முகாமையாளர்,
வடவலயம்,
மக்கள் வங்கி,
79, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 021-2601 - 021 -2602 - 021- 2956
தொலைநகல்: 021- 2602 - 021 - 2956

(C/22930)


# இலங்கை - அமெரிக்கா இடையே முதலீட்டுக்கொள்கை ஒப்பந்தம்

இலங்கைக்கும் அமெரிக்காவிற்குமிடையே பொருளாதார வர்த்தகத் துறையை ஊக்குவிக்கும் வர்த்தக முதலீட்டுக் கொள்கை ஒப்பந்தம் கடந்த 25ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டது.

இலங்கையின் பிரதிநிதியாக விஞ்ஞான, தொழில்நுட்ப அமைச்சர் மிலிந்த மொரகொடவும் அமெரிக்கா சார்பாக வர்த்தகத்துறை தொடர்பான செயலாளர் ரொபட் சொலிக்கும் பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் கையொப்பமிட்டனர்.

இரு நாடுகளுக்குமிடையேயான வர்த்தகத்துறையை மேம்படுத்துவதற்கான கொள்கைத் திட்டம் ஒன்றும் ஒப்பந்தத்தின்மூலம் உருவாக்கப்படவுள்ளது.

இரு நாடுகளுக்குமிடையேயான ஏற்றுமதி, இறக்குமதி தொடர்பாக முக்கியமான பல விடயங்கள் அதில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இவ்வொப்பந்தத்தினை முன்னெடுத்து நடைமுறைப்படுத்துவது குறித்து ஆராய அமெரிக்க உயர்குழு ஒன்று ஒக்ரோபர் மாதத்தில் இலங்கை வர தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ஒ)


*சுன்னாகத்தில்!*

## எரிக் கணேஷ்

**உங்களுக்கு ஒரு நற்செய்தி!**

☆ உங்கள் முகப் பொலிவுக்கேற்ப சாங்குப் பற்களைக் கட்டிக்கொள்ளவும்.
☆ மிதப்புப் பற்களுக்கு கிளிப் போட்டுக்கொள்ளவும்.
☆ இலவசமாகக் கண்களைப் பரிசோதித்து கண்ணாடிகளைப் பெற்றுக்கொள்ளவும்.......

(6423) *80, கே.கே.எஸ். றோட், சுன்னாகம்.*



## இங்கே பெற்றுக்கொள்ளலாம்

'லயன்' புறுவறியின் உற்பத்திப் பொருள்களை அனுமதிபெற்ற சகல மதுபான விற்பனை நிலையங்களிலும் கீழ்க்காணும் விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

லயன் பியர் - 60.00
லயன் ஸ்ரவுட் - 80.00
காஸ்ட் பேக் பியர் - 80.00
ஸ்ரோங் பியர் - 90.00

உங்கள் உள்ளத்திற்கு புத்துணர்ச்சி ஊட்டுவது லயன்.
'லயன்' என்று கேட்டு வாங்குங்கள்.

ஏக விநியோகஸ்தர்கள்: **பியஸ் ரேடஸ்,**
99, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

(6431)



## அற்லஸ் கொமினிக்கேசன் பஸ் ஆசனப் பதிவகம்




77, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
*ஐந்துலாம்புச் சந்தி, கொழும்பு.*

யாழ்.- கொழும்பு, கொழும்பு - யாழ். பிரயாணம் செய்ய குளிரூட்டப்பட்ட பெரிய சொகுசு பஸ் சேவை ஆரம்பமாகிவிட்டது. அத்துடன் தனியாகப் பயணம்செய்ய எமது நிறுவனத்தில் குளிரூட்டப்பட்ட, குளிரூட்டப்படாத சிறிய வாடகை வாகனம் திருமணத்திற்கு, சுற்றுலாவிற்கு, கோவில் தரிசனம் செல்ல மற்றும் தேவைகளுக்கும் தொடர்புகொள்ளலாம்.

*தொ.பே.இல. 021 - 2990*

*எமது நிறுவனத்தின் சேவைகள்:*

1. தொலைபேசி: வெளிநாட்டு, உள்நாட்டு வசதி, பக்ஸ் வசதி
2. தங்குமிட வசதி (சகல வசதிகளும் செய்துகொடுக்கப்படும்) யாழ்., கொழும்பில்.
3. உள்நாட்டு, வெளிநாட்டு பார்சல் விரைவாக அனுப்புதல்.
4. பயணிகள் நலன்கருதி பின்வரும் இடங்களில் பதிவுகள் செய்துகொள்ள ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| குகன் ஸ்ரோர்ஸ்,<br>ஆஸ்பத்திரி வீதி,<br>யாழ்ப்பாணம். | யாழ். பஸ் நிலையம் முன்பாக,<br>398A, ஆஸ்பத்திரி வீதி,<br>யாழ்ப்பாணம். |
| இந்திரன் கொமினிக்கேசன்,<br>கொடிகாமம். | கஜன் தொலைத் தொடர்பகம்.<br>திருநெல்வேலி. |
| தர்மகத்தா சபை காரியாலயம்,<br>ஆஞ்சநேயர் ஆலயம்,<br>மருதனார்மடம். | கல்யாணி பன்சிஹவுஸ்<br>ஆஸ்பத்திரி வீதி,<br>யாழ்ப்பாணம். |

*மு.கு:* சொகுசு பஸ் புறப்படும் நேரம்: யாழ்.நகரில் இருந்து 6.30மணிக்கு புறப்பட்டு ஆஞ்சநேயர் ஆலயத்திற்கு (6.45மணி) சென்று கோப்பாய் வழியாக கைதடியால் செல்லும் என்பதனை அறியத்தருகின்றோம்.




தொடர்புகொள்ள:

**அற்லஸ் கொமினிக்கேசன்,**
**77, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.**
**தொ.இல.: 2990, 2557**

(6333)

## எதிர்வரும் ஓகஸ்ட் 2ஆம் திகதிக்கு முன்னர்

# அனைத்துப் பாடசாலைகளிலிருந்தும் படையினர் வெளியேறிவிட வேண்டும்!

## தமிழ் மாணவர் ஒன்றியம் வலியுறுத்து

யாழ்ப்பாணம்,ஜுலை28

புரிந்துணர்வு உடன்பாடு நடைமுறைக்கு வந்து 160 நாள்கள் பூர்த்தியடையும் ஓகஸ்ட் 2ஆம் திகதிக்கு முன்னர் அனைத்துப் பாடசாலைகளில் இருந்தும் இராணுவம் வெளியேற வேண்டும்.

- இப்படிக் கோரியுள்ளது தமிழ் மாணவர் ஒன்றியம்.

மேற்படி ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கல்வி மாணவர்களின் பிறப்புரிமை! எனவே பாடசாலைகளை இராணுவ முகாம்களாக்கும் செயல் மாணவர்களின் பிறப்புரிமையை மறுக்கும் செயலாகும். ஒரு நாட்டின் மானிட அபிவிருத்தியில் கல்வி ஒரு முக்கிய இடத்தைப் பெறுகின்றது. எனவே கல்வி உரிமையை மறுப்பது மானிட அபிவிருத்தியை மறுப்பதற்குச் சமனாகும்.

புரிந்துணர்வு உடன்படிக்கையின் சரத்து 02 இயல்பு நிலையை மீளக் கொண்டுவருவதற்கான நடவடிக்கைகளைப் பற்றிக் குறிப்பிடுகிறது. அச்சரத்தின் 3ஆவது உபபிரிவு பின்வருமாறுள்ளது. "ஏதேனும் ஒரு தரப்பினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் பாடசாலைக் கட்டடங்கள் இந்த ஒப்பந்தம் நடைமுறைக்கு வருகின்ற நாளிலிருந்து விடுவிக்கப்படத் தொடங்கி அவற்றுக்குரிய பாவனைக்கு மீளக் கையளிக்கப்படவேண்டும். இந்த நடவடிக்கை ஒப்பந்தம் நடைமுறைக்கு வருகின்ற நாளிலிருந்து 160 நாள்களுக்குள் முற்றுப்பெறவேண்டும்"

இதன் பிரகாரம் ஓகஸ்ட் மாதம் 2ஆம் திகதிக்கு முன்பாக அனைத்துப் பாடசாலைகளிலிருந்தும் இராணுவம் வெளியேற வேண்டும். அவ்வாறில்லையெனின் இயல்புநிலையை மீளக் கொணர்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசு மறுக்கின்றதென்பதே பொருளாகும்.

சில பாடசாலைக் கட்டடங்களில் இருந்து வெளியேறிய இராணுவத்தினர் அப்பாடசாலைகளுக்கருகிலுள்ள காணிகளில், கட்டடங்களில் முகாம்களை அமைத்து வருகின்றனர். கல்விக்கு கட்டடங்கள் மட்டும் போதாது. கற்பதற்கும், கற்பிப்பதற்கும் புறச்சூழல்களும் சாதகமாக அமைய வேண்டியது அவசியமாகும். இராணுவ முகாம்களுக்கும் காவலரண்களுக்கும் மத்தியிலிருந்து கொண்டு மாணவர் கற்கமுடியுமா? ஆசிரியர் கற்பிக்கத்தான் முடியுமா?

"பாடசாலைக் கட்டடங்களிலிருந்து வெளியேறினால் நாங்கள் எங்கே செல்வது?" என்று இராணுவம் கேட்பது வேடிக்கையானது. இந்த வினாவை அரசாங்கத்திடம் கேட்கட்டும்! அரசாங்கம் பதில் கூறட்டும்! எம்மிடம் - மாணவர்களிடம் - இந்த வினாவைத் தொடுத்தால் எமது பதில் தெளிவானது. "எங்கிருந்து வந்தீர்களோ அங்கேயே சென்றுவிடுங்கள்".

ஏ-9 பாதையும் திறந்துவிடப்பட்டுள்ளது. மாணவர்களாகிய நாம் - முன்பு எங்கிருந்தோமோ அங்கேயே குடியிருக்க விரும்புகிறோம். எங்கு கல்வி கற்றோமோ அங்கேயே கல்வி கற்க விரும்புகிறோம். புரிந்துணர்வு உடன்படிக்கையின் கீழ் இயல்பு நிலையை மீளக்கொணருதலாக இதனையே கருதுகின்றோம்.

குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் பாடசாலைக் கட்டடங்களிலிருந்து இராணுவத்தினை வெளியேற்றி இயல்பு நிலையைத் தோற்றுவித்தல் என்ற விடயத்தில் அரசாங்கம் காட்டும் அலட்சியம் எம்மத்தியில் மிகுந்த சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. இச்சிறிய விடயத்தைக் கூட நிறைவேற்றாமல் இழுத்தடிக்கின்ற இராணுவம், தமிழ்மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளை எவ்வாறு தீர்க்கப் போகின்றதென்பதே எமது சந்தேகமாகும் - என்றுள்ளது.

## வலி. வடக்கில் மீள்குடியமர்வு குறித்து

# ஒஸ்ரின் வந்து ஆராய்ந்த பின்னரும் சாத்தியமான தீர்வு இன்னும் இல்லை!

## புனர்வாழ்வுக் கழகம் பிரதமருக்குக் கடிதம்

யாழ்ப்பாணம்,ஜுலை28

பாதுகாப்பு அமைச்சுச் செயலர் யாழ்ப்பாணம் வந்து நேரடியாக மீள்குடியமர்வு குறித்து ஆராய்ந்தபோதும் நடைமுறைச் சாத்தியமான தீர்வு எதுவும் எடுக்கப்படவில்லை என்று வலி.வடக்குப் புனர்வாழ்வுக்கழகம் குற்றஞ்சாட்டியுள்ளது.

வலி.வடக்கு மீள்குடியமர்வு தொடர்பாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு கழகம் அனுப்பியுள்ள கடிதத்திலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வலி.வடக்குப் பிரதேச செயலர் பகுதியில் பிரதேச நிலைவரம் பற்றி அறிந்துகொள்வதற்காக கடந்த 20ஆம் திகதியன்று பாதுகாப்பு அமைச்சின் செயலர் ஒஸ்ரின் பெர்னாண்டோ யாழ்ப்பாணத்திற்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டார். இதற்கான ஒழுங்குகளைச் செய்துகொடுத்தமைக்கு தங்களுக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இடம்பெயர்ந்த மக்களை அவர்களது சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்துவதற்கு நடைமுறைச் சாத்தியமான திட்டங்களை வகுத்துக் கொடுப்பதே பாதுகாப்பு அமைச்சரின் விஜயத்தின் பிரதான நோக்கம் எனக் கூறப்பட்டது.

பலாலி விமானத்தளத்தைச் சுற்றிவர அரைமைல் விஸ்தீரணமான பிரதேசம், "உயர் பாதுகாப்பு வலயம்" எனத் தங்களால் குறிப்பிடப்பட்டதாக அவரது வருகைக்கு முன்னதாகவே நாங்கள் ஊடகங்கள் வாயிலாக அறிந்துகொண்டோம்.

யாழ்.மக்கள் குறிப்பாக வலி.வடக்கிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் தமது இயல்பு வாழ்க்கையை மீளப் பெற்றுக்கொள்வதற்கான வழிவகைகள் பற்றி அறிய அவரின் வருகையை மிகவும் ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்தனர்.

எனினும் வலி.வடக்குப் பிரதேச செயலகத்தில் அன்று நடைபெற்ற கூட்டத்தின் முடிவிலும், அந்தப் பகுதி இடங்களை அவர்கள் பார்வையிட்டதன் பின்னரும் மக்கள் மீளக்குடியமர்வதற்கான நடைமுறைச் சாத்தியமான தெளிவான தீர்வு எதுவும் தீர்மானிக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

இது வலி.வடக்கிலிருந்து இடம்பெயர்ந்த மக்களின் எண்ணங்களையும், பேரார்வத்தையும் சிதறடித்துவிட்டது.

"ரோமாபுரி ஒரு நாளிலேயே கட்டி எழுப்பப்படவில்லை" என்ற பழமொழியை நாங்களும் ஏற்றுக்கொள்கிறோம். ஆனாலும், இடம்பெயர்ந்த மக்களின் அவலநிலையைத் தீர்த்துவைப்பதற்கு ஏற்ற மாற்றுவழியைக் கடந்த 15 வருடங்களாக வழி ஏற்படுத்தப்படவில்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

மேலும், புரிந்துணர்வு ஒப்பந்தம் மற்றும் யுத்தநிறுத்த உடன்படிக்கை ஆகியவற்றுக்கேற்பப் பாதுகாப்புப் படையினருடன் இணைந்து ஒரு நட்புறவுடன் வாழ்வதில் இடம்பெயர்ந்த மக்களுக்கு எவ்வித பிரச்சினையும் இல்லை.

இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கைச்சாத்தான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் விதிமுறைகளின்படி சகஜ வாழ்க்கையை மீள வழங்குவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டியது மிகவும் அவசியமாகும். அந்தக் காரணங்களை உங்களுக்குத் தெரிவிக்க விரும்புகின்றோம்.

☆ வலி.வடக்கிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் ஏனைய பல பகுதிகளில் வெறுமையாக உள்ள வீடுகளில் தங்கியுள்ளார்கள். ஆனால், யாழ்.குடாநாட்டிலிருந்து வெளியேறி வேறு இடங்களுக்குச் சென்றவர்கள் புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின்னர் - இப்போது வசிப்பதற்கு தத்தம் சொந்த வீடுகளுக்குத் திரும்பிக்கொண்டிருக்கிறார்கள். அதனால் வலி.வடக்கிலிருந்து இடம்பெயர்ந்து அந்த வீடுகளில் வசித்துவரும் மக்கள் தமக்கு வேறு இருப்பிடங்கள் தேடி அலையவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. ஆயினும் தற்போது வீடுகள் கிடைப்பது சுலபமான காரியமல்ல.

☆ வலி.வடக்கிலிருந்து இடம்பெயர்ந்த விவசாயிகள்கூட இவ்வாறான சிரமங்களுக்கு முகங்கொடுக்க வேண்டியவர்களாக இருக்கின்றார்கள். அவர்களும் தங்கள் வருவாய்களையும் தாம் விவசாயத்திற்காக குத்தகைக்கு எடுத்த நிலங்களில் இட்ட முதலீடுகளையும் இழந்தவர்களாக இருக்கின்றார்கள்.

☆ நலன்புரிச்சேவை நிலையங்களில் வசிக்கின்ற இடம்பெயர்ந்த மக்கள், அங்கு பல அடிப்படைத் தேவைகள் இல்லாத ஒரு துர்ப்பாக்கிய நிலையிலேயே தமது வாழ்க்கையைத் தொடர்ந்து நடத்திக் கொண்டிருக்கின்றார்கள்.

இத்தகைய காரணங்களால் வலி.வடக்கில் மீளக் குடியமர்வு அவசியமாகின்றது.

தனிநபர்கள் எவரும் தத்தமது சொந்த இடங்களில் வசிப்பதற்கு அடிப்படை உரிமையுடையவர்கள். மேலும் உண்மையான, நேர்மையான கோரிக்கைகள் மறுக்கப்படும் போது கிளர்ச்சிகளும் போராட்டங்களும் தவிர்க்கமுடியாதவைகளாகின்றன.

எனவே மனச்சாட்சிக்குப் பொருந்திய வகையில் விமோசனம் கிடைப்பதற்கு நல்ல அறிவாளர்களும் சமயோசித செயற்பாடுகளும் அவசியம் - என்று உள்ளது. (ஒ-3)

# லஞ்சக் குற்றச்சாட்டிலிருந்து சப் - இன்ஸ்பெக்டர் விடுதலை

கொழும்பு,ஜுலை28

காணி விவகாரமொன்றைத் தீர்த்து வைப்பதாகக் கூறி 25 ஆயிரம் ரூபா லஞ்சம் பெற்றதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட பொலிஸ் சப்-இன்ஸ்பெக்டர் ஒருவர் சாட்சிகளின் முரண்பாடுகள் காரணமாக விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

அக்மன பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த ஜயசிங்க ஆராய்ச்சிகே சுமன் என்பவரே விடுதலை செய்யப்பட்டவராவார்.

நந்தன சிறிவர்த்தன என்பவரின் முறைப்பாட்டின் பேரில் சப்-இன்ஸ்பெக்டருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டிருந்த இந்த வழக்கு கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி தீபாலி விஜயசுந்தர முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது நந்தன சிறிவர்தன சாட்சியளித்தார்.

ஏறகனவே, இந்த லஞ்சப் பணத்தை நந்தன சிறிவர்தன் கொடுத்ததாகக் கூறப்பட்டது ஆனால், அவர் சாட்சியம் அளிக்கையில் பணத்தைத் தான் கொடுக்கவில்லையென்வும் தனது தங்கை கொடுத்ததாகவும் கூறினார்.

சாட்சிகளின் இந்த முரண்பாட்டை எதிரியின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி கே.வி.தவராசா சுட்டிக்காட்டியதையடுத்து எதிரியை விடுதலை செய்து தீர்ப்பளித்தார் நீதிபதி தீபாலி விஜயசுந்தர. (ஒ)

### வலு குறைந்த மின்சாரத்தால் மக்கள் சிரமம்

பனிப்புலம் பகுதியில் வலுக் குறைந்த அளவு மின்சாரம் விநியோகிக்கப்படுவதால் இங்குள்ள மின்பாவனையாளர்கள் பாதிக்கப்பட்டுவருவதாகக் கூறப்படுகிறது. இதனால், மாணவர்கள் இரவில் படிக்க முடியாதிருப்பதாகவும் - நீர் இறைக்கும் இயந்திரங்கள் உட்பட மின்சார உபகரணங்கள் இயங்க முடியாதிருப்பதாகவும் - இப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

காலையடி இடும்பன் கோயில் சந்தியில் மின்மாற்றி ஒன்றை நிறுவித்தருமாறும் - இதன்மூலம் இப்பகுதியில் நிலவும் மின்சாரக் குறைபாட்டினை நிவர்த்தி செய்ய முடியும் என்றும் - யாழ்மாவட்ட மின்சாரசபை முகாமையாளருக்கு பனிப்புலம் கிராம அபிவிருத்திச் சங்கம் மகஜர் ஒன்றை அனுப்பிவைத்துள்ளது. (ஒ-135)

### ஆங்கில பாட ஆசிரியர்களுக்கு!

யாழ்.கல்வி வலய ஆங்கில மொழித்தினப் போட்டியின் குழுப்பாடல் மற்றும் நாடகம் ஆகியவற்றில் பங்குபற்றும் பாடசாலைகளின் ஆங்கில பாட பொறுப்பாசிரியர்களை நாளை திங்கட்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு யாழ்.கல்வி வலயத்தில் ஆங்கில பாட உதவிக் கல்விப் பணிப்பாளரைச் சந்திக்குமாறு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி செ.மகாலிங்கம் அறிவித்துள்ளார். (ம-10)

## புலிகளை யுத்தத்தில்...

(8ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதற்குப்பதிலாக தோட்டப்பகுதி இளைஞர்களை அப்பாதையூடாக அழைத்து வந்து இரகசியமாகத் தமது இயக்கத்தில் சேர்க்கிறார்கள்.

அதுமட்டுமல்ல, எமது கட்சி அங்கத்தவர்களுக்கு இப்பாதையூடாகப் பயணிக்க அனுமதி மறுக்கப்படுகிறது. அவர்களைக் கைதுசெய்து கொண்டுசென்று கப்பம் பெறுகிறார்கள்; தண்டிக்கிறார்கள். தினமும் இதுபற்றிப் புகார்கள் கிடைக்கின்றன. எனவே, போர் நிறுத்தக் கண்காணிப்பாளர்களிடம் இப்பாதையிலும் அவர்களது கண்காணிப்பை மேற்கொள்ளுமாறு கேட்டுள்ளோம். அதுபோலவே இதுபற்றிப் புதினப் பத்திரிகைகளில் பிரசுரிக்குமாறு பத்திரிகைகளைக் கேட்டிருக்கிறோம். புலிகளுக்கு ஆதரவு காட்டித் தற்போது பத்திரிகைகளும் இதுபோன்ற செய்திகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை என்பதால் அப்படி வேண்டுகோள்விடுக்க நேர்கிறது. தமிழ்ப் பத்திரிகைகள் யாவும் புலிகளுக்கு ஆதரவாகச் செயற்படுகின்றன. இது பற்றி நாம் ஆட்சேபனை தெரிவித்தும் பத்திரிகைகளில் அது பிரசுரிக்கப்படுவதில்லை.

*கேள்வி:* நாட்டின் முழுச்சனத்தொகையிலும் தமிழ்மக்கள் 12 சதவிகிதத்தினரே. ஆயினும், இச்சிறு தொகையினருக்காக நாட்டு நிலப்பரப்பில் மூன்றில் ஒரு பகுதியைத் தாங்கள் கோருவது நியாயமற்றது. வடகிழக்கின் கரையோரம் நாட்டின் முழுக்கடற்கரையோரத்தில் 60% எனக்கூறப்படுவது பற்றி...?

*பதில்:* தென்பகுதி அரசியல் தலைவர்களினாலேயே இந்த நிலை உருவாக்கப்பட்டது. அதிகாரத்திலிருந்த அரசுகள் 83ஆம் ஆண்டு கறுப்பு ஜுலை நிகழ்விற்குப் பின்னரே தனியான அரசுக்கான கோரிக்கையின் தாக்கத்தை உணர்ந்து கொண்டன. அதனால் அரசியல் நிலைமைகளுக்காக சில கோரிக்கைகளை முன்வைக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. ஆயினும், தமிழர் தரப்பில் தவறு எதுவும் இல்லை என்று நான் கூறவரவில்லை.

*கேள்வி:* அதாவது தங்களது அந்தக் கோரிக்கையை நியாயமற்றது எனத் தாங்கள் உணர்கிறீர்களா?

*பதில்:* இன்றைய பிரச்சினை அதுவல்ல, இந்தப் போருக்கு நிரந்தரமான, கௌரவமான இணக்க மொன்றைக் காணமுயல்வதே இன்றைய பிரச்சினை. ஒரே அரசின் கீழ் பிரதேச சுயாட்சியையே நாம் கோருகின்றோம். இதனை சிங்கள அரசியல்வாதிகளும், பொதுமக்களும் விளங்கிக்கொள்ள வேண்டும். அப்படி விளங்கிக் கொள்ளாதவிடத்து நாம் இந்தப் பிரசாரத்தை முன்னெடுத்துச் செல்ல வேண்டி ஏற்படும். விசேடமாகப் புலிகள் எங்களை எதிர்த்தால் நாம் அவர்களுக்கு எதிராகச் செயற்படும் நிலைக்குத் தள்ளப்படுவோம்.

*கேள்வி:* அதாவது புலிகளை ஆயுத மோதல் மூலம் வெல்வதற்கு நீங்கள் சிந்திக்கிறீர்களா?

*பதில்:* அது அந்தந்த நிலைமைகளில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை. ஆனால் அப்படி நடக்கவும் கூடும்.

*கேள்வி:* தங்களுக்கு இந்திய உளவுப் பிரிவான 'றோ'வுடன் தொடர்புள்ளதாகக் கூறப்படுவது பற்றி...?

*பதில்:* ஹா,ஹா,ஹா(சிரிப்பு) நான் இந்தியாவில் இருந்த காலத்தில் பெரும் பகுதியைச் சிறையிலேயே கழித்திருக்கிறேன். அந்த வகையில்தான் எனக்கும் றோவுக்குமுள்ள சம்பந்தம்.

*கேள்வி:* புலிகளுக்கு கத்தோலிக்க தேவாலயங்களின் ஆதரவு கிடைப்பதாகக் கூறப்படுகிறதே?

*பதில்:* ஆம்; அது உண்மைதான்.

### பாடசாலை கையளிப்பு

மட்டக்களப்பு,ஜுலை28

1990 ஆம் ஆண்டு ஜுன் மாதம் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் இருந்து வரும் மட்டக்களப்பு கோறளைப்பற்று கொட்டாஞ்சேனை இராமகிருஷ்ண மகா வித்தியாலயம் அப்பகுதி வலயக் கல்வி அதிகாரியிடம் நாளை திங்கட்கிழமை கையளிக்கப்படவுள்ளது.

மட்டக்களப்பு மாநகரசபை கட்டடத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் இது தொடர்பான தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. இக்கலந்துரையாடலில் படை அதிகாரிகளும் கல்வி சார் அலுவலகர்களும் கலந்து கொண்டனர். (ஐ-9)

### கூ.சங்கத்துக்கு கணனி கிடைத்தது

தென்மராட்சி,ஜுலை28

கொடிகாமம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு கணனி இயந்திரம் கிடைத்துள்ளது.

அண்மையில் கூட்டுறவு அமைச்சர் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த போது யாழ்.மாவட்ட கூட்டுறவு சங்கங்களின் சமாசத்திடம் அன்பளிப்பாக வழங்கியிருந்த ஐந்து கணனி இயந்திரங்களில் ஒன்றே கொடிகாமம் சங்கத்திற்கு வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (ம-117)

### வெடிக்காத ஷெல்கள் செயலிழக்கச் செய்யப்பட்டன

சாவகச்சேரி வடக்குப் பகுதியில் கடந்த வியாழக்கிழமை பதினைந்துக்கும் மேற்பட்ட மோட்டார் ஷெல்கள் படையினரின் கண்ணிவெடி அகற்றும் பிரிவினரால் மீட்கப்பட்டு செயலிழக்கச்செய்யப்பட்டன.

யுத்த காலத்தின்போது மணலில் புதைந்து வெடிக்காத நிலையில் காணப்பட்ட ஷெல்களே செயலிழக்கச்செய்யப்பட்டவையாகும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ம-117)

### அவசர கலந்துரையாடல்

வலி.வடக்கு,ஜுலை28

வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கிற்கு உட்பட்ட விளையாட்டுக் கழகங்களின் தலைவர், செயலாளர் மற்றும் நிர்வாகசபை உறுப்பினர்களுக்கான அவசர கலந்துரையாடல் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு உதயன் பணிமனை கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

கொழும்பில் இருந்து வந்துள்ள இலங்கை உதைபந்தாட்டச் சங்க உறுப்பினர்கள் இக்கலந்துரையாடலில் கலந்துகொள்ளவுள்ளமையால் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளும்படி செயலாளர் வேண்டியுள்ளார். (ஒ-86)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

அரிவு காலைக்கு உகந்த 30H.P (England) மின்மோட்டர், Starter என்பன உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ச.துரைச்சாமி (போமன்), "ஜெயகிரி", மான்ஸ் பாடசாலை ஒழுங்கை, உடுவில், சுன்னாகம். (6432)

Gold Fish பெரியது, சிறியது, ஏஞ்சல் குறா Redcap மீன்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: S.விஜயன, 35/1, இந்துக்கல்லூரி அருகில் உள்ள ஒழுங்கை, யாழ்ப்பாணம். (6436)

27" Sony T.V மிக உன்னத நிலையில் விற்பனைக்கு உண்டு. 67/43, தர்மலிங்கம் அவெனியூ, கொட்டடி, யாழ்ப்பாணம். (6437)

உடுவில் கிழக்கில் நொத்தாரிஸ் சபாபதிப்பிள்ளை வீதியில் தெற்குப் பக்கமாகவுள்ள K.K.S. வீதியிலிருந்து இரண்டாவது காணி 8½ நிலப்பரப்பும் வீடும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: கொழும்பு T.P 01-506165 (C/23084)

கடைப் பாவனைக்குரிய தளபாடங்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ம.விக்னேஸ்வரன், அரசடி வீதி, கந்தர்மடம் (பழைய அங்கர் பாமசிக்கருகில்) (6451)

ஒருசில மாதங்கள் உபயோகித்த இரண்டு ஜெனரேற்றர்கள் (5K.V.) விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு இல.422, காலி வீதி, கொழும்பு-03 தொலைபேசி இல.075-539596, 074-719692, விஜித்/நிர்மலி. (C/22998)

புறொயிலர், கல்பேட்ஸ் என்பன சுத்தம் செய்து 1/2கிலோவிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். புறொயிலர் முழுநிறை 1kg-150/-. தேறிய நிறை 240/-. தொடர்பு: S.குமரன், 227, பிறவுண் வீதி (நரிக்குண்டுக்கு அருகில்), யாழ்ப்பாணம். (6314)

Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் சுகாதார முறைப்படி, சுத்தம் செய்து, உங்களுக்குத் தேவையான நிறையில் தினமும் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: இல.19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (6275)

புறொயிலர், இறைச்சிக் கோழிகள் குறைந்த விலையில் விற்பனைக்கு உண்டு. கொள்வனவுகளுக்கு ஏற்ப விசேட விலைக் கழிவு வழங்கப்படும் தினமும் சுத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: சிவா, பருத்தித்துறை வீதி, வட்டக் குளம் முன்பாக, கட்டப்பிராய்.(6420)

## வீடு விற்பனைக்கு

சுன்னாகம் ஸ்ரேசன் வீதியில், கதிரமலைச் சிவன் கோயிற் சுற்றாடலில இரு கிணறுகளுடன் 9½ பரப்புக் காணியில் அமைந்த பெரிய வீடு விற்பனைக்கு உண்டு.தொடர்பு: இல.60, வைமன் வீதி, நல்லூர். T.P.No. 021-3557 (6442)

## வாடகைக்கு

நல்லூர் அரசடிச் சந்தியில் 339ஆம் இலக்கக் கடை வாடகைக்கு உண்டு. தொடர்பு: T.பொன்னம்பலம், பழம் வீதி, ஆறுகால்மடம். (6441)

## மணமகன் தேவை

யாழ்.கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 8இல் செவ்வாய் (நட்பு) உள்ள, கணனித் துறையில் கல்விகற்ற, 1972 இல் பிறந்த மணமகளுக்கு உள்நாடு அல்லது வெளிநாட்டிலுள்ள பொறியியலாளர் அல்லது மருத்துவர் அல்லது விஞ்ஞானப் பட்டதாரியான மணமகன் தேவை. தொடர்பு: விளம்பர இல.1580, மே/பா உதயன். (6410)

லண்டனில் கஷியராகப் பணிபுரியும் இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1972ஆம் ஆண்டு விசாக நட்சத்திரம் செவ்வாய்க் குற்றமற்ற மணமகனுக்கு மணமகள் தேவை. புகைப்படம், குறிப்பு முதலியவற்றுடன் தொடர்பு கொள்ளவும் ப.கிருஷ்ணமூர்த்தி, தேவி அச்சகம், தேவி அச்சக ஒழுங்கை, யாழ்ப்பாணம். (6439)

## கல்வி

புதிய, பழைய பாடத்திட்டத்திற்கமைய O/L கணித பாடத்தின் அட்சரகணிதம், கேத்திரகணிதம், எண் கணிதம், புதியகணிதம் ஆகிய பெரும் பிரிவுகளின் சகல அலகுகளையும் ஆரம்ப அறிவிலிருந்து 40 மணித்தியாலங்களில் "A"பெறு பேறடைவதற்குக் கற்பிக்கப்படும் தொடர்பு: க.ஆறுமுகநாதன், 10,கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குளி. (6419)

## தவறிவிட்டது

சுன்னாகம் மேற்கைச் சேர்ந்த அருணாசலம் புவனச்சந்திரா என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல.663631519V) 22.07.2002 அன்று யாழ்.நகரில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் அருளானந்தம், டாக்டர் சுப்பிரமணியம் வீதி, சுன்னாகம் எனும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். (6428)

அல்லைப்பிட்டி, 3ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த சிலுவைராசா சதாசகாய நாயகி என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல.705071128V), விசேட அடையாள அட்டை, கடற்படை அடையாள அட்டை, திணைக்கள அடையாள அட்டை (Job Card) என்பன யாழ்ப்பாணத்துக்கும் இருபாலைக்கும் இடையில் பேர்ஸுடன் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியில் ஒக்கடைத்துதவவும். (6443)

## விற்பனைக்கு

30 லீற்றர் கொள்ளக்கூடிய பெரிய வெற்றுப் போத்தல்கள், மூடிகள், மூடி அடைக்கும் இயந்திரம், ஓமவாட்டர் தயாரிக்கும் உபகரணம் என்பன விற்பனைக்கு உண்டு.

இல.47, செங்குந்தா வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம். (6440)

## வல்வெட்டித்துறை நகராட்சிமன்றம்
## அறிவித்தல்

தொண்டமனாறு செல்வச்சந்நிதி ஆலய 2002ஆம் ஆண்டுக்கான வருடாந்த உற்சவ காலத்தில் வியாபார நிலையங்களை நடத்துவோர் வல்வெட்டித்துறை நகராட்சி மன்றத்தினால் தற்காலிகமாக ஆலயத்தில் அமைக்கப்பட்டுள்ள பணிமனையில் உரிய படிவங்களைப் பெற்று பூர்த்தி செய்து கட்டணங்களைச் செலுத்தி உத்தரவுப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ள வேண்டும். உத்தரவுப் பத்திரங்கள் பெற்றவர்கள் மாத்திரமே வியாபாரம் செய்வதற்கு அனுமதிக்கப்படுவார்கள்.

உத்தரவுப் பத்திரம் பெறாது வியாபாரம் செய்பவர்களை வியாபாரம் செய்யும் இடத்திலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மேலும் ஆலய வீதிகளிலும், சுற்றாடலிலும் துவிச்சக்கர வண்டிகளோ, மோட்டார் வண்டிகளோ, பேருந்துகளோ, சிற்றூர்திகளோ நுழைவதற்கு அனுமதிக்கப்படமாட்டாது. அவற்றுக்கென ஒதுக்கப்பட்ட இடங்களில் மாத்திரமே வாகனங்கள் தரிப்பதற்கு அனுமதிக்கப்படும்.

ஆலயத்தின் தேவைகளுக்காகப் பயன்படுத்தும் வாகனங்களுக்கு எமது அலுவலகத்திலிருந்து பெற்ற படிவங்களைப் பூர்த்தி செய்து சமர்ப்பிக்கப்பட்டு உள்ளே நுழைவதற்கான அனுமதிச் சீட்டு வழங்கப்பட்டவர்களே அவர்களது வாகனங்களில் தடைசெய்யப்பட்ட பகுதிகளுக்குள் செல்வதற்கு அனுமதிக்கப்படுவர்.

ஆலயத்திற்கு அண்மையிலுள்ள கோவில் வீதி, கோவிலுக்குப் போகும் வீதி, கோவில் வீதி ஒழுங்கை ஆகியவற்றிலும் மற்றும் வீதிகளிலும் வைத்து வியாபாரம் செய்வதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள்.

மேலும் விவரங்கள் தேவைப்படின் எமது தற்காலிக பணிமனையிலோ அல்லது அலுவலகத்திலோ பெற்றுக் கொள்ளலாம்.

நகராட்சிமன்ற அலுவலகம்,
வல்வெட்டித்துறை.
2002.07.25.

சு.சந்திரசேகரம்
உபதலைவர்,
நகராட்சிமன்றம், வல்வெட்டித்துறை.
(C/23087)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜூலை28

ஜனசக்தி காப்புறுதி அங்கத்தவர்களுக்கான முக்கிய கலந்துரையாடல் ஒன்று நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு அலுவலக மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (ஜ-3)

## கூட்டமைப்பினர் 3ஆம் திகதி சந்திப்பு

தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் விடுதலைப் புலிகளின்தலைவர் வேபிரபாகரனுக்கும இடையிலான சந்திப்பு எதிர்வரும் 3 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

இந்தச்சந்திப்பு நேற்று இடம்பெற ஏற்பாடகியிருந்த போதும் - விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினால் இச்சந்திப்பு பிற்போடப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 3ஆம் திகதி இடம்பெறும் சந்திப்பில் கூட்டமைப்பின் 15 நாடாளுமன்ற உறுப்பினர்களும் பங்குபெற்றுவர். (ஜ-3)

## பொன்விழா நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஜூலை28

நல்லூர் மூத்த விநாயகர் சனசமூக நிலையத்தின் பொன்விழாவின் 2ஆம் நாள் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை நிலைய மைதானத்தில் சமாதான நீதிவான் க.செல்வராசா தலைமையில் இடம்பெறவுள்ளது.

இன்றைய நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம் பிள்ளையும், கௌரவவிருந்தினர்களாக யாழ்மாநகர சபை முதல்வர் செ.கந்தையன், சட்டத்தரணி க.கேசவன், யாழ்பல்கலைக் கழகப் பேரவை உறுப்பினர் க.ஜெயரட்ணம் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

மாலை 7 மணிக்கு பாராட்டுவிழா, பரிசில் வழங்கல் மற்றும் கலைநிகழ்வுகள் என்பனவும் இடம்பெறும்.(ம-10)

## கரம் இறுதிச் சுற்றுப்போட்டி

யாழ். பல்கலைக்கழகத்தின் விளையாட்டவையின் கரம் அணியினால் ரூபி நகைப்பூங்கா, இ.ச.பேரம்பலம் சக நிறுவனம், வலம்புரிபத்திரிகை, V.K.இராஜரட்ணம், குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ், T.K Tourist Inn, கபிலா காலணியகம், சீமாட்டி புடைவையகம் ஆகிய நிறுவனங்களின் ஆதரவுடன் நடத்தப்படும் இறுதிச் சுற்றுப்போட்டி.

பிரதமவிருந்தினர்:- திரு.A.அன்ரனிராஜன்,
சிரேஷ்ட விரிவுரையாளர்,
புவியியல்துறை, யாழ்.பல்கலைக்கழகம்.

நாள் :- இன்று (28.07.2002) ஞாயிற்றுக்கிழமை
நேரம் :- மாலை 4.00மணி
இடம் :- யாழ்.பல்கலைக்கழக உடற்கல்வியலகு.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

யாழ்.பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம். (6386)

தலைவர்
கரம் அணி (பெண்கள்),
விளையாட்டு அவை.

## தசாக கிருஹயக்ஞ அழைப்பு

*அன்புடையீர்!*

நிகழும் சித்திரபானு வருடம் (20.07.2002) சனிக்கிழமை சிவபதம் எய்திய எங்கள் குடும்பத் தலைவர்

### சிவஸ்ரீ மு.சிவகடாட்சக் குருக்கள் (மயிலணி)

அவர்களின் ஆத்மசாந்திக் கிரியைகள் 29.07.2002 திங்கள் தொடக்கம் நடைபெறும்.

29.07.2002 திங்கட்கிழமை 10 மணி தசாகம்
30.07.2002 செவ்வாய்க்கிழமை ஏகோதிஷ்டம் மாசியம்
31.07.2002 புதன்கிழமை சபிண்டீகரணம்
01.08.2002 வியாழக்கிழமை கிருஹயக்ஞம் (மதியபோசனம்)

*மேற்படி கிரியைகளிற் பங்குபற்றி அமரரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.*

சம்பந்தப்பிள்ளையார் கோவிலடி.
சங்கரப்பிள்ளை வீதி,
ஆனைக்கோட்டை.

இவ்வண்ணம்
குடும்பத்தினர்.

[தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்] (6444)





க்ராக் க்ரீம்

அனைத்து க்ராக் க்ரீமுடன், பேரோசொப்ட் 5கிராம் பக்கெட் இலவசம்



'க்ராக் க்ரீம்' வலி, எரிச்சல் இரத்தக்கசிவு, வீக்கம் என்பவற்றிலிருந்து பாதுகாத்து இழந்த ஈரத்தை மீட்டு வெடிப்புக்களை நிரப்புகிறது. இதன் சிறப்பு ஆயுர்வேத பார்முலா எவ்வித பக்க விளைவையும் ஏற்படுத்தாமல் 14கே நாட்களில் வெடிப்புக்களை நிரப்பி பாதங்களை அழகுபடுத்துகிறது. தொடர்ந்து பாவிப்பதன் மூலம் திரும்பத் திரும்ப வருவதை தடுக்கலாம்.

(C/23072) விநியோகிஸ்தர் பார்ம்கோ மார்க்கடிங் சர்விசஸ் (பி) லிமிடெட் 074-814559


உல்லாசப் பிரயாணத்துறை அமைச்சு

## இலங்கை உல்லாசப் பிரயாணத்துறை மற்றும் முகாமைத்துவ நிர்வாகம்

யாழ்ப்பாணம் செய்மதிப் பாடசாலை

### *ஹோட்டல் வரவேற்பு, ஹோட்டல் பராமரிப்பு, முகாமைத்துவ அடிப்படை கற்கை நெறிகள் - 2002*

பின்வரும் அடிப்படைக் கற்கை நெறிகள் இலங்கை உல்லாசப் பிரயாணத்துறை மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனத்தால் நடத்தப்படும் யாழ்ப்பாண செய்மதிப் பாடசாலை ஆரம்பம் ஓகஸ்ட் 2002 முடிவில்.

| *கற்கை நெறிகள்* | *காலம்* | *கட்டணம்* |
|---|---|---|
| ஹோட்டல் வரவேற்பு | 5 மாதங்கள் | ரூ. 600x5 மாதங்கள் |
| ஹோட்டல் அறைகள், பொது இடங்கள் பராமரிப்பு | 5 மாதங்கள் | ரூ.650x5 மாதங்கள் |

மேலும் பதிவுக் கட்டணமாக 500/= ரூபாவும், பரீட்சைக் கட்டணமாக 250/= ரூபாவும் அறவிடப்படும்.

*தகைமைகள்:*

கல்விப் பொதுத் தராதரத்தில் (சாதாரண தரம்) இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் மூன்று திறமைச் சித்திகளுடன் கணிதம் மற்றும் ஆங்கில மொழியில் சித்தியும்.

*வயது:* 2002 ஆவணி 10இல் 17-23இற்கும் இடைப்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.

*விண்ணப்பப் படிவங்கள் பெற்றுக்கொள்ளப்படும்* **இடம்:**

உப அதிபர்,
செய்மதி சிலோன் ஹோட்டல் பாடசாலை,
இல.15, மணியம் கட்டடம்,
சிறாம்பியடி ஒழுங்கை, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

*விண்ணப்ப முடிவு திகதி:* 2002 ஆவணி 10

நிறைவேற்றுப் பணிப்பாளர்,
இலங்கை உல்லாசப் பிரயாணத்துறை மற்றும் ஹோட்டல் முகாமைத்துவம்,
78, காலி வீதி, கொழும்பு - 03.

(6421)

# தமிழ்த் தேசியத்துக்கு நான் விரோதமானவன் அல்லன்!

## அமைச்சர் மகேஸ்வரன் உரை

கொழும்பு,ஜூலை28

நான் தமிழ்த் தேசியத்திற்கு எதிரானவன் அல்லன. தமிழீழ விடுதலைப் புலிகளுடன் நல்லுறவைக் கொண்டுள்ளேன். அண்மையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வனையும் ஏனைய துறைத் தலைவர்களையும் வன்னியில் சந்தித்துப் பேசினேன். அவர்கள் என்னை அன்புடன் வரவேற்று உபசரித்து உணவு படைத்தனர்.

- இப்படி இந்து சமய விவகார அமைச்சர் தி.மகேஸ்வரன் நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் கூறினார். சபை ஒத்திவைப்பு வேளையின் போது சிறப்புரிமைப் பிரச்சினை ஒன்றைக் கிளப்பினார் அமைச்சர் மகேஸ்வரன்.

"நான் ஒரு தமிழன் எனக்குள்ளும தமிழ் உணர்வுகள் உண்டு. ஆனாலும் சிறிதுகூட தமிழனுக்குரிய பண்புகள் எதுவுமே இல்லாத சிலருக்கு எங்களுடைய உறவு எரிச்சலை மூட்டியுள்ளது.

இனவிரோத, தேச விரோத பத்திரிகை ஒன்று கடந்த 17 மாதங்களாக உண்மைக்கு மாறான செய்திகளை வெளியிட்டு வருகின்றது. அந்த மஞ்சள் பத்திரிகையின் உரிமையாளர்களுக்கு பொறாமையும் அரிப்பும் ஏற்பட்டுள்ளன. இதனால் என்னைப் பற்றித் தவறான செய்திகளை வெளியிடுகின்றனர். திட்டமிட்டே என்னை அகௌரவப்படுத்தும் வகையில் இப்படியான செய்திகளை வெளியிடுகின்றனர். இது பதிவுசெய்யப்பட்ட பத்திரிகை. இதன் உரிமையாளர் இந்த சபையின் கௌரவ உறுப்பினர்களில் ஒருவர்.

இப்பத்திரிகையின் முன்னாள் ஆசிரியர் பத்திரிகைத் தர்மத்தைப் பேணிப் பத்திரிகையை நடத்தினார். ஆனால் அவர் திட்டமிட்டுக் கொலை செய்யப்பட்டார். இவரது கொலைக்குப் பின்னணியில் யார் இருந்து செயற்பட்டனர் என்பது எல்லோருக்கும் தெரிந்த விடயம். இவர்கள் மேலும் பல கொலைகளுக்குக் காரணகர்த்தாக்களாக இருந்துள்ளனர்.

நான் தமிழத் தேசியத்துக்கு விரோதமானவன் என்றும் - புலிகள் என்னைக் கண்டித்துள்ளனர் எனறும் - செய்திகளை வெளியிட்டுள்ளனர். இது எனக்குத் திட்டமிட்டே அபகீர்த்தி ஏற்படுத்தும் ஒரு சதிச்செயல்.

அண்மையில் நான் புலிகளின் அரசியல்துறை பொறுப்பாளர் தமிழ்ச்செல்வனையும் அவரின் உதவியாளர்களையும் சந்தித்துப் பேசினேன். என்னை அன்புடன் வரவேற்றனர்; நல்ல விருந்து படைத்தனர் இப்படியான அறுசுவை உணவை என்றும் மறக்கமுடியாது. நான் தமிழ்த் தேசியத்திற்கு விரோதமானவனாக இருந்தால் அவர்கள் என்னை அப்படி வரவேற்றிருகக மாட்டார்கள்.

தேசியப் பத்திரிகை என்று கூறிக்கொண்டு இனவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடும் பத்திரிகைக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படவேண்டும - என அமைச்சர் மகேஸ்வரன் குறிப்பிட்டார். பத்திரிகையின் பெயரையும் சபையில் தெரிவித்தார்.

அமைச்சர் மகேஸ்வரன் தன் பேச்சின்போது ஈ.பி.டி.பி. தலைவர் டக்ளஸ் தேவானந்தா மீது பல்வேறு குற்றங்களைச் சுமத்தி ஆவேசமாகப் பேசினார். ஆனால், அவை அனைத்தும் நாடாளுமன்ற நிகழ்ச்சிப் பதிவேடான 'ஹன்சாட்'டில் இருந்து நீக்கப்படும் என்று சபாநாயகர் அறிவித்தார். (ஒ)

## சிறப்புரிமைப் பிரச்சினையை கிளப்பினார் அமைச்சர் ரவி

வர்த்தக வாணிபத்துறை, நுகர்வோர் பாதுகாப்பு அமைச்சர் ரவி கருணாநாயக்க நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் சிறப்புரிமைப் பிரச்சினை ஒன்றைக் கிளப்பினார்.

"நான் சபையில் இல்லாத வேளையிலும் சபைக்கு வெளியிலும் எதிர்க்கட்சி உறுப்பினர்களான அனுரா பண்டாரநாயக்கா, மங்கள சமரவீர ஆகியோர் என்னைத் தரக்குறைவாகப் பேசி உள்ளனர். நான் எதையும் பொறுப்பின்றிப் பேசமாட்டேன். அப்படியே பேசினாலும் ஆதாரம் இன்றிப் பேசமாட்டேன்.

எனது கல்வி, தராதரம் பற்றியும் பேசி உள்ளனர். எனக்குச் சகல தகுதிகளும் உண்டு. ஆனால் குறை கூறியவர்களுக்கு அந்தத் தகுதிகளும் தராதரமும் இருக்கின்றதா என்பதுதான் சந்தேகம்" - என்றார் அவர்.

இந்தச் சந்தர்ப்பத்தில் எதிர்க்கட்சியின் பக்கம் இருந்து பலரும் கூச்சல் இட்டனர். கெட்ட வார்த்தைப் பிரயோகங்களைச் செய்தனர். ஆளும் தரப்பிலும் விட்டுக்கொடுக்கவில்லை.



தமது பங்கைச் சிறப்பாகச் செய்தனர். இதனால் சபை சில நிமிடங்கள் அல்லோலகல்லோலப்பட்டது.

இதனால் அநாவசியமான சொற்பிரயோகங்கள் அனைத்தையும் பதிவேட்டில் இருந்து நீக்கும்படி சபாநாயகர் உத்தரவிட்டார். இதன்பின்னர் சபை வழமைக்குத் திரும்பியது. (ஒ)

### வரணி முகாமுக்கு முன்பாக

# கொடிகாமம் - பருத்தித்துறை வீதி பொதுமக்கள் பாவனைக்குத் திறப்பு

தென்மராட்சி,ஜூலை28

ஐந்து வருடகால இடைவெளியின பின்னர் வரணி முகாமுக்கு முன்பாக உள்ள கொடிகாமம் - பருத்தித்துறை வீதி பொதுமக்களின் பாவனைக்குத் திறந்துவிடப்பட்டுள்ளது.

முகாமின் முன்பாக 200 யார் தூரம் வரையான வீதி கடந்த 5 வருடங்களாக மூடப்பட்டிருந்தது. அதற்கு மாற்றாக படையினரால் பொதுமக்களின் காணிகள் ஊடாக அமைக்கப்பட்ட தற்காலிக மணல் வீதியூடாகவே பொதுமக்களும், படையினரின் கனரக வாகனங்களும் இதுவரை போக்குவரத்தினை மேற்கொண்டன.

52ஆவது படையணித் தலைமை அலுவலகம் இப்பகுதியில் உள்ளதால முகாம் நுழைவாயில் பகுதி மட்டும் தடை செய்யப்பட்டு நுழைவாயிலுக்கு முன்பாகப் பாதை அமைக்கப்பட்டு போக்குவரத்து இடம்பெற்றது.

கடந்த 2000ஆம் ஆண்டு தென்மராட்சிப் பிரதேசத்தில் இடம்பெற்ற யுத்தத்தின் பின்னர் பிரதான முகாமுக்குச செல்லும் வீதியில் 150 மீற்றர்கள் தூரம் வரையான பகுதி தடைசெய்யப்பட்டு சுமார் 800 மீற்றர்கள் தூரத்திற்கு தற்காலிக பாதை அமைக்கப்பட்டு போக்குவரத்துகள் இடம்பெற்றன.

கடந்த வருடம் மழை வெள்ளம் காரணமாக தற்காலிக பாதை மூடப்பட்ட வேளையிலும் இந்தப் பிரதான வீதிக்கு அருகில் தற்காலிக பாதை அமைக்கப்பட்டு மாணவர்கள் மட்டும் அப்பாதையூடாக நடந்து செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

கடந்த வாரம் தென்மராட்சிப் பிரதேசத்திற்குப் பாதுகாப்பு அமைச்சின செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ விஜயம் செய்தபோது இவ்வீதியைத் திறந்துவிடுமாறு விடுத்தவேண்டுகோளையடுத்து விரைவில் பொதுமக்களின் பாவனைக்குத் திறந்துவிடப்படுமென உறுதியளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ-117)

## அடுத்த மாதம் 7ஆம் திகதி எழுதுமட்டுவாழில் மறியல்

தென்மராட்சி பிரதேச செயலக நடவடிக்கைகளை ஸ்தம்பிக்கச் செய்யும் மறியல் போராட்டம் ஒன்றினை எழுதுமட்டுவாழ் பிரதேச மக்கள் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் ஏழாம் திகதி மேற்கொள்ளவுள்ளதாகக் கூறப்படுகிறது.

அன்று காலை 7.00 மணிக்கு சாவகச்சேரி பஸ் நிலையத்திலிருந்து ஊர்வலமாகச் செல்லும் மக்கள் பிரதேச செயலகத்தைச் சென்றடைந்து அங்கு ஊழியர்கள் உட்செல்லாது தடுத்து மறியல் போராட்டத்தினை நடத்தவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

எழுதுமட்டுவாழ் வடக்கு, தெற்கு, ஒட்டுவெளி, கரம்பகம் மக்கள் நலச் சேவைகள் சங்கத்தினர் இந்த மறியல் போராட்டத்திற்கான ஏற்பாடுகளைச் செய்துவருவதாக அறியமுடிகிறது.

இப்பிரதேசத்திலுள்ள தமது வீடுகளைப் பார்வையிட அனுமதிதரும்படிகோரி கடந்த ஏப்ரல் மாதம் தொடக்கம் பிரதமர் ரணில் விக்கிரம சிங்க, பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன, புனர்வாழ்வு அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தன, இந்து சமய கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன், யாழ்.மாவட்ட கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள், யாழ்.அரச அதிபர், தென்மராட்சி பிரதேச செயலர் ஆகியோருக்கு மகஜர்கள் அனுப்பியும் இதுவரை எதுவித பயனும் கிடைக்காததாலேயே தமது கோரிக்கையை வலியுறுத்தி இப்போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக சங்கச் செயலர் இ.தெய்வேந்திரம் பிள்ளை தெரிவித்தார். (ஒ-117)

## இலங்கையின் இளம் சந்ததி பற்றி ரணில் - பவல் சந்திப்பில் ஆராய்வு

யுத்தம் ஒன்றுக்குப் பழக்கப்பட்டுவிட்ட ஒரு நாட்டில் சமாதானம் ஏற்பட்டதும் இளைய பரம்பரையினரை எதிர்காலத்தை நோக்கி எவ்வாறு வழிநடத்துவது என்பது குறித்து அமெரிக்க ராஜாங்க அமைச்சர் கொலின் பவலும், இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும்கூடி ஆராய்ந்தனர்.

அமெரிக்க ராஜாங்க அமைச்சில் இவர்களுக்கிடையே சந்திப்பு நடைபெற்றது.

இலங்கையின் சமாதான முயற்சி குறித்து பிரதமருக்குப் பாராட்டுத் தெரிவித்த கொலின் பவல், இலங்கைக்கு அமெரிக்காவிடமிருந்து கிடைக்கவேண்டிய விசேட உதவிகள் எவை என்பதைக் கேட்டார்.

சமாதான முயற்சிகளுக்கு இதுவரை அமெரிக்கா வழங்கிய உதவிகளுக்கு நன்றி தெரிவித்த பிரதமர் ரணில், எதிர்காலத்திலும் அவ்வாறே உதவிகள் வழங்கப்படும் என்று எதிர்பார்ப்பதாகச் சொன்னார்.

இலங்கை இப்பொழுது பிழையற்ற திசையில் பயணப் பாதையில் - காலடி வைத்திருப்பதால் முன்னரைக்காட்டிலும் கூடுதலாக உதவியும் ஒத்துழைப்பும் வழங்க அமெரிக்கா நடவடிக்கை எடுக்கும் என்று கொலின் பவல் கூறினார். (ஒ)

# பிரதான சாட்சி கிழக்குத்திமோரில்; குடும்பஸ்தருக்கு பிணை அனுமதி!

கொழும்பு,ஜூலை28

அவசரகாலச் சட்டத்தின் கீழ் கடந்த 4 வருடங்களாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள குடும்பஸ்தர் ஒருவருக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் பிணை அனுமதி வழங்கியுள்ளது.

மேற்படி நபரிடம் குற்ற ஒப்புதல் வாக்கு மூலம் பெற்றதாகக் கூறப்படும் பொலீஸ் அதிகாரி கிழக்குத் திமோரில் அமைதிப் பணியாற்றும் பொலீஸ் குழுவில் இடம்பெற்று அங்கு சென்றிருப்பதால் விசாரணையைத் தொடர்ந்து நடத்துவதில் தாமதம் ஏற்படுகின்றது எனச் சுட்டிக்காட்டப்பட்டதை அடுத்தே பிணை அனுமதி வழங்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்கள் நிஹால் ஜயசிங்க, எஸ்.சிறிபவன் ஆகியோர் முன்னிலையில் இந்தப் பிணை மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே பிணை அனுமதி வழங்கப்பட்டது.

சாவகச்சேரியைச் சேர்ந்தவரும் தற்போது களுத்துறைச் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவருமான கனகசபை ஜெயபாலன் என்பவரே பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டவராவார்.

இவரின் சார்பில் அவரது மாமனாரான வவுனியா குறுமன்காட்டைச் சேர்ந்த கந்தையா சந்திரசேகரன் என்பவர் சட்டத்தரணி ஜெயதேவி இராயப்பு ஊடாக இப்பிணை விண்ணப்பத்தைத் தாக்கல் செய்திருந்தார்.

1993ஆம் ஆண்டு மே மாதம் 22ஆம் திகதி சாவகச்சேரியில் வைத்துக் கைது செய்யப்பட்ட ஜெயபாலனின் மீது கைக்குண்டு ஒன்று வைத்திருந்ததாக - அவசரகாலச் சட்ட விதிகளின் கீழ் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அரசுத் தரப்பு சாட்சிகள் நீதிமன்றுக்கு சமுகமளிக்கத் தவறிய காரணத்தால் இதுவரையில் வழக்கு விசாரணை ஆரம்பமாகவில்லையென்று பிணை மனுவில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

மனு மீதான விசாரணையின் போது சட்டமா அதிபரின் சார்பில் ஆஜராகியிருந்த அரச சட்டவாதி எம்.நவாவி எதிரியின் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தைப் பதிவுசெய்த உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் சமாதானப் பணிக்காக கிழக்குத்திமோருக்கு அனுப்பப்பட்டிருப்பதால் வழக்கு விசாரணை ஆரம்பிக்கமுடியாமல் இருக்கின்றது என்று தெரிவித்தார்.

பிணை மனுவை ஆதரித்து வாதாடிய சட்டத்தரணி ஸ்ரீகாந்தா - நீண்ட காலமாக எதிரி தடுத்து வைக்கப்பட்டிருப்பதையும் அவர் இரண்டு பிள்ளைகளின் தந்தை என்பதையும் சுட்டிக்காட்டினார்.

அதையடுத்து எதிரி பிணையில் செல்வதைத் தாம் ஆட்சேபிக்கவில்லையென அரச சட்டவாதி தெரிவித்தார். பத்தாயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும் அரசாங்க அலுவலர் ஒருவர் உட்பட இரண்டு நபர்களின் ஆள்பிணையிலும் எதிரிக்குப் பிணை அனுமதி வழங்கப்பட்டது.

மாதத்தின் இறுதி ஞாயிற்றுக் கிழமையில் வவுனியா பொலீஸ் நிலையத்தில் அவர் ஆஜராகி கையெழுத்திட வேண்டுமெனவும் உத்தரவிடப்பட்டது. (ஒ)

## வெங்காய விலை வீழ்ச்சி!

அரியாலை,ஜூலை28

யாழ்குடாநாட்டில் வெங்காயத்தின் விலை திடீரென வீழ்ச்சியடைந்துள்ளது.

திருநெல்வேலி, மருதனார்மடம் போன்ற சந்தைகளில் வெங்காயம் கிலோ 20 ரூபா முதல் 27 ரூபாவரை விற்கப்படுகின்றது.

குடாநாட்டில் விவசாயிகள் அதிகளவில் வெங்காயத்தைப் பயிரிட்டதாலேயே வெங்காயத்தின் விலை வீழ்ச்சியடைந்தது என்று தெரிவிக்கப்பட்டது. இந்த வெங்காய விலை வீழ்ச்சியால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று கூறப்படுகிறது. (ம-17)

# இளைப்பாறுதல் கிடைக்கும்

**அருட்சகோதரர் ம.கான்ஸ்யோவர்**

**ஞாயிறு நற்பிரசாதம்**

எம் மத்தியில் பல கூக்குரல்கள் எழும்புகின்றன. அவ்வாறே மத்.2:17-18இல் அன்று "ராமாவிலே ஒரு குரல் கேட்கிறது. ஒரே புலம்பலும் பேரழுகையுமாய் இருக்கிறது. இராக்கேல் தன் குழந்தைகளுக்காக அழுது கொண்டிருக்கின்றாள். ஆறுதல் பெற அவள் மறுக்கிறாள். ஏனெனில், அவள் குழந்தைகள் அவளோடு இல்லை"

இன்று பல இராக்கேல்கள் எம்மிடையே கூக்குரல் எழுப்பி அழுது புலம்பிக்கொண்டிருக்கிறார்கள். இவற்றால் பலவிதமான துன்பங்கள், இழப்புக்கள், சோகங்கள். எங்கள் குழந்தைகள் எங்கே? அவர்களுக்கு என்ன நடந்தது? ஏன் இந்த நிலை? இவை இன்னும் பல கேள்விகளை எழுப்புகின்றன. இறைவன் ஒருவர் இருக்கிறாரா? இல்லையா? எனவும் பல அழுதங்காக்கள் எழுந்தவண்ணம் உள்ளன. "இவற்றுக்கு விடையில்லையோ தேவா?" என நாம் ஏங்கித் தவிக்கின்றோம்.

இந்நிலையில் "கண்ணுக்குக் கண்; பல்லுக்குப் பல்" என்று ஒற்றைக்காலில் நிற்கும் மனித குலத்திற்கு ஓர் அருமையான பாடம் எசாயா 53:7 "கொல்வதற்காக இழுத்துச்செல்லப்படும் ஆட்டுக்குட்டியைப் போல் அவர் வாய்திறக்காதிருந்தார்". யேசு இந்த மனித வர்க்கம் தாம் செய்யும் அக்கிரமங்களை நினைத்து, நொந்து வருந்தி மனம் மாறும்வரை எனக்கு இளைக்கப்படும் துன்பங்களை ஏற்பேன் என்னும சளாலோடு வாய்திறக்காது, வன்மம் வைக்காது துன்பத்தை ஏற்றார் யேசு.

இங்கு துன்பம் என்று நாம் கருதுவதுதான் கடவுளின் இரக்கம் எடுக்கும் வடிவங்களாகும். துன்பம் மனித அறிவுக்கு அப்பாற்பட்ட மறைபொருளாக இருக்கிறது. எல்லாச் சமயங்களும் துன்பத்தை நீக்கவே வழிதேடுகின்றன. கிறிஸ்துவின் படிப்பினை பலரைப் கவர்ந்துள்ளது. குறிப்பாக கிறிஸ்துவின் பாடுகள் மற்றும் மரணம் பலருக்குக் கலங்கரை விளக்கமாக இருக்கிறது.

வேதாகமத்தில் முதற்பகுதியில் வரும் யோபுவின் வாழ்வை நோக்குகின்றபோது அவர் தமது உடைமைகள், புதல்வர், புதல்வியர், சொத்துக்கள், ஏன் உடல் நலத்தையும் இழந்தார். இந்நிலையில் "உன் இரகசியமான பாவங்கள்தான் உன் துன்பங்களுக்குக் காரணம்" என்றனர் யோபுவின் நண்பர்கள்.

"தாயின் கருவிலேயே ஏன் நான் இறக்கவில்லை?" என யோபு கேட்கின்றான். "கடவுள் என்னைக் கைவிட்டு விட்டாரா?" யோபுவின் உள்ளரங்கக் கேள்வி இது. "இத்துன்பம் எவ்வளவு காலம் நீடிக்கும்" இது யோபுவின் ஏக்கம். "என் மீட்பர் வாழ்கின்றார் என்றும் இறுதியில் மண்மேல் எழுவார் என்றும் நான் அறிவேன்" இது யோபுவின் இறுதியான உறுதியான முடிவு. அவர் கொண்ட கடவுள் நம்பிக்கை வீண்போகவில்லை. மீண்டும் இறையாசி நிறைவாகப் பெற்று மகிழ்வுடன் வாழ்ந்தார்.

தோல்விகள் எல்லாம் வெற்றியின் தூண்கள். துன்பங்கள் எல்லாம் வெற்றியின் படிகள். இரு கைகளாலும் பெரும் மகிழ்வோடு இன்பத்தை ஏற்கும் நான் துன்பத்தையும் ஏற்றால் என்ன. இறைமகன் யேசுவே எம் இன்னல்களை தன்மேல் சுமந்து கொள்ளவேண்டியதாயிற்று. "நம் அக்கிரமங்களுக்காகவே அவர் நொறுக்கப்பட்டார்."

இவ்வாறு பலவீதமான துன்பங்களுக்குள் அமிழ்ந்து வாழ்க்கையில் விரக்தி அடைந்திருக்கும் எங்களைப் பார்த்து யேசு மத் 11:28 இல் "பெருஞ்சுமை சுமந்து சோர்ந்திருப்பவர்களே எல்லாரும் என்னிடம் வாருங்கள். நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருகிறேன்" என அழைக்கின்றார். எரேமியா 13:16-17இல் ஆண்டவர் "நீ அழுகையை நிறுத்து. கண்ணீர் வடிக்காதே உன் எதிர்காலத்தை பொறுத்த மட்டில் நம்பிக்கை உண்டு" என உரைத்து நம்பிக்கையோடு எதிர்காலத்தை நோக்கியிருக்குமாறு கூறுகின்றார்.

எனவே, எங்கள் துன்பங்களை ஏற்று இளைப்பாறுதல் தரும் ஆண்டவர் இயேசுவிடம் ஆறுதல் பெற்று எதிர்காலத்தை நோக்கியிருப்போம். ★

## மனமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்

எங்களுடைய நிறுவனத்தில் பயிலுகின்ற மாணவிகளான

**செல்வி பா.ஆன் துஷ்யந்தி**

**செல்வி பா.ஸ்டெல்லா கிறிஷாந்தி**

ஆகிய இருவரையும் பரதநாட்டிய அரங்கேற்றம் காணும் இன்றைய நன்னாளில் பரதக் கலையில் மேன்மேலும் சிறப்புற வேண்டுமென மனமாரப்பாராட்டி வாழ்த்துகின்றோம்.

நியூ வீணாகானம்
இசை மன்ற
ஆசிரியர்கள், மாணவர்கள்.

*16/2, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.* (6457)



## முதலாவது பிறந்ததின வாழ்த்து

28-07-2002



HAPPY BIRTHDAY

### செல்வன் சிவகாந்தன் திலக்ஷிகன்

**(திலக்)**

இல.14, விதானையார் வீதி, சுண்டுக்குளியைச் சேர்ந்த
சிவகாந்தன் - சுலோஜனா தம்பதிகளின்

**செல்வப் புதல்வன் திலக்ஷிகன்**

இன்று 28.07.2002 ஞாயிற்றுக்கிழமை, தனது முதலாவது பிறந்ததினத்தைத் தமது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவரை அன்பு அப்பா, அம்மா, அம்மப்பா, அம்மம்மா, அப்பம்மா, கிருபன் மாமா, சுதா அத்தை, குபன் மாமா(ஜேர்மன்), குகன் மாமா, குமார் மாமா, சுசி அத்தை, வரன் மாமா, சுதா அத்தை (சுவிஸ்), சுவந்தி அத்தை, பௌசி மச்சான் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஆஞ்சநேயர் அருள்பெற்று பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் நலமுடன் வாழ வாழ்த்துகின்றார்கள்.

14, விதானையார் வீதி,
சுண்டுக்குளி.

தகவல்:
பாலகுகன் (மாமா).

(6435)



## இரண்டாவது ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

### கணேசபிள்ளை கஜேந்திரன்

*(வவுனியா மத்திய மகாவித்தியாலய உயிரியல் விஞ்ஞான பீட மாணவன்)*

**தோற்றம்: 1981.05.07** **மறைவு: 2000.07.28**

திதி: 06.07.2002 திரயோதசி

இரண்டு ஆண்டுகள் கடந்தாலும் இதயத்தில் உம் நினைவு என்றென்றும் நின்றே நிறைந்திருக்கும்.
உமது பிரிவு எம் நெஞ்சை வாட்டுகின்றதே!

உங்கள் பிரிவால் துயருறும்:
அப்பா, அம்மா, தம்பிமார்,
உறவினர், நண்பர்கள்.

*புதிய செம்மணி வீதி, நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்.* (6450)


## சுட்டிபுரத்தில் புதிய முகாம்

வடமராட்சி கிழக்கு,ஜூலை28

வரணி - நாவற்காடு வீதியில் சுட்டிபுரம் ஆலயத்திற்கு அண்மையில் புதிய முகாம் ஒன்றினை அமைக்கும் முயற்சியில் படையினர் ஈடுபட்டுள்ளதாகத் கூறப்படுகிறது.

(ஓ-182)

## மருதங்கேணியில் வீதி புனரமைப்பு

வடமராட்சி கிழக்கு,ஜூலை28

மருதங்கேணிப் பிரதேசத்தில் மாமுனை தொடக்கம் கட்டைக்காடு வரையுள்ள கடற்கரை வீதி செப்பனிடப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வீதி அபிவிருத்தித் திணைக்கள அதிகாரிகள் கடந்த புதக்கிழமை அப்பகுதிக்குச் சென்று செப்பனிடப்படவேண்டிய பகுதிகளைப் பார்வையிட்டுத் திரும்பியுள்ளதாகக் கூறப்படுகிறது.

(ஓ-182)

## விதை நெல் தேவைப்படும் விவசாயிகளுக்கு!

வலிகாமம் தெற்கு,ஜூலை28

கால போகத்துக்குத் தேவையான விதை நெல்லைப் பெற்றுக் கொடுக்க உடுவில் கமநல கேந்திர நிலையம் நடவடிக்கை எடுத்துள்ளது.

எதிர்வரும் காலபோக நெற்செய்கைக்கு விதை நெல் தேவைப்படும் விவசாயிகள் பற்றிய விவரம் இப்பகுதிக்குட்பட்ட விவசாயிகள் சம்மேளனங்களூடாக திரட்டப்பட்டு வருகின்றன.

விதை நெல் தேவையான விவசாயிகள் ஒரு புசலுக்கு 200ரூபா வீதம் முற்பணம் செலுத்தி பதிவு செய்து ஜூலை 29ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்குமாறு கமநல கேந்திர நிலைய பெரும்பாக உத்தியோகத்தர் வி.இளங்குமரன் அறிவித்துள்ளார்.

(ஓ-152)

## ஒப்படைக்கப்பட்ட பாடசாலைகளின் விவரம் தேவையாம்

குருநகர்,ஜூலை28

யாழ்மாவட்டத்தில் இராணுவத்தின் பயன்பாட்டில் இருந்து மீண்டும் பாடசாலை நிர்வாகங்களிடம் ஒப்படைக்கப்பட்ட பாடசாலைகள் பற்றிய விவரங்களைத் தமக்கு உடனடியாக அனுப்பிவைக்குமாறு யாழ்.மேலதிக மாகாணக்கல்விப் பணிப்பாளர் அலுவலகம் சகல வலயக்கல்விப் பணிப்பாளர்களையும் கோரியுள்ளது.

இராணுவத்தால் விடுவிக்கப்பட்டுள்ள பாடசாலைகளுக்கு புனரமைப்புக்கான நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டியிருப்பதனால் இவ்விவரங்கள் அவசியம் தேவையாக உள்ளது எனவும் இக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ஓ-51)

## மின்சாரசபைக்கு பொருள்கள் வந்தன

தென்மராட்சி,ஜூலை28

இலங்கை மின்சாரசபைக்கான மின் கம்பிகளும், மின்மாற்றிகளும் முகமாலையூடாக நேற்றுமுன்தினம் வாகனங்களில் எடுத்துவரப்பட்டதாகக் கூறப்படுகிறது.

தென்மராட்சிப் பகுதிக்கு மின்சாரம் வழங்குவதற்கு இவை பயன்படுத்தப்படலாமென நம்பப்படுகிறது.

(ஓ-117)


## தேவை

சிற்றுண்டி தயாரிப்பாளர் உடன் தேவை.

தொடர்பு:

**அமுல் கிறீம் ஹவுஸ்,**

ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(C/23088)



## தேவை

★ தொலைபேசி இயக்குநர்

★ இலத்திரனியல் தொழில்நுட்பவியலாளர்

*தொடர்பு:*

பிரகாஷ் எலக்ரோனிக்ஸ்,
பஸ்நிலையம்,
பருத்தித்துறை.

*T.P.: 070 - 213060.*

(6447)


# குளப் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிப்பதில் தாமதமாம்

வலி.வடக்கு,ஜூலை28

யாழ்.மாவட்டத்தில் "நியாப்"பின் கீழ் ஆரம்பிக்கப்படுவதாக இருந்த புனரமைப்புப் பணிகள் எதுவும் இன்று வரை ஆரம்பிக்கப்படாமையை இட்டு பொதுமக்கள் மத்தியில் அதிருப்தி காணப்படுகின்றது.

"நியாப்" திட்டத்தின் கீழ் யாழ்.மாவட்டத்தில் உள்ள பல பிரதேச செயலாளர் பிரிவுகளில் குளங்கள் புனரமைத்தல் சம்பந்தமான திட்டங்கள் முன்வைக்கப்பட்டு அரச அங்கீகாரமும் கிடைக்கப்பெற்று இருந்தது.

இன்னும் மூன்று மாதகாலத்தினுள் மழைக்காலம் ஆரம்பமாகிவிடும் அதன் பின்னர் குளம், அணைகள் சம்பந்தமான எந்தவொரு வேலைத்திட்டத்தையும் முன்னெடுத்துச் செல்லமுடியாதிருக்கும்.

ஆகவே மழைக்காலம் ஆரம்பமாவதற்கு முன்னர் உரிய வேலைத் திட்டங்கள் பூர்த்தியடைய வேண்டுமாக இருந்தால் இன்னும் காலத்தை இழுத்தடிக்காது குளங்களை புனரமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட வேண்டுமென திட்டங்கள் அறிவிக்கப்பட்ட பிரதேச செயலகப் பிரிவுகளில் உள்ள மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

(ஓ-86)


## 31ஆம் நாள் நினைவலைகள்

அன்னை மடியில் 18 - 05 - 1979



அம்பாளின் திருவடியில் 28 - 06 - 2002

### செல்வி சிவகுலம் சியாமினி (பபி)

*அன்பும் பண்பும் நிறைந்த இனிய பேச்சை நாம் கேட்கமுடியாதே!*
*"அப்பா! அம்மா!! அக்கா!!!" எனப் பாசமுடன் அழைக்கும் குரல் எங்கே?*
*புன்முறுவல் பூத்த அழகிய மதிவதனத்தை எப்படி மறப்போம்?*
*கற்பூரம் போல் தன்னைத் தியாகம் செய்த உத்தமி மறைந்தாளோ?*
*பொன் போன்ற மேனியிலே பொல்லாத நோய் புகுந்ததுவோ?*
*திக்கெட்டும் தேடுகின்றோம் கண்ணீர் சொரிய*
*நயினை அம்பாள் திருவடியை விரும்பிச் சேர்ந்தனையோ!*

*உன் நினைவால் வாடும்:*
அப்பா, அம்மா,
சகோதரிகள், அத்தான்.

*மயிலணி, சுன்னாகம்.* (6279)



## மரண அறிவித்தல்கள்

திருமதி

### லக்ஷ்மிஅம்மாள் பஞ்சாட்சரக்குருக்கள்

வண்ணார்பண்ணை, ஐயனார் கோயிலடியைச் சேர்ந்த திருமதி லக்ஷ்மிஅம்மாள் பஞ்சாட்சரக்குருக்கள் 26.07.2002 வெள்ளிக்கிழமை இரவு சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் ஐயனார் கோயிலடி ஸ்ரீ மங்கள மகாகாளி அம்பாள் தேவஸ்தான முன்னாள் தர்மகர்த்தா பஞ்சாட்சரக்குருக்களின் அன்பு மனைவியும், மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் தேவஸ்தான சபாபதிக் குருக்கள் (அப்பாக் குருக்கள்) - வாலாம்பிகை அம்மாள் தம்பதிகளின் அன்பு மகளும் இரத்தினசபாபதிக் குருக்கள், பஞ்சநாதக்குருக்கள், பாலச்சந்திரக்குருக்கள், பூர்ணானந்தக்குருக்கள், கமலாம்பாள், சவுந்தரநாயகி (அம்மாலு அம்மா), அம்மணி அம்பாள் ஆகியோரின் அன்புச் சகோதரியும், அமிர்தகடேஸ்வரன், சசீதரன், முரளீதரன், அம்சாகினி, கார்த்திபாயினி, ஞானலட்சுமி, சிவகௌரி ஆகியோரின் வளர்ப்புத் தாயாரும் யாழினி, வதனி, தமிழினி ஆகியோரின் பாட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.07.2002) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பையன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*14/1, ஐயனார் கோயில் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.* (6445)

தகவல்:
சி.அமிர்தகடேஸ்வரன்
(மகன்)

### செல்வன் அருமைநாயகம் பிரதீப்

மீசாலை கிழக்கு, மீசாலையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வன் அருமைநாயகம் பிரதீப் 26.07.2002 வெள்ளிக்கிழமை கனடாவில் அகால மரணமானார்.

அன்னார் அருமைநாயகம் - சுசீலா தம்பதிகளின் (கனடா) மூத்த புதல்வனும் சிம்லா, சந்தீப், சிந்தியாவின் அன்புச் சகோதரனும் தம்பிராசா - பொன்னம்மா தம்பதியரின் பேரனும் குணநாயகம் - மகாதேவி (கனடா), இராஜநாயகம், தவகுருதேவி (கரவெட்டி), செல்வநாயகம், நேசமலர் (கொழும்பு), ஸ்ரீலங்கநாயகம், அஜித்தா (கனடா) அவர்களின் பெறாமகனும், பத்மகாந்தன் புனிதாவின் பாருமகனும், சுரேஜன் (கனடா), சுஜேதன் (கனடா), சகிலா (கனடா), சுகந்தன் (கொழும்பு), சுதன் (கனடா), விஜிதன், புரேக்கா, சசிதன், சர்மிளா, சுதாசன், சிறோனிக்கா (கனடா), டானிக்கா (கனடா) ஆகியோரின் உடன்பிறவாத அன்புச் சகோதரனும், ராஜகுரு (கனடா); சுதாநிதி (கொழும்பு), கௌரி (கனடா), சஞ்சித், துஷிக்காவின் அன்பு மைத்துனரும், அபிரா (கனடா), மயூரா (கனடா) ஆகியோரின் மாமனாரும், அக்ஷரா, கிரிஷின் சித்தப்பாவுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.07.2002) ஞாயிற்றுக்கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
த.இராஜநாயகம்,
(பெரியதந்தை) கரவெட்டி,
க. பத்மகாந்தன்,
(மாமன்) மீசாலை.

*மீசாலை கிழக்கு, மீசாலை.* (6446)





உலக வங்கியின் பிரதிநிதிகள் குழுவொன்று நேற்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்தது. அந்தக் குழுவினர் யாழ்.பல்கலைக்கழகத்திற்கு விஜயம் செய்த போது எடுக்கப்பட்ட படங்கள் இவை. முதலாவது படத்தில் யாழ்.மேலதிக அரச அதிபர் து.வைத்திலிங்கம், யாழ்.பல்கலைக்கழக உப வேந்தர் பொ. பாலசுந்தரம்பிள்ளை, உலக வங்கியின் உப தலைவர் பிரட்ஹேர்பாட் ஆகியோரும், இரண்டாவதுபடத்தில் உலக வங்கி அதிகாரிகளான நரேஷ் துரைசுவாமி, நிக் பில்கிரிம் மற்றும் மருத்துவ பீடாதிபதி செல்வி வசந்தி அரசரட்ணம் ஆகியோரும் காணப்படுகின்றனர். *(படம்:தேவராஜன்)*


## பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் - பளை

## விசேட பொதுக்கூட்டம்

மேற்படி சங்கத்தின் சகல பொதுச் சபைப் பிரதிநிதிகளுக்குமான விசேட பொதுக்கூட்டம் *நாளைமறுதினம் (30.07.2002) செவ்வாய்க் கிழமை முற்பகல் **10.30மணியளவில்*** சங்கத்தலைவர் திரு.க.புவனேந்திரம் அவர்களின் தலைமையில் பளை காரியாலய மண்டபத்தில் நடை பெறவுள்ளது. **இக்கூட்டத்துக்கு சகல பொதுச் சபை பிரதிநிதிகளையும் தவறாது சமுகந்தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.**

திரு.க.புவனேந்திரம் தலைவர்.
திரு.கி.தவராஜா செயலாளர்.
(6460)



## யாழ்ப்பாணத்தில் தமிழகப் பேராசிரியர்களின் இந்துமத பேருரை

இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம், நல்லூர் கந்தசுவாமி ஆலய முன்றிலில் நாளை (29.07.2002) திங்கட்கிழமை மாலை 5.00மணிக்கு, **இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சர் மாண்புமிகு தியாகராஜா மகேஸ்வரன் தலைமையில்** தமிழகத்தில் இருந்து வருகைதந்துள்ள திருச்சிராப்பள்ளி சிதம்பரப்பிள்ளை மகளிர் கல்லூரி முனைவர் பேராசிரியர் கே.சேகர் எம்.ஏ, எம்.பில், பீ.எச்டி அவர்களும், துணை முதல்வர் பேராசிரியை ந.விஜயசுந்தரி எம்.ஏ, எம்.பில் அவர்களும் *"அர்த்தமுள்ள இந்துமதம்"* என்னும் பொருளில் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளனர்.

இந்நிகழ்ச்சியில் கொழும்பு இராமகிருஷ்ணமிஷன் தலைவர் சுவாமி ஆத்மகனானந்தாஜீ மகராஜ் அவர்கள் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு ஆசியுரை வழங்கவுள்ளார்.

யாழ்.குடாநாட்டிலுள்ள இந்துமத சிவாச்சார்யர்கள், குருமார்கள், அனைத்து ஆலய அறங்காவலர்கள், இந்து நிறுவன தலைவர்கள், பல்கலைக்கழக அனைத்துப் பேராசிரியர்களும் விரிவுரையாளர்களும் மாணவர்களும், அறநெறிப்பாடசாலை ஆசிரியர்கள், அனைத்து வலய பாடசாலைகளின் ஆசிரியர்கள், மாணவ மாணவிகள், அனைத்து இந்துப் பெருமக்கள் மேலும் யாழ்.நகரிலுள்ள திணைக்களங்களைச் சார்ந்த அதிகாரிகள் மற்றும் வர்த்தக நிறுவனங்களின் உரிமையாளர்கள் யாபேரும் இந்த அரிய இந்துமதத்தினுடைய தாற்பரியங்களை சொற்பொழிவுகளூடாக வழங்கவுள்ள தமிழகப் பேராசிரியர்களின் உயர்ந்த கருத்துக்களை கேட்டுப் பயன்பெறுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கடந்தவாரம் கொழும்பில் இடம்பெற்ற ஆடிவேல் நிகழ்ச்சிக்காக தமிழகத்தில் இருந்து உரையாற்ற வருகைதந்துள்ள இவ்வறிஞர்களின் பல சொற்பொழிவுகள் எமது இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சினால் இராமகிருஷ்ணமிஷன் மண்டபத்திலும், ஏனைய ஆலயங்களிலும் இடம்பெற்றபோது மண்டபம் நிறைந்த இந்து சமய ஆர்வலர்களின் அமோக பாராட்டினைப் பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

இந்த அரிய சந்தர்ப்பம் யாழ்.குடாநாட்டிலுள்ள சகல பகுதிகளிலுமுள்ள இந்து, சைவ பெரியோர்களுக்கும், மாணவர்களுக்கும் ஏனையவர்களுக்கும் கிடைத்தற்கரிய வரப்பிரசாதமாகும்.

எனவே தவறாது சகல இந்துப் பெருமக்களும் இச்சமயப் பேருரை நிகழ்ச்சியில் கலந்து பயன்பெறுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

***குறிப்பு:-*** சொற்பொழிவு நிகழ்வு முடிவடைந்த பின்னர் சகல இடங்களுக்கும் போக்குவரத்து வசதி செய்யப்பட்டுள்ளது.

க.பரமேஸ்வரன்
செயலாளர்,
இந்து சமய விவகாரங்கள் அமைச்சு
(C-23096)


## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜூலை28

குப்பிளான் விக்னேஸ்வரா மகா வித்தியாலயத்தின் அபிவிருத்தி சம்பந்தமான கலந்துரையாடல் ஒன்று நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கனடா பல்கலைக்கழக விரிவுரையாளர் சி.கணேசலிங்கம் இந்த நிகழ்வில் விருந்தினராகக் கலந்துகொள்வார். (எ-133)

☆ ☆ ☆

யாழ்ப்பாணம்,ஜூலை28

மக்கள் நலன்புரிச் சங்கமும், படையணிகளும் ஏற்பாடு செய்துள்ள கலந்துரையாடல் ஒன்று இன்று காலை 9 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

முதலுதவிச் சேவை, வீதிப்போக்குவரத்து பாதுகாப்புச் சேவை, தென்பகுதி கல்விச் சுற்றுலா மற்றும் சங்கத்தின் ஏனைய செயற்பாடுகள் குறித்து இந்தக் கலந்துரையாடலில் விளக்கமளிக்கப்படும் என்றும்-

பாடசாலைகளில் மேற்படி விடயங்களுக்குப் பொறுப்பான ஆசிரியர்கள் இதில் கலந்துகொள்ளவேண்டும் என்றும் - அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## யாழ்.ஆஸ்பத்திரிக்கு உலக வங்கிக்குழு இன்று விஜயம்

யாழ்ப்பாணம்,ஜூலை28

யாழ்ப்பாணத்திற்கு நேற்று வருகை தந்த உலக வங்கிக்குழுவினர் இன்று யாழ்.போதனாவைத்திய சாலைக்கு விஜயம் செய்யவுள்ளனர்.

இன்று காலை 9 மணிக்கு விஜயம் செய்யும் இந்தக்குழுவினர் வைத்தியசாலையில் இடம்பெறும் கலந்துரையாடல் ஒன்றில் பங்குபற்றுவர். (எ-15)

## வைத்தீஸ்வராவில் 'நெஞ்சுறுத்தும் கானல்'

யாழ்ப்பாணம்,ஜூலை28

மிதிவெடி விழிப்புணர்வு செயற்றிட்டம் தொடர்பான 'நெஞ்சுறுத்தும் கானல்' எனும் நாடகம் நாளை திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியில் மேடையேற்றப்படவுள்ளது.

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் ஏற்பாட்டில் மேடையேற்றப்படவுள்ள இந்த நாடகத்தை சுவதேச அமைப்புக்களின் பிரதிநிதிகளும் பாடசாலை மாணவர்களும் பார்க்க ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (எ-3)

## கருத்துரை வழங்கல்

யாழ்ப்பாணம்,ஜூலை28

யாழ்நகர்மைய ரோட்டறக்ட் கழகத்தின் ஏற்பாட்டில் இன்று மாலை 4 மணிக்கு 'உதயன்' கேட்போர் கூடத்தில் கலந்துரையாடல் ஒன்று நடைபெறவுள்ளது.

கழக அறிமுகம் என்னும் பொருள் பற்றி ரோட்டேறியன் ஏ.ஜே.ஜி.ஜெயச்சந்திரா கருத்துரை வழங்குவார். அனைத்து ரோட்டறக்ட் கழக உறுப்பினர்களையும் கலந்துரையாடலில் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (எ)


லஷ்மி இணுவில்
இன்று முதல்
CAMERON dIa2 - LuckI1a
CHARLIES ANGELS
(காட்டிச் சித்திரம்) (ஸ்கோப்)
தினசரி: 10.30, 2.30, 6.30 (ப.நே.)

நாகம்ஸ் சுன்னாகம்
குனால், தருண், சிமோனா, ப்ரீதா தாமு நடித்த
புன்னகைதேசம்
(ஸ்கோப்)
காட்சிகள்: 11.00, 3.00, 6.30 (பு.நே.)

நிர்மலா / சங்கானை
சூர்யா, லைலா, ராஜ்கிரண் நடித்த
நந்தா
காட்சிகள்: 11.00, 2.30, 5.30 (புதியநேரம்) (C-22944)

ராஜா யாழ்ப்பாணம்.
31-ஆவது திகதிவரை
அஜித், ஜோதிகா, வடிவேல் நடித்த
ராஜா
தினசரி 10.30, 2.30, 5.30 (C/22943)


## முதலாம் வருட நினைவஞ்சலி

மலர்வு 29 - 02 - 1929



உதிர்வு 08 - 08 - 2001

### அமரர் சுப்பையா திருநாவுக்கரசு *(திருநா)*

*(ஐக்கிய வியாபாரச் சங்க ஊழியர்)*

**ஆண்டு ஒன்று ஆனபோதும் ஆறவில்லை எம்மனம்**
**ஈண்டு உங்களை நினைந்து நாம் ஏங்கியே தவிக்கின்றோம்**
**அழகான புன்சிரிப்பும் அன்பான பேச்சும் என்றும் எம்மனதில்**
**நின்று நிழலாக உங்களை நித்தம் நினைக்கச் செய்கின்றனவே!**

*இன்று (28.07.2002) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நடைபெறும்.*

*உங்கள் நினைவில்.....*
மனைவி, மக்கள், மருமக்கள், மைத்துனர், பேரப்பிள்ளைகள்.
*30/1, ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம்.* (6458)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி முருகேசு பார்வதி (பாறாத்தை)

பெரியமணல், காரைநகரைச் சேர்ந்த திருமதி முருகேசு பார்வதி நேற்று (27.07.2002) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசுவின் அன்பு மனைவியும் விநாயகமூர்த்தி, சுவாமிநாதன், பாலசுப்பிரமணியம் (பிரான்ஸ்), பரமானந்தன், பாக்கியம், மனோன்மணி, புஷ்பமலர் (பூங்கா), மங்களேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும் சீதேவி, ஜமுனா, லோகநாயகி (பிரான்ஸ்), தவமணி (போரூட்), சுப்பையா, பாலசுப்பிரமணியம், புண்ணியமூர்த்தி (கடை), காசிப்பிள்ளை ஆகியோரின் அருமை மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.07.2002) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் சாம்பலோடை மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பெரியமணல், காரைநகர்.* (6461)
தகவல்: மு.பரமானந்தன் (மகன்)

### சிவலை தர்மகுலசிங்கம்

கைதடி தெற்கைச் சேர்ந்த சிவலை தர்மகுலசிங்கம்(தர்மா) 24.07.2002 ஜேர்மனியில் அகாலமரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சிவலை மற்றும் கண்மணி தம்பதியினரின் பாசமிகு மகனும் நவரத்தினம்(உரிமையாளர்,ரட்ணம் வீடியோ-கைதடி), ப.புவனேஸ்வரி, குணசேகரம் (ஜேர்மனி), தங்கராசா(லண்டன்), தம்பிராசா(லண்டன்), இ.ஈஸ்வரி, சசிகரன்(கொழும்பு), உ.சுமதி(ஜேர்மனி), நா.ரமேஷ்வரி(ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ந.கிளி, பண்டாரி, இந்திரபாலன், வசந்தா(ஜேர்மனி), லலிதா(லண்டன்), புனிதராணி(லண்டன்), உதயகுமார்(ஜேர்மனி), நாகேந்திரம்(ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு மைத்துனருமாவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கைதடி தெற்கு, கைதடி.* 6462
தகவல்: சி.நவரத்தினம்(ரத்தினம் - சகோதரன்)

### திருமதி இரத்தினவேலு தங்கரத்தினம்

பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் கற்கோவளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இரத்தினவேலு தங்கரத்தினம் (27.07.2002) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இரத்தினவேலுவின் அன்பு மனைவியும் சசிதேவி (ஓய்வூதியர், விற்பனைத் திணைக்களம்), குகதாஸ் (முன்னாள் நீர்ப்பாசன ஊழியர்), இரதிதேவி, கலாதேவி (முன்னாள் ஊழியர் விற்பனைத் திணைக்களம்), ஜீவதாஸ் (இலங்கை மின்சாரசபை, சுன்னாகம்) கரிதாஸ் (நோர்வே), சரோஜாதேவி (முன்பள்ளி ஆசிரியை, கற்கோவளம்), ஜெயதாஸ் (பு.லோ.லி ப.நோ.கூ.சங்கம்), பரமதாஸ் (மின் இணைப்பாளர் - இந்திரதீபம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் சர்வானந்தம், ஜெயராணி, சிறிஸ்கந்தானந்தம் பாக்கியதாசன் வளர்மதி, சாமிநாயகி, ஜெயக்குமார், விமலினி, சாந்திமதி ஆகியோரின் அன்பு மாமியாரும் டிலிப்குமார், கபில்குமார், திவானி, சுஜேந்திரன், சோபனா, சுஜேந்தினி, சுதாகரன், மனோராஜ், லோஜினி, தர்ஷன், நித்தியா, சரத்பாபு, நிறூஜன், ஜிலக்ஷன், விஜுஷிகா, நிருஷாந், துஷாந்தினி, கல்யாணி, சஞ்சீவன், கௌசி ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.07.2002) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 8.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் பருத்தித்துறை வெளிச்சவீட்டு மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கற்கோவளம், பருத்தித்துறை.* (C-23092)
*தகவல்:* பிள்ளைகள். *இ.குகதாஸ் (மகன்)*

### வேலுப்பிள்ளை துரைராசா

(முன்னாள் அச்சக ஊழியர்)

அரியாலையைச் சேர்ந்த வேலுப்பிள்ளை துரைராசா அவர்கள் நேற்று (27.07.2002) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - சின்னம்மா தம்பதியினரின் அன்பு மகனும் ஞானலட்சுமியின் பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான கந்தையா - அன்னப்பிள்ளை தம்பதியினரின் மருமகனும் காலஞ்சென்றவர்களான செல்லம்மா, சரஸ்வதி, மகேஸ்வரி மற்றும் இராசதுரை ஆகியோரின் அருமைச் சகோதரனும் செல்லத்துரை, கமலாம்பிகை, காலஞ்சென்ற இராசலிங்கம் மற்றும் துரைசிங்கம், தர்மலிங்கம், காலஞ்சென்ற குணரத்தினம் மற்றும் சரஸ்வதி ஆகியோரின் மைத்துனரும் ஜெயந்தியின் அருமை மாமனாரும் லஜிதா, மேகலின் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.07.2002) ஞாயிறு மாலை 4.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*90, சுப்பிரமணிய வீதி, அரியாலை யாழ்ப்பாணம்.* (6465)
*தகவல்:* ஞானலட்சுமி *(மனைவி)*

## மீளக்குடியமர்ந்த மக்களின்

# அத்தியாவசிய தேவைகள் விரைவில் பூர்த்தியாக வேண்டும்

## உலகவங்கி உபதலைவர் யாழில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜுலை28

யாழ்.குடாநாட்டில் மீளக்குடிய மர்ந்துள்ள மக்களின் அத்தியாவசிய தேவைகள் உடனடியாகப் பூர்த்தி செய்யப்பட வேண்டியுள்ளன.

இவ்வாறான தேவைகளை இனங்காண்பதும், அவை குறித்து நடவடிக்கை எடுப்பதுமே எமது பணி.

- இவ்வாறு தெரிவித்தார் உலக வங்கியின் உபதலைவர் பிரட்ஹேர் பாட்.

நேற்றுக்காலை யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்த உலக வங்கிக் குழு வினர் யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற சந்திப்பு ஒன்றில் கலந்து கொண்டனர். இந்தச் சந்திப்பின் பின்னர் செய்தியாளர்கள் மத்தியில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

யாழ்.குடாநாட்டில் மேற்கொள்ளப்பட வேண்டிய புனரமைப்பு வேலைகளுக்கு உலக வங்கி எந்தவகையில் எப்படி உதவ முடியும் என்பதை ஆராய்வதற்காகவும், அதற்கான கருத்துக்கணிப்புக்களைப் பெறுவதற்குமாகவே இங்கு நாம் விஜயம் செய்துள்ளோம்.

மீளக்குடியமர்ந்துள்ள மக்கள் மத்தியில் கல்வி மற்றும் சுகாதார வசதிகள் பற்றாக்குறையாகவுள்ளன. ஆனாலும் நாம் இவற்றை உடனடியாக நிவர்த்தி செய்ய முடியாது.

கிராமிய மட்டத்திலும் மக்களுக்கு சிறுகைத்தொழில் மற்றும் அடிப்படை வசதிகள் தேவைப்படுகின்றன. அனைத்தையும் ஒன்றிணைத்து ஒரு பூரண அறிக்கையைப் பெற்ற பின்னரே குறிப்பிட்ட திட்டங்களைச் செயற்படுத்துவோம்.

எமது திட்டங்கள் கல்வி, சுகாதாரம், அத்தியாவசிய தேவைகள் என ஒரு குறிப்பிட்டனவாகவே அமையும் - என்றார்.

முன்னதாக பல்கலைக்கழகத் துணைவேந்தர் மற்றும் பீடாதிபதிகளைச் சந்தித்த இந்தக் குழுவினர் குடாநாட்டில் தற்போதைய நிலைமைகளைக் கேட்டறிந்து கொண்டதுடன் பீடாதிபதிகள், மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றியும் ஏனைய தேவைகள் பற்றியும் தகவல்களைச் சேகரித்துக்கொண்டனர்.

இச்சந்திப்பில் உலக வங்கியின் உபதலைவர் பிரட் ஹேர்பாட் உலக வங்கி அதிகாரிகளான நிக் பிள் கிரிம் நரேஷ் துரைசாமி மற்றும் மேலதிக அரச அதிபர் து.வைத்திலிங்கம், யாழ்பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, கலைப்பீடாதிபதி பேராசிரியர் ப.கோபாலகிருஸ்ண ஐயர் வணிகத்துறைத் தலைவர் க.தேவராஜா, மருத்துவ பீடாதிபதி வசந்தி அரசரட்ணம் விவசாய பதில் பீடாதிபதி சு.உதயதாஸ், விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் இ.குமாரவடிவேல் ஆகியோர் கலந்துகொண்டனர். (எ-8-10)

## கிளிநொச்சியில் மிதிவெடி; குடும்பஸ்தர் படுகாயம்

கிளிநொச்சி,ஜுலை28

கிளிநொச்சி, ஸ்கந்தபுரத்தில் நேற்றுக்காலை 8.30 மணியளவில் மிதிவெடி ஒன்று வெடித்ததில் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயம் அடைந்தார்.

கிளிநொச்சி - ஸ்கந்தபுரம் மணியா குளத்தைச் சேர்ந்த இரு பிள்ளைகளின் தந்தையான வீரமுத்து சத்தியசீலன் (வயது 30) என்பவரே இவ்வாறு கண்களிலும் நெஞ்சிலும் காயங்களுக்கு உள்ளாகியுள்ளார்.

காணி ஒன்றைத் துப்புரவு செய்யும் பணியில் ஈடுபட்ட அவர் மண்வெட்டியால் நிலத்தைக் கொத்திய சமயம் புதைந்திருந்த மிதிவெடி வெடித்ததாகக் கூறப்பட்டது.

காயமடைந்தவர் கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (எ-3)

### 20 ஆயிரம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு அரசியல் தஞ்சம் நிராகரிக்கப்பட்ட சுமார் 20 ஆயிரம் அகதிகள் திருப்பியனுப்பப்படவிருப்பதாகவும் -

· இந்த நடவடிக்கை மூலம் சுமார் 4 ஆயிரம் இலங்கை அகதிகள் பாதிக்கப்படுவார்கள் என்றும் -

தெரிவிக்கப்பட்டது. (ம-3)

### தமிழ்க் கைதிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கியதாக அப்பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது.

அங்கு உள்ள 199 கைதிகளில் 130 பேரின் விவரங்களை நேற்றுச் சேகரித்ததாகவும் -

எஞ்சியவர்களின் விவரங்கள் நாளை சேகரிக்கப்படவிருக்கின்றன என்றும் -

யாழ்மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் என்.ரவிராஜ் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, அனுராதபுரம் சிறைகளில் உள்ள தமிழ்க் கைதிகளின் விவரங்களையும் தாங்கள் சேகரித்து வருவதாகவும் -

அந்த விவரங்களை சட்ட மா அதிபரிடம் சமர்ப்பித்து அவர்களின் விடுதலையைத் துரிதப்படுத்தப் போவதாகவும் - அவர் மேலும் சொன்னார். (ம-3-9)

### அமைச்சர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திடீரென லண்டன் சென்றார்.

அங்கு அவர் நேற்றுப் பிற்பகலில அன்ரன் பாலசிங்கத்தைச் சந்தித்து இருமணி நேரம் கலந்துரையாடினார். சமாதான முயற்சிகளில் ஈடுபட்டுள்ள நோர்வே சமாதானக் குழுவின் ஏற்பாட்டில் லண்டனில் உள்ள நோர்வே தூதரக இல்லத்தில் இருவருக்கும் இடையிலான இந்தச் சந்திப்பு இடம் பெற்றது.

அன்ரன் பாலசிங்கத்துடன் அவரது துணைவியார் அடேல் பாலசிங்கமும் சந்திப்பில் கலந்துகொண்டார்.

நோர்வே சமாதானக் குழுவின் தலைவரும் அந்நாட்டின் பிரதி வெளிவிவகார அமைச்சருமான விடர் ஹெல்கிசன் தலைமையில் குழுவின் ஏனைய உறுப்பினர்கள் இந்தச் சந்திப்பில் பார்வையாளர்களாகப் பங்கேற்றனர்.

புரிந்துணர்வு உடன்படிக்கையின் கீழ் நடைமுறையில் உள்ள யுத்த நிறுத்தத்தைச் செயற்படுத்துவதில் உள்ள பல்வேறு விடயங்கள் தொடர்பாகவும் -

தாய்லாந்தில் ஆரம்பிக்கப்படவுள்ள நேரடிப் பேச்சுக்கான நிகழ்ச்சிநிரலைத் தயாரிப்பது தொடர்பாகவும் -

வடக்கு - கிழக்கில் இடைக்கால நிர்வாகத்தை ஏற்படுத்துவது தொடர்பாகவும் - சந்திப்பின்போது இருவரும் விரிவாக ஆராய்ந்துள்ளனர்.

இலங்கையில் சமாதான முயற்சிகளை முன்னெடுக்கும் பணிகளை மேற்கொண்டுவரும் அமைச்சர் ஒருவருக்கும் விடுதலைப் புலிகளின் சார்பில் சமாதான முயற்சிகளில் ஈடுபட்டுவரும் ஒருவருக்கும் இடையில் இடம்பெற்ற முதலாவது உயர்மட்ட நேரடிச் சந்திப்பு இதுவாகும்.

இதன்மூலம் சமாதான முயற்சிகளில் புதிய அத்தியாயம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது என்றும் -

இருவருக்கும் இடையிலான பேசசுக்கள் நல்ல சூழ்நிலையில் இடம் பெற்றன என்றும் -

நோர்வே தூதரகம் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் நேரடிக் கண்காணிப்பில் செயற்படும் சமாதான நடவடிக்கைக்கான செயலணியில் இடம்பெற்றுள்ள இரு அமைச்சர்களில் மிலிந்த மொரகொடவும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.(ம-3)

### சிப்பாயின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தச் சடலத்தை விடுதலைப் புலிகள் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுவிடம் ஒப்படைத்திருந்த நிலையில் -

சடலத்தை விசாரணைக்காக நீதிமன்றத்தில் ஒப்படைக்கும்படி சாவகச்சேரி நீதிமன்ற பதில் நீதிவான் உத்தரவிட்டுள்ளார் என்றும் அந்த செய்தி ஏஜென்ஸி மேலும் தெரிவித்தது. (ம-3)

### ஜெயலலிதாவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பருத்தித்துறை வீதியூடாக ஜெயலலிதாவின் கொடும்பாவியை இழுத்து வந்தனர்.

பின்னர் நெல்லியடி பஸ் நிலையத்துக்கு அருகில் உள்ள நாற் சந்தியில் வைத்து கொடும்பாவி தீயிட்டுக் கொளுத்தப்பட்டது.

ஊர்வலத்தில் கலந்துகொண்டோர் ம.தி.மு.க.தலைவர் வைகோவை உடனடியாக விடுதலை செய்ய வேண்டுமெனக் கோரிக்கை விடுத்தனர்.

கொடும்பாவி எரிப்பு நிகழ்வில் நூற்றுக்கணக்கானோர் பங்குகொண்டனர். (எ-173)

### பிரதமர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புஷ்ஷுடன் பேச்சுகள் நடத்தி இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கான ஆதரவைப் பெற்றுக் கொண்டார் என்றும் -

பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பக்கூடிய பல ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டார் என்றும் - கூறப்பட்டது.

பல முக்கிய பிரமுகர்களுடனும் பிரதமர் பேச்சுக்களை நடத்தியிருந்தார். (எ-3)

### காவல்துறையின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இல்லை என்று தெரிவித்து சிறைச்சாலைத் திணைக்கள அதிகாரிகள் கைதிகளை தரைப்பாதையூடாக தென்பகுதி நீதிமன்றங்களுக்கு அழைத்துச் செல்ல மறுப்புத் தெரிவித்து வந்தனர்.

அண்மையில் யாழ்ப்பாணம் வந்த சிறைச்சாலை ஆணையாளர் இங்குள்ள நிலைமைகளை ஆராய்ந்த பின்னர் தரை வழியாக கைதிகளை தெற்கே அழைத்து வர அனுமதி வழங்கியிருந்தார்.

கடந்த 12 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்தின் பின்னர் தரைவழியாக கைதிகள் தெற்குக்கு நேற்றே முதல் தடவையாக அழைத்துச் செல்லப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)


**பிற்போடப்பட்டுள்ளது**

யாழில் முதன்முறையாக நடைபெறவிருந்த
மாபெரும் சாகச நிகழ்வு

இணுவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்க அபிவிருத்தி நிதிக்காக இன்றும் (28.07.2002), நாளையும் ( 29.07.2002) நடைபெறவிருந்த சிறிகரமின் மாபெரும் சாகச நிகழ்ச்சி தவிர்க்க முடியாத காரணத்தால் எதிர்வரும் 04.08.2002 ஞாயிறு, 05.08.2002 திங்கள் ஆகிய தினங்களில் நடைபெறும்.

பழைய மாணவர் சங்கம்,
யா/இணுவில் இந்துக் கல்லூரி.

(C-23093)

**A/L 2003**
கணக்கீடு
திரு-பாலவாசன்
B.B.A. (Fm. Spl)
அலகு ரீதியான மீட்டல் வகுப்பு
Mon, Wed, Fri 6.15 - 7.15 a.m
ஆரம்பம்: 29.07.2002 - Mon.6.15 (ப.நே)
**விக்னா**
(C-23091) கல்வி நிறுவனம்.

**MURTHY**
2789
பலாலி யாழ்.சேவையில்
விளம்பரம் செய்ய
விரும்புகிறீர்களா?
☆பிறந்தநாள் ☆வர்த்தக
விளம்பரம் ☆மரண
அறிவித்தல் எதுவானாலும்
எமக்கு போன் செய்யுங்கள்.
யாழ்.- கொழும்பு பிரயாண
ஒழுங்குகள் செய்து தருவோம்.
☆ மூர்த்தி ☆
அட்வர்டைஸிங் சேவிஸ்,
தேவி அச்சக ஒழுங்கை,
யாழ்ப்பாணம். போன்:2789 (6438)

**வீடு விற்பனைக்கு**
1 1/2 பரப்புக் காணியில் புலவர் வீதி, நவாலி வடக்கில் அமைந்திருக்கும் புதிய வீடு விற்பனைக்குண்டு. தரகர்கள் தேவையில்லை.
விவரங்களுக்கு:
ஜோ.எகட்டன்
19/3, சுண்டுக்குளி மகளிர்
கல்லூரி முன் ஒழுங்கை,
சுண்டுக்குளி.
(6377)

MCS MCS MCS MCS MCS MCS MCS MCS MCS MCS MCS
324,பலாலிவீதி, யாழ்ப்பாணம் (பரமேஸ்வராச்சந்தி அருகே, மேல்மாடியில்)
**இலவசக்கணனிப்பயிற்சி**
ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அரச நிறுவனங்களை கணனிமயப்படுத்துவதில் பெரும்பங்காற்றிய எமது நிறுவனத்தினர் விசேட கணனிப்பயிற்சித்திட்டம் ஒன்றை முன்வைத்துள்ளார்கள்
பதிவுகள் 01.08.2002 இற்கு முன் நேரில்
MCS

**Career. Com Institute**
A/L 2002 பரீட்சையை எழுதி முடித்து பெறுபேற்றுக்காகக் காத்திருக்கும் மாணவர்களே!
"இதோ உங்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்" நீங்களும் aat December பரீட்சையில் Stage I பாடங்களில் விதிவிலக்கு (Exemption) பெற்றுக்கொள்ள நாம் வழிகாட்டுகின்றோம்.
மேலதிக விவரங்களுக்கு: No 79, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
அலுவலக நேரம்: 10.00 மு.ப. - 3.00 பி.ப.
05.08.2002இற்கு முன்பாக தொடர்புகொள்ளவும். விரிவுரைகள் சனி, ஞாயிறு தினங்களில் நடைபெறுகின்றன. (6455)

**நாங்க ரெடி : நீங்க ரெடியா?**
தகவல் தொழில்நுட்பத் துறையில் உங்களை இன்னும் சில படி மேலே உயர்த்துவதற்காக நாங்கள் என்றும் தயாராக இருக்கின்றோம்.
உங்களுக்காக புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன
Ms - WORD
Ms - Excel
Ms - Powerpoint
Ms - Access
Adobe Page Maker
Corel DRAW
Adobe Photoshop
Internet & E - Mail
Evening & Night classes for Government Staff
Special Classes In CIT
மேலதிக விவரங்களுக்காக:
இயக்குநர்
கணனிக் கல்லூரி
337, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்
021-3497

**இளமை மற்றும் அழகின் ரகசியம்**
விஞ்ஞான சான்று பெற்றது.
பக்க விளைவுகள் இல்லை.
பயோட்டின் - H
உங்கள் கூந்தல், சருமம் மற்றும் நகங்களின் ஊட்டத்திற்கு...
தினம் இரண்டே கேப்ஸியூல்கள்
மேலும் தலைமுடி உதிர்தல், இளநரை, மெல்லிய, உடையக்கூடிய முடி போன்றவற்றிலிருந்து முற்றாக நிவாரணம் பெற BIOTIN - H உதவுவதாக விஞ்ஞான ரீதியாக கண்டறியப்பட்டுள்ளது.
தரம்மிக்க BIOTIN - H
மக்களின் நம்பிக்கையை வென்ற துரித நிவாரணி.
(C-22928)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 28.07.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.